பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 25 செவ்வாய்க்கிழமை (09.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 103

# எமது உள்விவகாரங்களில் தலையிட ஐ.நாவை ஒருபோதும் அனுமதியோம்!

## பான் -கீ - மூன் புரிந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கிறார் பிரதமர்



கொழும்பு, மார்ச் 09

எங்கள் சிறிய நாட்டை-சிறு சனத் தொகை கொண்ட நாட்டை- அணு ஆயுதங்கள் இல்லாத நாட்டை ஐக்கிய நாடுகள் சபை ஆட்டிப்படைக்கப் பார்க்கின்றது. அதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம். செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் இதனைப்புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளார் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சை பெறுபேறுகள் மாத இறுதியில்

யாழ்ப்பாணம், மார்ச் 09

கடந்த டிசெம்பர் மாதம் நடந்த ஜி.சீ.ஈ (சாதாரண) தரப் பரீட்சையின் முடிவுகள் மாத இறுதியில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (24ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்கால மனித உரிமை மீறல்கள் விவகாரம்



# ஐ.நா வின் உதவிச் செயலாளர் நாயகம் பஸ்கோ விரைவில் இலங்கைக்கு அனுப்பப்படுவார்

## பான் - கி - மூன் அறிவிப்பு

நியூயோர்க், மார்ச் 09

இலங்கையில் போர்க்காலத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டது குறித்து விசாரிப்பது தொடர்பாக எனக்கு ஆலோசனை வழங்க நிபுணர்கள் குழு ஒன்றை நியமிப்பது சம்பந்தமான முடிவு உரிய ராஜரீக முறையில் இலங்கை ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும்.

அதன் பொருட்டு ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் லைன்பஸ்கோ விரைவில் இலங்கைக்கு அனுபப்படுவார்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐ.நாவின் செயலாளர் (24ஆம் பக்கம் பார்க்க)

## கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

கொழும்பு, மார்ச் 09

கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணையை நிறைவேற்றுவதற்காக மீண்டும் இன்று கூட்டப்படவுள்ளது.

இது தொடர்பாக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விசேட கடிதங்களும், மின்னஞ்சல் மூலமான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. (அ-சி)

# கிழக்கின் முதலமைச்சர் சந்திரகாந்தனை இந்தியா வருமாறு நிருபமா அழைப்பு



கொழும்பு, மார்ச் 09

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும், கிழக்குமாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனை (பிள்ளையானை) இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவே இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவ் நேற்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை (பிள்ளையானை) சந்தித்தார். அச்சமயம் அவரையும் இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு வெளியுறவுச் செயலர் அழைப்பு விடுத்தார் என்று, கிழக்கு மாகாண முதல்வரின் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில்!

கொழும்பு, மார்ச் 09

இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, இராணுவத்தினர் வழங்கியுள்ள தொலைபேசி வசதியை ஏற்க மறுத்துள்ளதுடன், தனது சாகும்வரையிலான உண்ணாவிரதப் (24ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டில் செயற்படும் புலிகளின் அமைப்புகள் தமது தலைவர் பிரபாகரனைத் தேடும் முயற்சியில்!

## இலங்கைத் தரப்பு கவலையுடன் இந்தியாவிடம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 09

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தேடும் முயற்சியில் வெளிநாட்டில் உள்ள அந்த இயக்கத்தின் முன்னணி அமைப்புகள் ஈடுபட்டுள்ளன எனக் கவலை வெளியிட்டுள்ள இலங்கை, அதனை இந்தியாவிற்கும் தெரியப்படுத்தியுள்ளது.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவ் உடனான சந்திப்பின்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோஹித (24ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் இன்று சிவில் அலுவலக திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 09

யாழ்.மாவட்டத்துக்கான சிவில் அலுவலகத்தின் திறப்பு விழா இன்று காலை 8.30மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் ஓ.எல்.ஆர் தேவாலயத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் இடம் பெறவுள்ளது.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரியா வைபவ ரீதியாக அலுவலகத்தைத் திறந்து வைக்க வுள்ளார்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் உட்படப் பலர் இந் நிகழ்வில் கலந்து கொள்வர்.

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த நூறு மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு செய்யப்படவுள்ளன. (ஓ-1)


## கணனி பக்க வடிவமைப்பாளர் தேவை

★ PageMaker, Coral Row, Photoshop, அச்சுக்கூட அனுபவம், திறமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
★ சம்பளம் ரூ 10,000 மேல் பேசித்தீர்மானிக்கப்படும்.
★ நேரில் வரவும்

தொடர்பு: பிள்ளையார் அச்சகம், நல்லூர், (C/565593)


## சேவை நலன் பாராட்டு



திருமதி
கமலாதேவி கணேசன்
(S.L.T.S.I)
(உபஅதிபர், யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை)

ஆரம்பக்கல்வி : யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.
உயர்கல்வி : யா/இந்து மகளிர் கல்லூரி.
ஆசிரிய முதல் நியமனம்: பு/உடப்பு தமிழ் மகாவித்தியாலயம். (15.03.1979-31.12.1982)
ஆசிரிய பயிற்சி : கோப்பாய் ஆசிரியர் கலாசாலை. (01.01.1983-31.12.1984)

**ஆசிரிய சேவை:**

கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்
(01.01.1985-30.06.1987)
யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை
(01.07.1987-08.03.2010)

கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக கல்விப்பணியில் அளப்பரிய சேவையாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லுகின்ற எமது பாடசாலை உபஅதிபர் திருமதி. கமலாதேவி கணேசன் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு அவர் சீருஞ்சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

*ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,*
*யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.* (95663)


## MEGA OFFERS @ MUSIC WORLD

| Memories (RAM) | |
|---|---|
| RAM DDR I 400 Mhz 512 Mb | 2,500.00 |
| RAM DDR II 800 Mhz 1 Gb | 2,900.00 |
| RAM DDR III 1333 Mhz 1 Gb | 3,250.00 |
| **Computer Accessories** | |
| SONY OPTICAL MOUSE | 225.00 |
| KEYBOARD | 325.00 |
| MULTI MEDIA SPEAKER | 350.00 |
| UPS BATTERY 12 V / 7A | 1,100.00 |
| FM MODULATOR | 700.00 |
| NETWORK CABLE (300m Box) | 3,750.00 |
| HARD DISC SATA 40 Gb | 2,200.00 |
| PROCESSOR FAN | 600.00 |
| **Pen Drives** | |
| Kingston 2 Gb | 1,200.00 |
| Kingston 4 Gb | 1,400.00 |
| **ADSL Routers** | |
| TP Link ADSL 1 port Router | 3,700.00 |
| TP Link ADSL 2 port Router | 3,800.00 |
| TP Link ADSL 4 port Router | 5,750.00 |
| **Scanners** | |
| Mustek USB | 5,250.00 |
| Cannon Lide 100 | 5,950.00 |
| Hp G 2410 | 7,500.00 |
| **Casing** | |
| ATX Casing | 1,350.00 |
| Power Supply 450 W | 1,250.00 |
| **Dongle** | |
| HSDPA Modem (SIM Model) 3 G D Link / Prolink (3.5 M ---> 7.2 M) | 8,750.00 |
| **PAP2 LinkSYS** | |
| PAP 2 Link SYS (No.1 Green Light) | 7,500.00 |
| **Web Cameras** | |
| AD Tech Web Camera | 1,500.00 |
| Web Camera (Normal) | 950.00 |



SONY LCD TV BRAVIO 32" Rs. 67,500.00 Only



SONY Cybershot Digital Camera 12.1 Mega pix 15,900.00 Only



SAMSUNG Digital Camera 12.2 Mega pix 14,900.00 Only



Computer Chair Rs. 2,990.00 Only



Computer Table (XXX) Rs. 2,400.00 Only

MasterCard VISA
கடனட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
விரையுங்கள் இச் சலுகை கையிருப்பு உள்ள வரை மட்டுமே

MUSIC WORLD & COMPUTERS
THE LEADING IT SUPER MARKET IN JAFFNA
141B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
musiccom27@yahoo.com / musicworld@sltnet.lk - 021 222 6554


# வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர் மூவர் நீக்கம்

## தன்னிச்சையாக தேர்தலில் போட்டியிடுவதால்

யாழ்ப்பாணம், மார்ச் 09

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாகக் குழுவில் இருந்து மூவரை நீக்கியுள்ளதாக அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற சங்கத்தின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் நிர்வாகக்குழு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பெயரால் அதன் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மூவர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுயேட்சைக்குழு வொன்றின் மூலம் போட்டியிடுவது தொடர்பில் மேற்படி சங்கத்திற்குள் எழுந்துள்ள சிக்கல் நிலை குறித்து முடி வெடுக்கும் முக மாக நேற்று சங்கத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பின்வரும் காரணங்களின் அடிப் படையில் மேற்படி மூவரும் பட்டதாரிகள் சங்கநிர்வாகப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென கூட்டத்தில் கலந்து கொண்ட பட்டதாரிகளினால் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

✱ மேற்படி மூவரும் பொதுக்கூட்டமொன்றின் மூலம் அனைத்துப் பட்டதாரிகளினதும் அபிப்பிராயங்களைப் பெறாமல் தன்னிச் சையான முடிவில் தேர்தலில் போட்டியிடுகின்றமை.

✱ சங்கத்தின் பெயரைத் தங்க ளது தேர்தல் பிராசாரங்களில் சங்கத்தின் அனுமதியின்றிபயன்படுத்தியமை-என்றுள்ளது. (ஓ-1)

# குண்டுச்சத்தம் கேட்டு பாஷையூர் மக்கள் பீதி

யாழ்ப்பாணம், மார்ச் 09

பாஷையூர் கடற்கரை வீதிப்பகுதியில் நேற்று மதியம் திடீரெனக் கேட்ட குண்டுச் சத்தத்தினால் அப் பகுதி மக்கள் பீதியடைந்தனர். அவர்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து வீதிகளில் கூடினர்.

பாஷையூர் கடற்கரை வீதியில் இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதியிலேயே குண்டுச் சத்தம் கேட்டது.

இது குறித்து இராணுவத்தினரிடம் கேட்ட போது; வெடிக்காத நிலையில் இருந்த ஒரு கைக்குண்டு வெடிக்க வைக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக அவர்கள் கூறினர்.

இதனை அறிந்த பின்னர் அப் பகுதி மக்கள் பதற்றம் தணிந்து வழமைக்குத் திரும்பினர். (ஓ-23)

# ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 09

தென்மராட்சிப்பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறும் கிராமிய வங்கி ஓய்வூதியர் தவிர்ந்த ஏனையோருக்கான மார்ச் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் அவரவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஓய்வூதிய வவுச்சர் கிடைக்காதவர்கள் 12ஆம் திகதிக்குப் பின்னர் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இதேவேளை இதுவரை உயிர்வாழ் சான்றிதழை சமர்ப்பிக்காதவர்கள் நாளை புதன்கிழமை ஓய்வூதியக் கிளையில் கையளிக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (ஓ-207)

# தில்லையம்பதியில் கோபுர கும்பாபிஷேகம்

கேண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் நூதனபஞ்சதன இராஜகோபுர பஞ்சகுண்டபஷ மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10.18மணியளவில் நடைபெறவுள்ளது. இன்று காலை 6மணிக்கு மகாகணபதி பூஜையுடன் கிரியைகள் ஆரம்பமாகி நாளையும் தொடர்ந்து நடைபெறும். கும்பாபிஷேகத்தை அடுத்து நண்பகல் 12மணிக்கு கோபுரத்தரிசனம் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்படவிருக்கின்றது. (1)

# கலந்துரையாடல்

இணுவில் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெறும் என்று கல்லூரி அதிபர் ஏ.சதானந்தன் தெரிவித்தார். (1)

# ஆடைகள் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 09

தென்மராட்சி பிரதேச மகளிர் அபிவிருத்திக் குழுவினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றியோரினால் தயாரிக்கப்பட்ட ஆடைகள் மற்றும் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறும்.

சாவகச்சேரி வர்த்தக வங்கி ஒழுங்கையில் உள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெறும் கண்காட்சிக்கு உதவிப் பிரதேச செயலர் செல்வி. இ.நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைப்பார். (ஓ-207)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி ஜெகதீஸ்வரி பத்மநேசன்

சண்டிலிப்பாய் வடக்கு, ஆவளையைப் பிறப்பிடமாகவும், கல்வளை வீதி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி பத்மநேசன் நேற்று (08.03.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-இராசமணி தம்பதிகளின் மகளும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் நாகரத்தினம் தம்பதிகளின் மருமகளும், பத்மநேசனின் (ஓய்வு பெற்ற தொலைத் தொடர்பு உத்தியோகத்தர், உரிமையாளர் சோமன்ஸ் தொலைத் தொடர்பு நிலையம்) அருமை மனைவியும், சோமதீபனின் (ஹொலன்ட்) பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவசோதி, பரஞ்சோதி மற்றும் நாகேஸ்வரி-கிருஷ்ணசாமி, ஜெயசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.03.2010) புதன் கிழமை நண்பகல் 12மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
சோ.பத்மநேசன்-(கணவர்).
தொ.பே.இல 0213219479, 0212223185.

கல்வளை றோட், சண்டிலிப்பாய். (95673)

## திருமதி. சின்னத்துரை அன்னரத்தினம்



பருத்தித்துறை பத்திரகாளி கோவில் ஒழுங்கையைப் பிறப் பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சின்னத்துரை அன்னரத்தினம் நேற்று (08.03.2010) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், சுந்தரலிங்கம், காலஞ்சென்றவர்களான சந்திரலிங்கம், திருமதி இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி அருந்தவதேவி (கனடா), விஜயாம்பிகை (கனடா), தங்கராசா ஆகியோரின் அன்பு மாமியும், கனடாவை வதிவிடமாகக் கொண்ட சுகந்தி, பழனிவதன், சந்திரகாந், சங்கீதா, அசோக்காந், அபிராமி, பிறேம்காந், மற்றும் கொழும்பை விதிவிடமாகக்கொண்ட சுகந்தன் (கொமர்ஷல் வங்கி), கஜந்தி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கனடாவைச் சேர்ந்த பிரியா, பிரியங்கா, பல்லவி, சஜீவன், சஞ்ஜய், சுட்ஷயன், ஐஸ்வர்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (09.03.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணியளவில் பருத்தித்துறையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:*
*குடும்பத்தினர்.*
தொ.பே.இல: 0776670024, 0770870098 (C/565435)


நாள் ஒன்றிற்கு 200/= வீதம் எலக்ரோனிக் தராசைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
பூபதி: 0776257896
(C/565591)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழ்க் கூட்டமைப்பின் நிலைமை....

இரண்டு நாள் விஜயமாகக் கொழும்புக்கு வந்திருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவ், தமது பயணத்தை முடித்துக்கொண்டு புதுடில்லி திரும்பிவிட்டார்.

தமது கொழும்பு விஜயத்தின் போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்படப் பல தரப்பினரையும் அவர் சந்தித்துப் பேசியிருந்தார்.

இந்தச் சந்திப்புகளில், இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை, அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களோடு நடத்திய பேச்சுகளே முக்கியமானவையாகும்.

இந்தச் சந்திப்பு அர்த்தபுஷ்டியாகவும் திருப்தி தரும் விதத்திலும் அமைந்தது என்ற சாரப்பட வெளியில் செய்திகள் தெரிவிக்கப்பட்டாலும், உண்மையில் இச்சந்திப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பலத்த ஏமாற்றத்தையும் அதிருப்தியையுமே தந்து நிற்கின்றது என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

நேற்று முன்தினம் பிற்பகலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பதற்கு முன்னர், நேற்றுமுன்தினம் காலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நிருபமாராவ் சந்தித்திருந்தார். அந்தச் சந்திப்புத் தொடர்பாக இலங்கை ஜனாதிபதியின் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பு நேற்று முன்தினம் பிற்பகலில் வெளியிடப்பட்ட சமயம், கூட்டமைப்புப் பிரதிநிதிகள் நிருபமாராவுடன் பேசிக்கொண்டிருந்தனர்.

அந்தச் செய்திக்குறிப்பில், வன்னி யுத்தத்தினால் இடம்பெயர்ந்த தமிழ் அகதிகளை மீளக்குடியமர்த்துவதில் இலங்கை அரசு கண்ட வெற்றியை இந்திய வெளியுறவுச் செயலர் விதந்து பாராட்டினார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்க் கூட்டமைப்பினர், தாங்கள் நிருபமாராவைச் சந்தித்த சமயத்தில் இந்தச் செய்திக் குறிப்பின் விவரத்தை அறிந்திருக்காவிடினும், அப்படி இலங்கை அரசை மீள்குடியேற்ற நடவடிக்கைக்காகப் பாராட்டும் தொனியில்தான் இலங்கை விஜயத்தின் போது நிருபமாராவ் நடந்துகொள்கின்றார் என்பதை முழுமையாக உணர்ந்திருந்தனர். மேற்படி சந்திப்புக்குப் பின்னர் அவர்கள் தரப்பில் கசிந்த தகவல்கள் அதனை உறுதிப்படுத்தின.

* *அகதிகள் மீள்குடியேற்றம் என்ற பெயரில் இலங்கை அரசு பண்ணும் பம்மாத்தை ஏற்றுப் பாராட்டுவது போல இந்திய வெளியுறவுச் செயலாளரின் கருத்துகள் அமைந்திருந்தன.*

* *தமிழர் தாயகப் பகுதியில் வல்வந்தமான - திட்டமிடப்பட்ட - சிங்களக் குடியேற்றம், இராணுவ ஆக்கிரமிப்பு போன்ற இலங்கை அரசின் அடாவடித்தனங்கள் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முறைப்பாடு செய்தபோது, இன்னொரு இறையாண்மை உள்ள நாட்டின் மீது இந்தியாவின் செல்வாக்கு மட்டுப்படுத்தப்பட்டதே என்ற சாரப்பட - விட்டேத்தியாக - நிருபமாராவ் பதிலளித்தார்.*

* *இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் நீதியான, நியாயமான அதிகாரப் பரவலாக்கல் கட்டமைப்பை இலங்கைத் தமிழருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு தனது சகல வலிமையையும் அழுத்தமாக இலங்கை ஆட்சியாளர்கள் மீது இந்தியா பிரயோகிக்கும் என்ற சமிஞ்ஞையை இச்சந்திப்பின்போது காட்டுவதற்கு நிருபமாராவ் தவறிவிட்டார்.*

-இப்படி இந்தச் சந்திப்பின் பெறுபேறுகள் தொடர்பில் அதிருப்தியான - ஏமாற்றகரமான - விசனமான - கருத்து நிலைப்பாடு தமிழ்க் கூட்டமைப்புத் தரப்பில் பிரதிபலிக்கப்படுகின்றது.

''எது, எப்படியென்றாலும் விடயங்கள் வெளிவிவகாரச் செயலாளருடன் அடங்கிவிடுவதில்லை. அதற்கு அப்பாலும் - மேலேயும் - அதிகார வர்க்கங்கள், பதவி நிலைகள் உள்ளன. அந்தந்த மட்டங்களில் இதைக் கையாண்டு நிலைமையை எமக்குச் சார்பானதாக மீண்டும் மாற்றுவோம்.'' - என்று நம்பிக்கை வெளியிடுகின்றார் தமிழ்க் கூட்டமைப்பின் மூத்த தலைவர் ஒருவர்.

ஆனால் இந்தியத் தரப்போ இச்சந்திப்புக் குறித்து வேறு விதமாகத் தகவல் வெளியிடுகின்றது.

''தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்கள், ஏதோ தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிவிட்டு நேரடியாக இந்தச் சந்திப்புக்கு வந்தவர்கள் போல உணர்ச்சிவசப்பட்டவர்களாக அங்கு உரையாடினார்கள். தீர்வுக்கான யோசனைத் திட்டம் குறித்து - அதன் அடிப்படை குறித்து - தமிழர் தரப்பிலிருந்தே ஏதும் முன்வைக்கப்படவில்லை; பேசப்படவில்லை. அப்படியிருக்கையில் நாம் (இந்தியத் தரப்பு)அதுபற்றி எப்படிக் கருத்தை முன்னெடுக்க முடியும்? எது, எவ்வாறாயினும் ஆட்சிப் பீடத்தில் இருக்கின்ற அரசுத் தரப்புடன் நேரடி விடயங்களில் ஈடுபட்டுத்தான் (Engage) பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று இந்தியத் தரப்பு கோடி காட்டியமை சில சமயங்களில் கூட்டமைப்புக்குப் பிடிக்காமல் போயிருக்கலாம்.'' - என்று இந்தியத் தரப்பில் இப்போது சமாதானம் கூறப்படுகின்றது.

மேற்படி சந்திப்பு தமிழ்க் கூட்டமைப்புக்குத் திருப்தி தராமல் முடிவுற்றமைக்கு யார் காரணம் அல்லது என்ன காரணம் என்பது இருந்து விட்டுப் போகட்டும். அது பிரச்சினையல்ல.

ஆனால், ஏற்கனவே இந்தியத் தரப்பின் எடுப்பார் கைப்பிள்ளையாக - கைக்கூலியாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறிவிட்டது என்ற குற்றச்சாட்டு கூட்டமைப்புக்கு எதிராக அண்மைக் காலத்தில் பரபரப்பாகப் பரப்பப்பட்டு வருகின்றது. இந்தச் சமயத்தில் இந்தியத் தரப்புடன் கூட்டமைப்பு நல்லுறவையும் இறுக்கமான பிடிப்பையும் தொடர்ந்து பேண வேண்டிய தேவை உண்டு.

# அரசியல் தீர்வைக் காண சகல சக்திகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

### யாழ்.நகரில் நடந்த மகளிர் தின விழாவில் ஜெகான் பெரேரா



யாழ்ப்பாணம்,மார்ச்9

இலங்கையில் யுத்தம் நிறைவுபெற்றுள்ள நிலையில் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் வடக்கு, கிழக்குக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையே உறவுப் பாலம் அமைக்க வேண்டிய தேவை உள்ளது. இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரெரா தெரிவித்தார்.

மகளிர் அபிவிருத்தி நிலையம் தேசிய சமாதான பேரவையுடன் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச மகளிர் தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடைபெற்று வருவதை அவதானிக்க முடிந்தது. மகளிர் தின நிகழ்வு நாட்டில் முக்கிய இரண்டு நிகழ்வுக்கிடையில் இடம்பெறுகிறது. அதில் ஒன்று நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றையது நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலாகும்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சில விடயங்களை அவதானிக்க முடிந்தது. தேர்தல் பெறுபேறுகளை ஆய்வுசெய்யும் பொழுது எமக்கு முக்கிய தகவல்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். தென்பகுதி மாற்றத்தை விரும்பாமல் அதேநிலைமை தொடர விரும்புவதை வெளிப்படுத்தியிருக்கிறது.

இன்றைய நிலைமையில் வடக்கு, கிழக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையில் உறவுப் பாலம் அமைக்கவேண்டிய தேவை உணரப்படுகிறது.

அதுமட்டுமன்றி தென்பகுதிக்குள்ளேயே உறவுப் பாலம் அமைக்க வேண்டிய நிலையும் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு பகைமை உணர்வு உள்ளது. இதனால் துருவமயப்பட்டுள்ள நிலை உள்ளது.

வடக்கின் உள்ளேயும் உறவுப் பாலம் அமைக்கப்படவேண்டும். தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையேயும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையேயும் இந்தப் பாலம் அமைக்கப்படவேண்டும்.

போர்முடிவுற்ற இப்போதைய சூழலில் அரசியல் ரீதியிலான தீர்வு எட்டப்படவேண் டும். அதற்காக தேசிய சமாதானப் பேரவை 1995 இலிருந்து செயற்பட்டுவருகிறது.

போர்முடிவடைந்த நிலையில் தேசிய சமாதானப் பேரவையைப் பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாணத்துக்கு முதன்முதலாக வந்தபோது போரின் கொடூர தாக்கத்தை உணர முடிந்தது.

அரசாங்கம் மிகச் சக்திவாய்ந்ததாக இருந்தபோதிலும் அரசியல் தீர்வு விடயத்தில் அதனால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

எனவே அரசியல் ரீதியிலான தீர்வைக்காண அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். யாழ்ப்பாணத்தில் சர்வதேச மகளிர் தினத்தை வெகு சிறப்பாக ஒன்றிணைந்து நடத்துவதற்கு ஒத்துழைத்த அனைவரும் நன்றி பாராட்டதக்கவர்களாவர். - என்றார். இந்த நிகழ்வில் மற்றும் பலரும் உரையாற்றினர். (ஒ-14)

## வடமராட்சியில் வீதி விஸ்தரிப்பு

வடமராட்சி,மார்ச் 9

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியை அகலமாக்குவதற்கான நடவடிக்கைகள் வடமராட்சி பிரதேசத்திலும்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வீதியை அகலமாக்கும் பணி வல்லைப் பாலம் தொடக்கம் புத்தூர் சந்திவரை சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதேநேரத்தில் இவ்வீதி அமைந்துள்ள வடமராட்சிப் பகுதியில் வீதியை அகலமாக்குவதற்கு வீதியின் மத்தியில் இருந்து இரு பக்கமும் தலா எட்டு மீற்றர் தூரம் அளந்து அடையாளமிடப்பட்டு வருகிறது. வீதியின் இரு பக்கமும் எட்டு மீற்றர் நீளத்துக்குள் (அகலத்திற்குள்) அகப்படும் குடியிருப்பாளர்கள் பின்நோக்கி தமது குடியிருப்புக்களை நகர்த்திக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-236)

## சண்டிலிப்பாய், கோப்பாயில் நாளை ரூ.25ஆயிரம் கொடுப்பனவுக் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்9

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தினரால் வழங் கப்பட்டுவரும் 25ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 635குடும்பங்களுக்கும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 1,934குடும்பங்களுக்கும் நாளை புதன்கிழமை வழங்கப்படும் என்று அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

நாளை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறியவர்களுக்கும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறியவர்களுக்கும் குறித்த சில இடங்களில் அனுமதிக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தேசிய அடை யாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், குடும்பப் பதிவு அட்டை, வங்கி வைப்பு புத்தகத்துடன் குறித்த இடங்களுக்குச் சென்று அனுமதிக்கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-6)

# புனித அந்தோனியாரின் திருப்பண்டம் 13ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறது

யாழ்ப்பாணம் மார்ச் 9

இத்தாலியின் பாதுவா நகரில் இருந்து புனித அந்தோனியாரின் திருப்பண்டம் இலங்கைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்தப் புனிதப் பண்டம் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படுவதாக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 13ஆம் திகதி காலை கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் அந்தோனியாரின் திருப்பண்டம் அன்று காலை 6.45 மணி முதல் மாலை வரை மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தலத்தில் பக்தர்களின் வணக்கத்துக்காக வைக்கப்படவுள்ளது.

முன்னதாக திருப்பண்டம் மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்திலிருந்து மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம் வரை பவனியாக எடுத்துவரப்படும்.

இந்த வைபவத்தில் யாழ்.மறை மாவட்டத்தின் ஆயர், குருக்கள், துறவிகள் பொது நிலையினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பின்னர் திருப்பண்டம் மாலை அங்கிருந்து பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரவு 7 மணி முதல் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிவரை பக்தர்களின் வணக்கத்துக்காக வைக்கப்படும்.

பின்னர் அங்கிருந்து காலை மன்னார் மறைமாவட்டத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வணக்கத்துக்காக வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-23-236-224)

## மல்லாவியில் ஆயிரம் வீடுகள் அமைக்க மார்ட்டின் லூதர் கிங் III நிதி உதவி

கொழும்பு,மார்ச்9

மல்லாவியில் மீளக்குடியமர்ந்த ஆயிரம் பேருக்கு வீடு அமைக்கும் திட்டம் ஒன்றை மார்ட்டின் லூதர் கிங் III முன்னெடுக்கவுள்ளார்.

அவரின் தலைமையில் குழு ஒன்று கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டு கங்காராமாவில் உள்ள விகாரையில் கலந்துரையாடலை நடத்தியது.

அஸ்கிரிய பீடத்தின் தேரர் ஒருவரின் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் தமிழ்ப்பகுதிகளின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

மல்லாவியில் ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் ஒன்றை இந்து மத அலுவல்கள் விவகார இணைப்பாளர் ஆர்.பாபுசர்மா ஏனைய மதத் தலைவர்களுடன் சேர்ந்து முன்வைத்தார்.

அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்ட குழுவினர், வீடமைப்புத் திட்டம், குடி தண்ணீர் திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தவும் சமாதான ஒன்றுகூடல் மண்டபம் அமைக்கவும் இணங்கியுள்ளனர்.

ஒவ்வொரு வீடும் 5 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவில் அமைக்கப்படவிருக்கின்றது. (1)

## நாளை

| | |
|---|---|
| மாசி 26 | 10 .03.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | தசமி |
| | பி.ப. 05.19 வரை |
| நட்சத்திரம்: | பூராடம் |
| | மாலை 06.58 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

## போருக்கு ஆயுதங்கள் பெற்றகடன் நிலுவையில்; பொருள்களின் விலையைக் குறைப்பது எப்படி?

### பிரதமர் ரட்ணசிறி எழுப்பும் கேள்வி

கொழும்பு,மார்ச்9

போரின் போது கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதத் தளபாடங்களுக்காகவும்வெடிபொருள்களுக்காகவும்செலுத்த வேண்டிய கடன் நிலுவையில் உள்ளதால் பொருள்களின் விலையை குறைக்கமுடியாது எனப் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது யுத்தம் இல்லாததால் மக்கள் பொருள்களின் விலையை குறைக்க முடியும் என எதிர்பார்க்கின்றனர். ஆனால் யுத்தம் இல்லாவிடினும் பணத்தைச் சேமிக்க முடியாது உள்ளது. வரியைக் குறைத்து பொருள்களின் விலையையும் குறைக்க முடியாது. தற்போது இருக்கும் கடனை திருப்பிச் செலுத்தவேண்டியுள்ளதே அதற்குக் காரணம் என்கிறார்.(50-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. செ.பிரசாத்

(AFA UK), H.N.Dip in Accountantcy, Dip. in Management, MAAT)

அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு உவகை கொண்டு, பகவானின் அருளால் மேன்மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று வாழ்கவென உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
திரு.திருமதி அசோக்குமார்,
திருவேந்தன், தயாசாந்தி. (95671)

## KANDY AQUARIUM
## கண்டி அக்கூறியம்

கண்டியில் இருந்து நல் இன ரோசாக்கன்றுகள் மற்றும் சகல விதமான பூக்கன்றுகளும் மிகவும் மலிவான விலைக்கு உங்கள் இடத்திற்கு கொண்டு வந்து தரப்படும்.

ரோசா பெரிது ரூபா 75.00
பேபி ரோஸ் ரூபா 50.00

(மற்றைய பூக்கன்றுகளும் மலிவான விலைக்கு)

விவரங்களுக்கு:
**0714624452 (ரஞ்சன் - யாழ்)**
**0715218078 (சன்ஜய - கண்டி)**

மற்றும் எம்மிடம் சகல விதமான வளர்ப்பு மீன்களையும் மிகவும் மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மீன் தொட்டிகளும் உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு.

இல.81,கண்டி வீதி.
(பழைய பூங்கா வீதி நேர் முன்பாக)
தொ.பே.இல.0776569845

(95669)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### வேலன் மாணிக்கம்

[ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், முன்னாள் தலைவர் - பாரதி சனசமூக நிலையம் - சேவைக்காலம் 45வருடங்கள்]

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12.01.1940 | 09.03.2009 |

உனது உதிரத்தை நமக்கேயிட்டாய்
சலியாத உழைப்போடு நித்தம் நித்தம்
சரித்திரம் படைத்தாய்
நம் சமூக மக்கள் எமது மண்ணில்
ஒன்றாக வாழ வேண்டும் என்று
அயராது உழைத்தாயே.

மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை. (95653)

பாரதி சனசமூக நிலையமும்,
பாரதி விளையாட்டுக் கழகமும்,
மயிலிட்டி வடக்கு மக்களும்.

## மரண அறிவித்தல்



### அபிராம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

யாழ்ப்பாணம், புகையிரத நிலையத்தடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அபிராம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (07.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அபிராம்பிள்ளை-தங்கம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும், றொசம்மா (சின்னம்மா), காலஞ்சென்றவர்களான அக்கினேஸ், திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், லில்லியின் அன்பு கணவரும், காலஞ்சென்ற சிமித் (சந்திரன்) மற்றும் ருமி, சுசி, வசந்தி, விஜி, கெனடி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோ, ரசு, ராசேந்திரம், சேஸ்பியர் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜன், தர்சா, சரிதா, பிரசன்னா, அன்பு, சுகு, றஜி, சதீஸ், மிதுனா, வெலின்ரன், சரிக்சன் ஆகியோரின் பேரனும், லேயாவின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.03.2010) செவ்வாய்க்கிழமை மாலை 3மணிக்கு அடைக்கல மாதா அன்னை ஆலயத்தில் இறுதித்திருப்பலியுடன் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

99/3, ஸ்ரேசன் லேன்,
யாழ்ப்பாணம். (95672)

தகவல்:
பிள்ளைகள்.
தொ.பே.0215218966

## அனலைதீவில் ஒரு கிலோ கடலுணவு ரூபா 200 மட்டுமே!

குருநகர், மார்ச் 09

அனலைதீவின் கிழக்குக் கடலில் பிடிக்கப்படும் சகல கடல் உணவுகளும் கிலோ 200ரூபா வீதம் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை அனலைதீவின் மேற்குக் கடற் பிரதேசத்தில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் உள்ளூர் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இந்திய மீனவர்களின் றோலர் படகுகள் இரவு நேரங்களில் இங்கு வருவதால் அவர்களின் வலைகள் நாசம் செய்யப்படுகின்றன.

அதேவேளை கிழக்குக் கடலில் புளியன்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடையிலுள்ள கடற்பரப்பில் அனலைதீவு மீனவர்களின் பட்டி வலைகளில் சிக்கும் கடலுணவுகளை இப்பிரதேசத்தில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் வேறுபகுதி மீனவர்கள் திருடிச்செல்வதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-ரி-51)

## 300 பேருக்கு சிக்கன அடுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்.பிரதேச செயலக பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 300 பயனாளிகளுக்கு சிக்கன அடுப்புக்களும், 30 பயனாளிகளுக்கு கருவாடு தயாரிக்கும் சூரிய உலர்த்திகளும் வழங்கப்பட்டுள்ளன.

மின் சக்தி எரிபொருள் அமைச்சின் கீழ் இயங்கும் நிலைபெறுதகு வலு அதிகாரசபையினரால் இந்த அடுப்புகளும் உலர்த்திகளும் வழங்கப்பட்டன. என்று யாழ். பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-1-23)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் மார்ச் 9

வண்ணார்பண்ணை இளையதம்பி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் திருமதி.வ.கதிரேசபிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ். கல்வித்திணைக்கள பாடசாலை வேலைகள் பொறியியலாளர் ஜி.சிவபாலன் பிரதம விருந்தினராகவும், தொழில்நுட்பவியலாளர் என்.காலவர்ணன், கிராமசேவையாளர் வி.சுரேஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஒ-1-267)

## தவறிவிட்டது

சிமியோன் கியோமர் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (720811316V )சாரதி அனுமதிப்பத்திரமும் யாழ்.மாநகரசபைக்குள் தவிறிவிட்டன.கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு.0773151659

எமது அன்புக்குரிய மாணவ மணிகளே
## லாலா
## நீல சலவைத் தூள்
வெண்மையான ஆடைகளுக்கு பாவனை செய்து பாருங்கள். இயற்கையான தூய்மையான வெண்மைதரும். பாவித்து பாருங்கள். பாவித்து பாருங்கள்.
லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.

## மணமகள் தேவை

28 வயதுடைய, இந்து கௌரவ குடும்பம் ஐரோப்பாவில் பிரஜா உரிமை உடைய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை:
E.mail : Thavaraja77@yahoo.com

## காணி தேவை

ஏ-9 வீதியில், கொடிகாமத்திற்கும் பரந்தனுக்கும் இடையில் நல்ல தண்ணீர் உள்ள இடத்தில் 3-6 ஏக்கர் காணி உடன் தேவை.
தொடர்பு: 0777557971

## வீடு விற்பனைக்குண்டு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் இருபாலைக்கு செல்லும் வீதி [illegible] 4 பரப்பிற்கு 2 குடி [illegible] காணியில் அமைந்துள்ள 2 வீடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0774289824, 0778091558

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02.10.1943 | 07.02.2010 |

திருமதி
### சின்னம்மா (தவம்) கிட்டிணன்

07.02.2010 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்ப விளக்கின் செய்தி கேட்டு உடன் வீட்டில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இன்னும் பல வழிகளில் உதவி புரிந்து இறுதி கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (09.03.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"அறிவாலயம்",
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி. (92172)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10 | 20 |
| ★ | ★ |
| 10 | 03 |
| ★ | ★ |
| 1940 | 2009 |



அமரர்
### வரப்பிரகாசம் செபஸ்தியாம்பிள்ளை

(அந்தோனிப்பிள்ளை N.S.R லொறி ஓட்டுநர்)

மறக்க முடியவில்லை உம் முகத்தை
நினைக்க முடியவில்லை உம் பிரிவை
உறங்கு முடியவில்லை உம் நினைவால்
உறவென்றால் உனைவிட யாருமில்லை
சிலநொடி சிரிப்பு எமை சிலையாக்கி விட்டதே
சில நொடி பிரிவு தானா? எமை
சிதறடித்து விட்டதப்பா...

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (95672)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை குட்டிப்பிள்ளை

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குட்டிப்பிள்ளை நேற்று (08.03.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா, றோஸ்மலர், துரைசிங்கம், இராசமலர், காலஞ்சென்ற முருகேசு, மற்றும் சறோ, நாகராசா, செல்வராசா ஆகியோரின் அருமைத் தாயாரும், புஸ்பமலர், முருகேசு, சித்திரா, துரைசிங்கராசா, நேசமலர், சிவராஜா, காந்திமதி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (09.03.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகளிர் கல்லூரி மேற்கு வீதி,
உடுவில், சுன்னாகம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தைக் கதிகலங்க வைத்த டெங்கு நோய் இப்போது கட்டுப்பாட்டுக்குள்!

## யாழ். மாநகர சபை முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.மார்ச் 9

யாழ். மாநகரசபையினர் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, கடந்த நவம்பரில் பரவ ஆரம்பித்த டெங்கு நோயின் தாக்கம் தற்போது பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்து கொண்டிருப்பதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. யோ. பற்குணராசா விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இதில் அவர் மேலும் தெரிவித்துள்ள தகவல்கள் வருமாறு

டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் அனுசரணையுடன் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி 10 இலட்சம் ரூபாவை வழங்கியிருந்தார். இந்நிதியைப் பயன்படுத்தி மேலதிக ஆளணியினரை ஈடுபடுத்தி வடிகால்கள், வாய்க்கால்கள் சுத்திகரிப்புச் செய்யப்பட்டதுடன் உரிமையாளர்களற்ற வளவுகளில் காணப்பட்ட செடிகள், பற்றைகள் வெட்டப்பட்டன. மேலும் 21கி.மீ நீளமான வடிகால்களைத் துப்புரவு செய்வதற்காக யூ.என்.டி.பி. நிறுவனம் நிதி வழங்கியது. புகையூட்டுவதற்கு தேவையான மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட போதும் கொழும்பிலிருந்து 92ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து கொள்வனவு செய்யப்பட்டு டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது.

மேலும் மக்களிடம் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திய மாநகர சபையின் சுகாதாரப் பணியாளர்கள்,தமது வதிவிடங்களைத் துப்புரவு செய்த பொதுமக்கள்,தொண்டு நிறுவனங்கள், போதனா வைத்தியசாலையினர்,யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் பங்களிப்பும் டெங்கு எதிர்ப்பு நடவடிக்கையில் முக்கியத்துவம் பெற்றிருந்தன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-ரி)

## 'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் சங்கானைப் பட்டினம் வளம் பெறவுள்ளது

'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக சங்கானைப் பட்டினப் பிரதேசம் பல்வேறு வகைகளில் அபிவிருத்தி செய்யப்பட்டு வளம் பெறவுள்ளது.

இதற்காக 200 மில்லியன் ரூபாவை இலக்கு வைத்து திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுழிபுரம் பிரதேச சபை நிர்வாக அதிகாரி க.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சேவையில் முப்பத்தி மூன்று வருடங்கள் வேலைகள் அத்தியட்சகராகவும் தொழில்நுட்ப அதிகாரியாகவும் சேவையாற்றி ஓய்வுபெற்ற து.சிவனேசராசாவின் மணிவிழா நிகழ்வுகள் பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்றன. இவ்விழாவிலேயே நிர்வாக அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசாங்க வேலையென்பது சுலபமான காரியமல்ல. அதிலும் நியமனம் முதல் ஓய்வூதியம் வரை நேர்மை-நிதானம்- பயபக்தி- விசுவாசம் என்பன முறையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அம்சங்களாகும். இவற்றை முறையாகக் கைக்கொண்டு பணி ஆற்றிய செயல்வீரன் துரையப்பா சிவனேசராசா - என்றார்.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பிரதேசசபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி விழாநாயகனான து.சிவநேசராசாவுக்கு மாலையணிவித்து பரிசில்களை வழங்கிப் பாராட்டுரை நிகழ்த்தினார். ஊழியர் நலன்புரி சங்க பொருளாளர் க.பிள்ளையார் சிறப்புரையாற்றினார்.-சிரேஷ்ட நூலக சேவகர் ந.அருணகிரிநாதன் வாழ்த்துரை வழங்கினார். உள்ளூராட்சி உதவியாளர்கள் பாராட்டு வழங்கினர். (04-302)

## அருள்நந்தி வித்தியாலய மைதானத் திறப்பும் மெய்வன்மைப் போட்டியும்

யாழ்ப்பாணம்.மார்ச் 9

அச்சுவேலி-தோப்பு அருள்நந்தி வித்தியாலய புதிய மைதானத்திறப்பு விழாவும், மெய்வன்மைப் போட்டியும் நாளை புதன்கிழமை பி.ப 1.30 மணியளவில் பாடசாலையின் புதிய மைதானத்தில் பாடசாலை அதிபர் மு.ராஜவரோதயம் தலைமையில் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்விற்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்புவிருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல், அச்சுவேலி தேசிய சேமிப்புவங்கி முகாமையாளர் சி.நந்தகுமார், 'சொண்ட்' நிறுவன இணைப்பாளர் ந.விமல்கிருஷ்ணா, அச்சுவேலி மேற்கு கிராம அலுவலர் வி.கோபாலதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (50)

## சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி உப அலுவலகத்துக்கு புதிதாக மின்னிணைப்பு

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி உபஅலுலகத்துக்கான மின்இணைப்பு வழங்கும் நிகழ்வு அவ்அலுவலக பொறுப்பதிகாரி தங்கவேல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சாவகச்சேரி மின்சாரசபை அத்தியட்சகர் அன்ரன் ஞானப்பிரகாசம் கலந்துகொண்டு மின்னிணைப்பை ஆரம்பித்து வைத்தார். இம்மின்னிணைப்பு வைபவத்தில் பிரதேச படைமுகாம் பொறுப் பதிகாரி பி.ஜி.எஸ்.ஜெயசூரியாவும் கலந்துகொண்டார். இவ்வைபவத்தில் சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் வே.சிவராஜலிங்கமும், பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி, வரணி இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை அதிபர் கா.கந்தசாமி மற்றும் மீசாலை வீரசிங்கம் வித்தியாலய அதிபர் வே. விநாயகமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். (50-122)




## வந்தது மின்மாற்றி நீங்கின சிரமங்கள்

வடமராட்சி, மார்ச் 9

அல்வாய் கிழக்கு-புலோலி வடமேற்கு கிராமங்களின் மின் விநியோகத்திற்கென புதிய மின் மாற்றி ஒன்றை தெருமுடி மடத்தடி-தம்பசிட்டி வீதியில் இலங்கை மின்சார சபையினர் நிறுவியுள்ளனர்.

இப்பகுதியில் மின்மாற்றி நிறுவப்படாமையினால் அக்கிராமங்களுக்கான மின் விநியோகம் பல ஆண்டுகளாக வலுக் குறைந்த நிலையிலேயே இருந்து வந்தது. அதனால் மின் பாவனையாளர்கள், குறிப்பாக மாணவர்கள் இரவு நேரத்தில் படிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டி ருந்தனர்.

புதிய மாற்றி நிறுவப்பட்டதையடுத்து கிராமத்திற்குச் சீரான, வலுவான மின்சாரம் கிடைத்து வருகிறது. இதனால் மின் பாவனையாளர்களுக்கும், மாணவர்களும் இருந்து வந்த குறைபாடு நீங்கியது. (04-236)

# இன, மத பேதங்களைக் கடந்து அனைத்து தொல்லியல் சின்னங்களையும் பாதுகாக்க வேண்டும்

## தொல்பொருள் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர் தெரிவிப்பு

இனமத வேறுபாடுகளின்றி பழமைமிக்க அனைத்து வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொல்பொருள் மையங்கள் என்பவற்றைப் பாதுகாப்பது தொல்பொருள் திணைக்களத்தின் பெரும் பொறுப்பாகும்.

இவ்வாறு வடமாகாண தொல்பொருள் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஜெயந்த விஜயவர்த்தன தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக உதயனுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இனமத வேறுபாடுகளைக் கடந்து வடபகுதியிலுள்ள தொல்லியல் மையங்கள், புராதன வரலாற்றுப் பொக்கிஷங்கள் என்பவற்றை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எமது திணைக்களம் மேற்கொண்டுவருகிறது.

அந்த வகையில் வடபகுதியிலுள்ள வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாக்கும் நடவடிக்கையில் நாம் இறங்கியுள்ளோம்.

பௌத்த விகாரைகளை மட்டுமே பாதுகாக்கவும், புனரமைக்கவும் எமது திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயம் நிலவிவருகின்றது.

இது முற்றிலும் தவறான அபிப்பிராயமாகும். கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தின் திருத்த வேலைகள் அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு எமது திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எமது திணைக்களத்துக்கு நிதி நெருக்கடி உள்ளது. எனவே ஒரே நேரத்தில் பல இடங்களில் எமது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருக்கிறது.

நிதி கிடைக்கப் பெறும்போதும் வழிபாட்டு மையங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (04-14)

## மாணவிக்கு சைக்கிள் அன்பளிப்பு

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரால் அண்மையில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பாடசாலை மாணவி ஒருவருக்கு லுமாலா பெண்கள் சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டது.

லண்டனில் வசிக்கும் சிறீந்திரன் இந்திராதேவி என்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இத்துவிச்சக்கர வண்டியை மேற்படி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த.கந்தையா, லயன்ஸ் கழகங்களின் ஆளுநர் லக்ஷ்மன் விஜயசிங்க ஆகியோர் இணைந்து வழங்கியிருந்தனர்.

வறுமைக் கோட்டில் உள்ள இம்மாணவி கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மாணவியாவார். (50-122)

# நகரை அண்டிய பகுதிகளில் முளைக்கும் திடீர் மரக்கறி விற்பனை நிலையங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

தென்பகுதியில் இருந்து வியாபாரிகளால் குடாநாட்டுக்கு எடுத்துவரப்படும் மரக்கறி வகைகள் யாழ.நகரை அண்டிய



வெவ்வேறு இடங்களில் வைத்துப் பரவலாக வைத்து விற்கப்படுகின்றன.

யாழ்.நகரில் வேம்படி வீதிச் சந்தி, ஆரியகுளம் சந்தி மற்றும் நல்லூர் ஆலயச் சுற்றாடல் போன்ற இடங்களில் வைத்தே இந்த மரக்கறி வகைகள் விற்கப்படுகின்றன.

தம்புள்ளையில் இருந்து எடுத்துவரப்படும் மரக்கறி வகைகளே கூடுதலாக இவ்வாறு விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது.

சந்தைகளில் மட்டுமே விற்கப்பட்டு வந்த மரக்கறி வகைகள் இப்போது வீதியோரங்களிலும் விற்பனைக்கு வந்துள்ளதால் அலுவலகங்களில் பணி முடிந்து வீடுகளுக்குச் செல்பவர்கள் இத்தகைய திடீர் மரக்கறி விற்பனை நிலையங்களில் மரக்கறி வகைகளைப் பெருமளவில் கொள்வனவு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.' (04-224)

# பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலய பெருவிழாவில் பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள்


யாழ்ப்பாணம், மார்ச் 9

பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்தப் பெருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு புனிதரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர்.

பாஷையூர், குருநகர், நாவாந்துறை, மண்டைதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை மற்றும் மன்னார் போன்ற பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் இப்பெருவிழாவில் கலந்துகொண்டதாக அங்கிருந்து திரும்பிய மக்கள் தெரிவித்தனர்.

பக்தர்களின் வசதிகருதி ஆலயச் சுற்றாடலில் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன.

அதேசமயம் பக்தர்களின் நலன்கருதி வியாபாரிகள் சிலர் இங்கிருந்து சிற்றுண்டிகள் மற்றும் குளிர்பானங்கள், பிஸ்கட்டுகள், வாழைப்பழங்கள் போன்றவற்றை எடுத்துச்சென்று வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (04-224)




மான்றா எக்ஸிகியுட்டிவ் சேர்ச், 'மான்றா எடியுகேசன்' மற்றும் மான்றா கோல்டிங் நிறுவனங்கள் இணைந்து நடத்திய தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு மற்றும் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் அனுமதிபெறும் முறைகள் பற்றிய வழிகாட்டல் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மேற்படி நிறுவனங்களின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் திருமதி சிவானி சிவகுமார், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, நிறுவன உத்தியோகத்தர் எஸ்.மனோகரன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் மூன்று படங்களிலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

*(படங்கள்: ரட்ணம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சாட்டியில் உடனடியாக குத்தகைக்கு அல்லது விலைக்கு காணி தேவை

கடற்கரையை நோக்கியபடி சாட்டிப் பிரதேசத்தில் காணி அல்லது வீடு நீண்டகால குத்தகைக்கு அல்லது விலைக்குவாங்கத்தேவைப்படுகிறது.

தொடர்பு : 0773865475, 0772349999


## ஜனஜய சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மார்ச் 9

ரூபவாஹினி நிகழ்ச்சியின் ஜனஜய 107ஆம் இலக்கச் சீட்டிழுப்பில் வெற்றி இலக்கங்களாக 15/19/41/42 ஆகிய இலக்கங்களும் சுப்பர் இலக்கமாக 11உம் அதிர்ஷ்டத்திற்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு மற்றும் இரண்டாம் பரிசு என்பன வெல்லப்படவில்லை.

நான்கு வெற்றி இலக்கங்களும் சரியாகக் கொண்ட ஒருவருக்கு மூன்றாம் பரிசாக பத்து இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று வெற்றி இலக்கங்கள் சரியாக உள்ள 205 பேருக்கு நான்காம் பரிசாக தலா ஆயிரத்து ஐநூறு ரூபா கிடைக்கும்.

இரண்டு வெற்றி இலக்கங்களை உடைய 7249பேருக்கு ஐந்தாம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு வெற்றி இலக்கம் மாத்திரம் சரியாக அமைந்த 73,142 பேருக்கு ஆறாம் பரிசாக தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

(ஒ-10)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை நடராசா



(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அல்வாய் தெற்கு, ஓடையம்பதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராசா நேற்று முன்தினம் (07.03.2010) ஞாயிற்றுக்கிழமை இரவு 9.15மணியளவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- அன்னப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும் ஆறுமுகம்- கனகம்மா தம்பதியரின் அருமை மருமகனும் தேவமலரின் அன்புக் கணவரும் ஜெக செந்தில் குமரன் (லண்டன்), செந்தில் மணாளன் (பிரதேசசபை, வவுனியா), செந்தில்ரூபன் (பொறியியலாளர், சிறிலங்கா ரெலிக்கொம், கொழும்பு), திருமதி விஜிதா பரணிதரன் (கனடா), ஜெகன் நிவாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரணிதரனின் (பொறியியலாளர், கனடா) பாசமிகு மாமனாரும் சாயிஷாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆலங்கட்டை இந்துப் பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

ஓடையம்பதி,
அல்வாய்தெற்கு,
அல்வாய்.
தொ.பே.: 021 2264713, 077 2920644

தகவல் : குடும்பத்தினர்,
மகன் (செந்தில்மணாளன்-ரகு, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்.)

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
20 * 12 * 1935



மறைவு
07 * 03 * 2002

### அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்

எம்மைத் தவிக்கவிட்டுச் சென்ற அப்பாவே !
நேற்று வரை பக்கத்திலிருந்த உங்களை
இன்றோடு இதயத்திலிருத்தி விட்டு நாம்
இருளில் தத்தளிக்கின்றோம்
உங்கள் நினைவுகள் எங்கள்
மனங்களில் என்றும் நின்று நிழலாடும்
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!

சங்கத்தானை,
சாவகச்சேரி

(சி/565583)

மனைவி, பிள்ளைகள்
(கனடா)

### திருமதி சத்தியநாதன் ராணிமலர்



உடுவில், சங்குவேலியைப் பிறப்பிடமாக வும் தற்பொழுது ஜேர்மனியை (சென்) வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி சத்தியநாதன் ராணிமலர் கடந்த 01.03.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசு மற்றும் இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி நடராசா தம்பதியரின் அன்பு மருமகளும் சத்தியநாதனின் அன்பு மனைவியும் சந்திரா, சண்முகநாதன், உதயகுமார், கருணாகரன், இராசலிங்கம், பத்மநாதன், அமுதா ஆகியோரின் சகோதரியும் பஞ்சரத்தினம், ஈஸ்வரி, இந்திரா, சிவசோதி (மலர்), சோதிமலர்(மாலா),தேவராணி(ராணி),தேவானந்தன்(தேவன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2010) செவ்வாய்க்கிழமை Hellwegfriedhof, Hellweg 95, 45279 Wssen (Deutschland), என்னும் முகவரியில் பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P: சத்தியநாதன் (ஜேர்மனி) Tel : 0201/329775 Mob: 0178/5046806
ரவி (ஜேர்மனி) Mob : 0152/02564869 Mob: 0178/7407487
சிவா (ஹொலண்ட்) Tel :0031/592421886
ஆனந் (ஹொலண்ட்) Mob : 0031/613415408

தகவல்:
பாலசிங்கம் ஈஸ்வரன்.

## கண்ணீர் அஞ்சலி

தாவடியைப் பிறப்பிடமாகவும் லண்டன் கிறவுளி நகர சொர்ண காமாட்சி அம்மன் ஆலயம், கொக்குவில் மேற்கு முதலி கோயில் ஆகியவற்றின் பிரதம குருவுமாகிய

### பிரம்மஸ்ரீ சுவாமிரெத்தினசர்மா சுந்தரேசக் குருக்கள்



அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஐயா அவர்களின் ஆத்மா முதலிகோயில் முருகனின் பாதார விந்தங்களில் நித்தியமாக இருக்க முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

முதலிகோயில் முருகன் தேவஸ்தானம்,
கொக்குவில் மேற்கு.


## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பெண் தேவை :

தொ. பே :0777260974

## தேவை

இரவு நேரக்காவலாளி மற்றும் சுத்திகரிப்பு தொழிலாளி


யாழ்.நகரின் மத்தியில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு இரவு நேரக்காவலாளி மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளி தேவை. யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

வயதெல்லை : 18-45 வரை

தகுதியுடையோர் 12.04.2010இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்குச் சமுகம் தரவும்.

IIS CITY CAMPUS
200, [illegible]
T.P: 021 222 8060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நடத்திய ஊர்வலம் ஒன்று நேற்று யாழ்.நகரில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. ஊர்வலத்தில் கலந்துகொண்ட பெண்கள் பதாகைகளைத் தாங்கியவாறு ஊர்வலமாகச் செல்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்:நந்தன், நேசன்)

# குறிகாட்டுவான் துறைமுகப் பிரதேசத்தில் அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்தப் பணிப்பு

## அரச அதிபர் நேரில் சென்று பார்வையிட்டார்

நெடுந்தீவு,மார்ச்9

புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் சுகாதார நிலைமைகளைச் சீராக்கவும் வாகன நெருக்கடிகளைக் கட்டுப்படுத்தவும் கூடியதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிகாட்டுவான் துறைமுகப்பகுதியில் நிலவும் சீர்கேடுகளைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை அங்கு விஜயம் செய்த யாழ் அரசாங்க அதிபர் கே. கணேஷ் துறைமுகப்பகுதிகளைப் பார்வையிட்டார்.

அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் விடுத்த பணிப்புரையைத் தொடர்ந்து அத்தியாவசிய செயற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

இதன்படி துறைமுகப் பகுதியில் தண்ணீர் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வாகனங்களுக்கான தரிப்பிடமும் ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் ஏற்பாட்டுக்கமைய பயணிகள் தங்குவதற்கான தற்காலிக மண்டபங்கள் அமைக்கப்படுவதுடன் 20 மலசல கூடங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் உணவு நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் சுகாதார நிலைமைகளும் கண்காணிக்கப்படுகின்றன. துறைமுகப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அங்காடி வியாபார நிலையங்கள் மனோன்மணி அம்பாள் (பேய்ச்சி அம்மன்) ஆலயப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளன.

குறிகாட்டுவான் பகுதியில் படையினரும் பொலிஸாரும் 24 மணி நேரக் கடமையில் ஈடுபடுவார்கள். குறிகாட்டுவான் பகுதிக்கு மிகக் கூடுதலான மக்கள் தினமும் வந்துசெல்வதால் சுகாதாரம், குடிதண்ணீர் மற்றும் உணவு நிலையங்களில் உரிய வசதிகள் தடைகளின்றி இருத்தல் வேண்டுமென அரச அதிபர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நடவடிக்கைகளை வேலணைப் பிரதேச செயலகம் கண்காணிக்கும். மண்டபம் அமைத்தல் மற்றும் மக்களின் தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாக புங்குடுதீவைச் சேர்ந்த 100 பேர் இந்தப் பணிகளுக்கு உதவினர். புங்குடுதீவு ப.நோ.கூ. சங்கம், பிரதேசசபை ஆகியவை வேலணை பிரதேச செயலக நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் உட்பட ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி யாழ். சுகாதார திணைக்களங்கள் அதிகாரிகள் ஆகியோர் அரச அதிபருடன் சென்றிருந்தனர். (50-ரி-111)

# வைத்தியசாலை ஊழியர் சீருடை அணியவேண்டும்

யாழ்ப்பாணம்,மார்ச்9

வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் சேவையாற்றும் அனைத்து ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தின் போது தத்தமது பதவிக்குரிய சீருடைகளை அணிந்து கடமையாற்றவேண்டும் என வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் சகல பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

கடமை நேரத்தில் சீருடை இன்றி சேவையாற்றுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அவர் இச்சுற்றுநிருபம் மூலம் பணித்துள்ளார். (50-300)

# இலகு வேலைத்திட்டம் இடைநிறுத்தம்

நவாலி,மார்ச்9

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பமான இம்மாதத்திற்கான இலகு வேலைத்திட்டம் அரச அதிபரின் உத்தரவுக்கிணங்க திடீரென நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-100)

# அனுமதியின்றி சாராயம் விற்றவருக்கு அபராதம்

பண்டத்தரிப்பு,மார்ச்9

இளவாலை சீந்திப் பந்தல் பகுதியில் அனுமதி பெறாமல் சாராயம் விற்றவரை இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற குழுவினர் கைது செய்து மல்லாகம் நிதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

மல்லாகம் நீதிமன்ற நீதிபதி மேற்படி நபருக்கு 25 ஆயிரம் ரூபா குற்றப்பணம் அறவிட்டதாக இளவாலை பொலிஸ் நிலை்யப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம். ஜே.பீ விஜயரட்ணா தெரிவித்தார். (50-ரி-130)

# மகாஜனா ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களின் கவனத்திற்கு

யாழ்ப்பாணம்,மார்ச்9

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதால் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஊடாக விண்ணப்பிக்கவுள்ள மாணவர்களை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

# பெருங்காடு, இறுப்பிட்டி வீதிகள் புனரமைக்கப்படும்

நல்லூர்,மார்ச்9

புங்குடுதீவு, பெருங்காடு இறுப்பிட்டி வீதிகளை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த 5ஆம் திகதி புங்குடுதீவுக்கு வருகை தந்த யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இறுப்பிட்டி, கழுதைப்பிட்டி துறைமுகங்களையும் பார்வையிட்டதுடன் பொதுமக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது இறுப்பிட்டி வீதியைத் திருத்தியமைக்கவேண்டியதன் அவசியத்தை பொதுமக்கள் அரச அதிபரிடம் எடுத்துக் கூறினார்கள்.

இதனையடுத்து, விரைவில் இந்த வீதியின் திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் உட்பட அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர். (50-ரி-111)

# பருத்தித்துறை - கொழும்பு சேவையில் அடுத்த மாதம் முதல் அரைச் சொகுசு பஸ்

வடமராட்சி,மார்ச்9

பருத்தித்துறை - கொழும்பு அரைச் சொகுசு பஸ் சேவையினை பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ அடுத்த மாதம் முதல் வாரத்திலிருந்து ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கென மூன்று பஸ்வண்டிகள் மறுசீரமைக்கப்பட்டு அரைச் சொகுசுக்கான ஆசனங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

பஸ்வண்டிகளை மறுசீரமைக்கும் பணி பூர்த்தியடைந்ததும் பருத்தித்துறை - கொழும்பு மார்க்கத்தில் தினமும் இரவு வேளையில் இருவழிச் சேவை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-236)

# மானிப்பாய் வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி திறந்து வைப்பு

நவாலி,மார்ச்.9

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலை மகப்பேற்று விடுதி கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை பொறுப்பதிகாரியும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவருமான வைத்திய கலாநிதி ஏகாம்பரமூர்த்தி பத்மராணி தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஒ.இ.ஞானசோதி, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மலேரியா தடை இயக்க பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி கே.ரி.சிவபாதம், யாழ் கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே. குகநேசன் மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திருமதி.பு.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (50-100)

# பருத்தித்துறை, மருதங்கேணியில் இன்று ரூ.25ஆயிரம் கொடுப்பனவுக் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்9

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 'நிகொட்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுவரும் 25ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 1,177குடும்பங்களுக்கும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 407குடும்பங்களுக்கும் இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படும் என்று அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறியவர்களுக்கும் பிற்பகல் ஒரு மணிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியேறியவர்களுக்கும் குறித்த சில இடங்களில் அனுமதிக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், குடும்ப பதிவு அட்டை, வங்கி வைப்பு புத்தகத்துடன் குறித்த இடங்களுக்குச் சென்று அனுமதிக்கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-6)

# திருநெல்வேலிச் சந்தை புதிய கட்டடத்தின் கீழ் தளப்பகுதி வியாபாரிகளின் பாவனைக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்9

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருநெல்வேலி சந்தைக் கட்டடத்தின் ஒரு பகுதி வியாபாரிகளின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நவீன வசதிகளுடன் கட்டப்படும் இந்தக் கட்டடத்தின் [illegible] வியாபார நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தின் கீழ் தொகுதியில் அமைக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் பாவனைக்காகத் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சந்தைக்கு வெளிப்புறத்தில் இடம்பெற்ற வாழைப்பழ விற்பனை யும் [illegible]ப்பட்ட சந்தையின் கீழ்மாடித் தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.(50-224)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# புங்குடுதீவிலுள்ள பெருக்கு மரத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை

நல்லூர்,மார்ச்.9

புங்குடுதீவுப் பகுதியில் உள்ள பழமை வாய்ந்த பெருக்கு மரத்தை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் கடந்த 5ஆம் திகதி பார்வையிட்டார்

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் சகிதம் அங்கு சென்ற அரச அதிபர், இந்த மரத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் உதவியுடன் மரத்தைச் சூழவுள்ள பிரதேசத்தை துப்புரவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார். (50-ரி-111)

# கிறிஸ்து சிறுவர் இல்லத்துக்கு 'சோஆ' நிறுவனம் உதவி

ஊர்காவற்றுறை,மார்ச்9

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கு அருகில் இயங்கும் கிறிஸ்து சிறுவர் இல்லத்திற்கு 'சோஆ' நிறுவனம் பல்வேறு பொருள்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

இதனால் இங்குள்ள மாணவர்களின் தளபாடக் குறைபாடுகள் இந்த நிறுவனத்தினால் ஓரளவாவது தீர்க்கப்பட்டு விட்டதாக கிறிஸ்து இல்லத்தின் இயக்குநர் அருட்தந்தை அ.றொபின்சன் யோசேப் தெரிவித்தார்.

இந்த இல்லத்தில் சுமார் 120 மாணவர்கள் தங்கியுள்ளனர். இதில் கணிசமானவர்கள் இடம்பெயர்ந்து வந்த மாணவர்களாவர். இந்த இல்லத்தில் தற்போது சிறுவர்களுக்கான உணவினை வழங்குவதில் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் இயக்குநர் தெரிவித்துள்ளார். (50-325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாடசாலைகளின் கால்கோள் விழாக்கள்




நாகர் கோயில் மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் நடை பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சிக் கல்விவலய ஆங்கில ஆசிரிய ஆலோசகர் எஸ்.செல்வராசா, அதிபர் கே.கண்ணன் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருடன் புதிதாக இணைந்துகொண்ட மாணவர்கள் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (236)



மானிப்பாய் புனித அன்னாள் றோ.க.த.க. பாடசாலையின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் பங்குத்தந்தை அருட்பணி ஏ.பி.அந்தோனிப்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி எஸ்.அழகேஸ்வரி மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (20)



யாழ்.அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அளவெட்டி தென்னிந்திய திருச்சபைக் குருமுதல்வர் வண ஏ.இ.சுரேந்திரன் மற்றும் மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (16)



பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் டென்மார்க்கில் இருந்து வருகைதந்த க.க[illegible] பொங்கல் நிகழ்வை ஆரம்பித்து வைப்பதனையும் அருகில் ஆரம்பப்பிரிவு ஆசிரியை திருமதி பா.முகுந்தன் மற்றும் மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## சுழிபுரம் பிரதேசத்தில் இலகு வேலைத்திட்டம்

சுழிபுரம், மார்ச் 9

உணவுக்கான இலகு வேலைத்திட்டத்தின் கீழ் இந்தவாரம் சுழிபுரம் பிரதேசத்தில் உள்ள வீதிகளை பெரும் திரளான ஆண்களும் பெண்களும் சுத்தம் செய்து வருகின்றனர்.

கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் வேலைகளை மேற்பார்வை செய்வதோடு வேலை செய்பவர்களின் பெயர்களையும் பதிவு செய்து கொள்கின்றனர். (50-ரி-28)


## தவறிவிட்டது

முல்லையடி வீதி, பிரான்பற்று, பண்டத்தரிப்பைச் சேர்ந்த நடேசப்பெருமாள் பரமேஸ்வரி என்பவரது தே.அ.அ. (565343793V) தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் அல்லது 0779124006 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## வீடு வாடகைக்குத் தேவை

NGO இல் பணிபுரியும் உத்தியோகத்தரின் சிறிய கௌரவமான குடும்பத்துக்கு சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 021 3734690
077 9454210
077 8695350

## பிறின்ஸ் போல்றி பாம்

புறொய்லர் குஞ்சு, (நியூ பேணாட்ஸ்), முட்டைக்குஞ்சு, கோழி இறைச்சி, கால் நடைத்தீவனம் என்பனவற்றைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: 23.03.2010 அன்று குஞ்சு விநியோகம் நடைபெறும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

380, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்,
இ.பீற்றர்தாஸ்-0776095749

## 11 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளில்



அமரர்
அன்னலட்சுமி
கந்தையா

தோற்றம்
16.04.1934

மறைவு
24.02.1999

புண்ணியம் யாவும் செய்து எம்மைப் புகழுடனே வாழ வைத்தீர்
எண்ணிய கருமம் யாவும் அன்றே முடித்து வைத்தீர்
கண்ணியமாக எம்மைக் கலங்க விடாமல் காத்து நின்றீர்
எம்மை அரவணைத்துக் காத்த உங்கள் அன்பு முகம் காண
நாள்தோறும் கலங்குகின்றோம் அம்மா ......
வானாக உயர்ந்து நின்று எமக்குப் பாசத்தைப் பொழிந்தவரே !
பாரினிலே நாம் உயர அல்லும் பகலும் பாடுபட்டீரே
கண்டு கொள்ள ஏங்குகின்றோம் கண்ணெதிரே வாருமம்மா ....
உடலால் நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உள்ளத்து உணர்வுகளால் எம்மோடுதான் வாழ்கின்றீர்கள்.

என்றும் அழியா நினைவுகளுடன்:
க.கந்தையா (கணவர்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'கமலவாசா',
கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

## சுடர் ஒளி

THE SUDAR OLI

மார்ச் 07-13



'சுயேச்சைக்குழு' என்ற சதித்திட்டத்தை தமிழ் மக்கள் முறியடிப்பார்களா?
தமிழ் வேட்பாளர்களை நோக்கிய கேள்விகள்
ஒரு குண்டிலே குடும்பத்தையே இழந்தவரின் வலிசுமக்கும் வரிகள்
இருதயநோயைத்தடுக்க 5 வழிகள் !
விற்கப்பட்ட வேட்பாளர்களும் ஏமாற்றப்பட்ட தமிழர்களும்.
தமிழர்களுக்கு சவால்விடும் பொதுத்தேர்தல்
தமிழக இடைத்தேர்தல் - பா.ம.க வுக்கு அக்னிப் பரீட்சை
ஒபாமாவின் அணைந்த காதல்
மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்
உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்
இப்போது கொழும்பு விலையிலேயே (ரூ-25) விற்பனையாகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மேம்பாட்டுக்கு வழிவகை செய்ய வேண்டும்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



மட்டக்களப்பு,மார்ச்9

கடந்தகால யுத்த சூழ்நிலைகள் காரணமாக கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் பெரும் துன்ப, துயரங்களையும் - இழப்புக்களையும் சந்தித்திருந்தனர். இதன்காரணமாக இம்மக்கள் தம்மை மீளக் கட்டியெழுப்புவதற்கும் தம்பிரதேசங்களை அபிவிருத்தி செய்வ தற்குமான பெரும் அவாவுடன் உள்ளனர் இதற்கான வழிகளைச் செய்ய வேண்டும்.

- இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

வேப்பையடி அரசினர் வைத்தியசாலையில் மக்கள் சந்திப்பின்போது இதனை வலியுறுத்தினார்.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள், எஸ். புஸ்பராசா, ப.பிரசாந்தன், நாவிதண வெளிபிர தேசசெயலாளர் கலாநிதி எம். கோபால் ரெட்ணம், நாவிதன் வெளி பிரதேசசபைத் தவிசாளர். ரீ.கலையரசன் மற்றும் முக்கிய அதிகாரிகள் சகிதம் வேப்பையடி வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

வேப்பையடி கலைமகள் வித்தியாலய அதிபர் எஸ்.பாலசிங்கன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதலமைச்சர் உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த மூன்று தசாப்பதங்களாக இடம்பெற்ற யுத்தத்தால் தமிழ் பிரதேசங்களையும், தமிழ் மக்களையும் பின்தங்கச் செய்துள்ளதோடு ஏனைய துறைகளும் ஒன்பது வருடம் பின்தள்ளப்பட்டுள்ளது. இதில் இருந்து நாம் துரிதமாக மீட்சி பெறவேண்டும். புறக்கணிக்கப்பட்ட நாம் நமது பிரதேசங்கள் முழுமையாக கட்டியெழுப்பட வேண்டும். நமது ஒற்றுமையும், அரசியல் பலமும் முக்கியமானது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் என்ற வகையில் பின்தங்கிய பிரதேசங்களில் அபிவிருத்தியில் நான் விசேட கவனம் கொண்டுள்ளேன்.

அம்பாறை மாவட்டத்தில் பல தமிழ்ப் பிரதேசங்கள் மிகப் பின்தங்கிய நிலையில் உள்ளதைநான் அறிவேன். அதிலும் கல்லேயா குடியேற்றக் கிராமமாகிய நாவிதன்வெளிப் பிரதேசம் பின்தங்கிய நிலையில் உள்ளமை குறித்து நான் கவலையடைகின்றேன்.

இந்த வேப்பையடி வைத்தியசாலையைப் பார்வையிட்டபோதுதான் இங்கே பாரிய குறைபாடுகள் உள்ளதைக் காணக் முடிகிறது. எதிர்காலத்தில் வேப்பையடி வைத்தியசாலையை மக்களுக்கு சிறந்த வைத்திய சேவையை வழங்கக் கூடியதாக அபிவிருத்தி செய்வேன் - என்றார். (ளி)

# உதவிப் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை .

பட்டிருப்பு,மார்ச்9

வேலையற்ற இளைஞர்களை சுயதொழிலில் ஈடுபடச் செய்வதற்காக கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் உதவிக் கொடுப்பனவு ஒன்றை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் சமூக சேவைகள் திணைக் களத்தால் அனுப்பிவைக்கப்பட் டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்தும் வலது குறைந்த மற்றும் பொதுசன உதவிப் பணம் பெறுகின்றன. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களிலிருந்து இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் இளைஞர்களுக்கு உதவிக்கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சமூகசேவை உத்தியோகத்தரிடம் இதற்கான விண்ணப்பத்தைப் பெற்று, பூர்த்தி செய்து, தேவையான ஆவணங்களுடன் அனுப்பிவைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ளி)

# கிழக்கிலுள்ள அரச பாடசாலைகளின் வரைபடங்களைத் தயாரிக்கத் திட்டம்

## மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை

மட்டக்களப்பு,மார்ச்9

கிழக்கு மாகாணத்தில் தற்போது இயங்கி வரும் அரச பாடசாலைகளின் அமைவிடங்களை அறிந்துகொள்வதற்கான வரைபடங்களைத் தயாரிக்கும் வேலைத்திட்டமொன்றை மாகாணக் கல்வியமைச்சு மேற்கொண்டுள்ளது.

பிரதேசத்தின் எதிர்காலக் கல்வி நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு வசதியாகவும், பாடசாலை மேற்பார்வை நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு வசதியாகவும் இந்த வரைபடம் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் உபுல் வீரவர்தன தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் 15 கல்வி வலயங்களையும் உள்ளடக்கியதாகக் கோட்டக்கல்வி பிரிவு மட்டத்தில் தனித்தனி வரைபடங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

ஒரு கல்விக்கோட்டப் பிரிவில் தற்போது அமைந்துள்ள சகல பாடசாலைகளின் அமைவிடங்களும் இந்த வரைபடத்தில் உள்ளடக்கப்படுவதோடு பிரதான வீதி, நீர் நிலைகள் மற்றும் கல்வி அலுவலகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் இடையிலான தூரம் என்பனவும் இதில் குறிப்பிடப்படவுள்ளன.

பாடசாலைகளின் வகைகளுக்கு ஏற்ப இலகுவாக அவற்றை அடையாளம் காணும் வகையில் வரை படத்தில் பொருத்தமான அடையாளங்கள் சுட்டிக்காட்டப்படவுள்ளன எனவும் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (ளி)

# ஏறாவூரில் விகாரை கையளிப்பு

ஏறாவூர்,மார்ச்9

ஏறாவூரில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள பௌத்த விகாரை கடந்த 6ஆம் திகதி வைபவ ரீதியாக பௌத்த மதகுருவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக சுமார் 22 வருடங்களாகச் சேதமடைந்த நிலையில் இந்த விகாரை காணப்பட்டது.

எனினும், தற்போது இப்பகுதியில் நிலவும் அமைதியான சூழ்நிலைகள் காரணமாக எறாவூர் புலினதலாராமய பௌத்த விகாரை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஏறாவூர் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மீள நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த விகாரை வணக்கத்துக்குரிய ஹிக்கடுவ ஞானரத்ன தேரரிடம் வைபவரீதியாகக் கையளிக்கப்பட்டுள் ளது.

பௌத்த மதகுருமார்கள், அரசியல் பிரமுவர்கள், மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கடந்த 1980ஆம் ஆண்டுகளில் ஏறாவூர் பிரதேசத்தில் பௌத்த குடும்பங்கள் பலர் வசித்து வந்தபோதிலும், பன்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காணரமாக இவர்களில் பலர் கொல்லப்பட்டனர். இத்துடன் ஏனையவர்கள் இடம் பெயர்ந்து சென்றிருந்தனர்.

தற்போது இப்பிரதேசத்தில் நிலவும் அமைதியான சூழ்நிலைகள் காரணமாக சகல இனங்களையும் சேர்ந்த மக்கள் வாழக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், விகாரைகளும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றனர். (ளி)




## மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி

மட்டக்களப்பு,மார்ச்9

தேசிய இளம் ஊடகவியலாளர் அமைப்பும் 'எங்களால் முடியும்' பிரசாரச் செயலகமும் இணைந்து தேசிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்த முன்வந்துள்ளன.

'வன்முறையற்ற இளம் சமுதாயம்', 'சுமூகமான பாடசாலை மாணவர்கள்', 'பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்போம்' ஆகிய தலைப்புக்களில் கட்டுரைகள் வரையப்படவேண்டும். இப் பேட்டியில் தரம் 8 முதல் உயர்தர மாணவர்கள் வரை பங்குபற்றலாம்.

ஏதேனும் ஒருதலைப்பைத் தெரிவு செய்து 500 சொற்களுக்குக் குறையாமல் எழுதி அதனை வகுப்பாசிரியரினதும், அதிபரினதும் கையொப்பத்துடன் இல. 12 ஏ, றிஜ்வே பிளேஸ், கொழும் - 04 என்ற முகவரிக்கு எதிர் வரும் 20ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.(ளி)

# சமூகத்தை உயர்நிலைக்கு மாற்றக்கூடிய உலமாக்கள் உருவாவது அவசியம்

## அரபுக்கல்லூரி அதிபர் புகாரி கூறுகிறார்

மட்டக்களப்பு,மார்ச்9

சகல துறைகளிலும் கால் பதித்து சமூகத்தை உயர்நிலைக்கு மாற்றக்கூடிய உலமாக்களே இன்றைய காலத்தின் தேவையாகும் - இவ்வாறு நிந்தவூர் காஸிமுல் உலூம் அரபுக்கல்லூரி அதிபர் கலாபூசணம் எம்.எச்.எம்.புகாரி தெரிவித்தார்.

கடந்த 4ஆம் திகதி மருதமுனை மர்கசுத் தஃலீமுல் இஸ்லாமிய்யாவின் பகுதி நேர அரபுக்கலாசாலை அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

மார்க்கக் கல்வியை ஏளனமாகப் பார்க்கும் நிலைக்கு உலமாக்கள் ஆகிவிடக்கூடாது. எம்மை நோக்கிவரும் ஒவ்வொரு சவால்களுக்கும் முகம் கொடுத்து அதனை முறியடிக்கக்கூடிய தகுதி உலமாக்களிடம் ஏற்படவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் சகல வளங்களையும் கொண்ட மிகப்பெரும் உலமாக்களையும், கல்வியியலாளர்களையும் உருவாக்கிய மற்றும் உருவாக்கிக் கொண்டிருக்கின்ற மருதமுனையில் ஆண்களுக்கான அரபுக் கலாசாலையொன்று உருவாகுவது மிகப்பொருத்தமானது என்பதில் மாற்றக் கருத்துக்கு இடமில்லை.

அரபுக் கலாசாலைகள் வெறுமனை மௌலவி மார்களை உருவாக்குவதற்கான பாடத்திட்டங்களை மட்டும் கொண்டிருப்பதுடன் நின்றுவிடாது ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பப் பாடங்களையும் கொண்டு செயல்படுவது ஆரோக்கியமான நிலையாகும். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கற்கைநெறிகள் மௌலவிமார்களை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்துள்ளன. இவைகளுக்கு எமது கலாசாலை மாணவர்களும் செல்ல வேண்டுமாயின் மௌலவிக் கற்கை நெறியுடன் பாடசாலைப் பாடத்திட்டக் கல்வியிலும் பூரண கவனம் செலுத்த வேண்டும்.

முஸ்லிம் சமூகத்திலுள்ள செய்திகளை மற்ற சமூகங்களுக்கும் கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பத்தை அரபுக் கலாசாலைகளினூடாக ஏற்படுத்த வேண்டும். இன்று பாடசாலைகளில் ஒழுக்கம் சீர்குலைந்துள்ளது. பெண் ஆசிரியை ஒருவரால், ஆண் மாணவர்கள் மத்தியில் பாடம் கற்பிக்க முடியாத சூழல் சில இடங்களில் காணப்படுகின்றது. அந்த ஆசிரியைகள் பாடசாலை செல்ல மறுக்கின்றனர். ஒழுக்கங்களை வழங்கவேண்டிய உயர் பீடங்கள் ஒழுக்கம் கெட்டு நிற்கின்றன. இவற்றை மாற்றியமைக்க உலமாக்கள் பாடுபட வேண்டும்.

மருதமுனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரபுக் கலாசாலையை இந்த ஊரின் கண்ணாக மாற்றியமைக்க வேண்டும். இதன் வளர்ச்சியைக்கண்டு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் படையெடுக்க வேண்டும். இதுவே இக் கலாசாலையின் வெற்றியாகும் - என்றார்.(ளி)




கிழக்கு முஸ்லிம் தொழில் வல்லுநர்கள் சம்மேளனத்தினரால் ராஜரட்டை பல்கலைக்கழக வைத்தியபீட முஸ்லிம் மாணவர்களுக்கு ஒருதொகுதி வைத்திய நூல்கள் அண்மையில் சம்மேளனத் தலைமையகத்தில் வைத்து வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சம்மேளனத் தலைவர் [illegible], செயலாளர், பொறியியலாளர் நியாஸ் ஏ.ஸமத் ஆகியோர் ராஜரட்டைப் பல்கலைக்கழக முஸ்லிம் [illegible] பெறுமையையும், நிகழ்வில் கலந்துகொண்ட சம்மேளனப் பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








உதயன் அனுசரணையுடன் நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினரால் அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை மாணவர்களுக்கு சேமிப்பு கணக்குப் புத்தகம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட ப்டங்கள். இந்த நிகழ்வில் மாணவர்களுக்கான சேமிப்புப் புத்தகத்தை உதயன் நெல்லியடிக்கிளை முகாமையாளர் எஸ்.சின்னத்தம்பி, நல்லூர் றோட்டறக் கழகத் தலைவர் எஸ்.ரஜிதன் ஆகியோர் வழங்குவதனை முதல் இரு படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களை இறுதிப் படத்திலும் காணலாம்.

# எதையும் தாங்கும் அன்பின் இதயம்

அவன் ஒரு காதலன். அவள் ஒரு காதலி. அவன் அவளைப் பார்த்து " நான் உன்மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கின்றேன் தெரியுமா?" என்று அன்போடு சொன்னான். அவள் மட்டும் என்ன அவனது அன்புக்குச் சளைத்தவளா? அவள் சொல்லுவாள் "நானோ உங்கள் மேல் என் உயிரையே வைத்திருக்கின்றேன்" இவர்கள் எதைப் பற்றி பேசுகிறார்கள். நிச்சயமாக அன்பைப் பற்றியே. ஆனால் இந்த அன்பைப் பற்றி அவர்களால் விளக்க முடியவில்லை. விபரிக்க இயலவில்லை, விரித்துரைக்க வார்த்தைகள் இல்லை, எடுத்துரைக்க சொற்களில்லை. அதுதான் அன்பு. நிரூபிக்க முடிவதில்லை. ஆனால் அனுபவிக்க முடியும்.

எனவே காதலனும், காதலியும் முதலில் பொருள்களைக் கொடுக்கின்றார்கள். இறுதியில் ஒருவரை ஒருவர், ஒருவரை ஒருவருக்கு கொடுக்கின்றார்கள். இது போன்றுதான் அன்பு இருக்குமாயின் பெற்றோர் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் பொற்றோருக்கும் தம்மைக் கொடுக்கின்றார்கள். ஆக உண்மையான அன்பு இருக்குமாயின் ஆசிரியர்கள் - மாணவர்களிடையேயும், தலைவன் - மக்களிடையேயும், நண்பர்களிடையேயும் இக் கொடுக்கல் வாங்கல் இருக்கும். இருக்க வேண்டும்.

## தவக்காலச் சிந்தனை



"ஒருவர் தான் நண்பர்களுக்காகத் தன் உயிரைக் கொடுப்தைவிட மேலான அன்பு வேறில்லை" என அன்பிற்கு இலக்கணம் கூறியவர் இயேசுக் கிறிஸ்து. இலக்கணம் கூறிய கிறிஸ்து இலக்கியமாகத் தன் வாழ்க்கையையும் அமைத்துவிட்டார். மனிதனின் சாயலாகப் படைக்கப்பட்ட கிறிஸ்து மனிதரோடு மனிதராகி, அன்புப் பணி செய்து கல்வாரி மலையில் அந்த அன்பை முழுமையடையச் செய்கின்றார். இது யாருக்காக ஒருவருக்காகவா, இல்லை தன் ஊருக்காகவா? இல்லையே உலகிற்காக கொடுத்தார். மானிட வர்க்கத்திற்காகக் கொடுத்தார்.

எனவே பொதுமக்களின் நன்மையே நாடி பொருளற்ற சட்டங்களையும்; சடங்குகளையும் தட்டிக் கேட்க ஆளில்லாமல் அநீதியாக ஆட்சி செய்த தலைவர்களையும் மத குருக்களையும் தட்டிக் கேட்டார். ஏன்? அவர் மனிதரில் வைத்த அன்பே காரணம். அந்த ஆழமறியா அன்பு எதையும் தாங்கும் இதயத்தை அவருக்குக் கொடுத்தது. எனவே இத்தவக்காலத்தை பயனுள்ள முறையில் சிந்தித்து பரமன் இயேசுவின் கல்வாரிப் பாதையில் எமது பயணத்தைத் தொடருவோம்.

நாவாந்துறை. செல்வி துஸ்யந்தினி சிலுவைதாஸ்

# தசாக கிருஹயக்ரு அழைப்பு



நிகழும் விரோதி வருடம் மாசித்திங்கள் 17ஆம் நாள் (01.03.2010) திங்கட்கிழமை காலை அபரபக்கப் பிரதமைத் திதியில் சிவபதமடைந்த எமது தாய்
அனலை தீவு புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ்வரன் ஆலய பரம்பரை அர்ச்சகர் அமரர் சிவஸ்ரீ
**சி.நடராஜக்குருக்கள்**
(புளியந்தீவு கணேசையர்)
அவர்களின் துணைவியார்

**அமரர் ஸ்ரீமதி ந.ருக்மணி அம்மா** (தங்கம்)

அவர்களின் தசாக சபிண்டீகரண ஆத்மார்த்தக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நீராவியடியில் நடைபெறும்.

10.03.2010 புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு - தசாகம்
11.03.2010 வியாழக்கிழமை காலை ஏகோதிஷ்டம் - மாசியம்
12.03.2010 வெள்ளிக்கிழமை - சபிண்டீகரணம்
13.03.2010 சனிக்கிழமை மதியம் கிருஹயக்ஞம் (சமாராதனை)

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிவஸ்ரீ ந.தாமோதரக்குருக்கள்
இல.02, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 077 1543342, 011 2952148

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(95607)

# நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவலைகளில்...



அமரர்
**கருணாகரலிங்கம் துஷ்யந்தன் (கஜன்)**

அன்னை மடியில்
17.08.1984

மண்ணின் மடியில்
18.02.2009

திதி: நவமி (09.03.2010)

நிரந்தர முகவரி: ஏழாலை மேற்கு, ஏழாலை
இடைக்கால முகவரி: மூங்கிலாறு, உடையார்கட்டு.

பாசப் பறவைகளாய் பாடித்திரிந்த எம் வாழ்வில்
பருந்தாக ஆகாய விமானம்
ஒரு சிறகை உடைத்தது ஏனோ?
உடைந்த சிறகின்
வலியால் துடிக்கின்றது பறவைகள்
மீண்டும் இந்தச் சிறகு - ஆத்மா சாந்தியடைந்து
எம்முடன் சேர வேண்டுமென
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்....

இன்று (09.03.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

* இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

'விக்கினேஸ்வரா வாசா',
மயான வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

நினைவுடன்:
குடும்பத்தினர்.

(95599)

## படகுவரி செலுத்த உரிமையாளர் இணக்கம்

நல்லூர், மார்ச் 9

நயினாதீவு, புங்குடுதீவு, குறிகாட்டுவான்ஆகியஇடங்களுக்கிடையில் படகுச்சேவை நடத்தும் படகுகளின் உரிமையாளர்கள் வேலணை பிரதேச சபைக்குரிய பட்கு வரியைச் செலுத்த இணங்கியுள்ளனர்.

இதுவரை காலமும் இவர்கள் இதனைச் செலுத்தாது தவிர்த்து வந்துள்ளனர். அண்மையில் குறிகாட்டுவானுக்கு வருகை தந்த அரச அதிபர் கே.கணேஷ் படகு உரிமையாளர்களுடன் இது தொடர்பாக நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாகவே படகு உரிமையாளர்கள் படகுவரி செலுத்த இணங்கியதாகத் தெரிய வந்துள்ளது.

இந்தப் பேச்சு வார்த்தையின்போது வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வேலணை பிரதேசசபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் அதன் அதிபருடன் உடனிருந்தனர். (50-ரி-111)


B.L.A. Migration & Student Services

# அவுஸ்திரேலியாவில் குடியேற்றம்

**Opportunity for North East people to migrate legally to Australia**

Australian Migration Lawyer (MARN: 0746189) will conduct consultations at **Nelli Star Hotel Vavuniya** from 22-3-2010 till 24-3-2010 by appointment.

People with skills / relatives / businessmen / special talents / visitors to Australia can meet the Migration Lawyer to check their ability. Individual consultations done in a timely manner. Please book your appointment early due to limited interviews. Interpreters available.

HOTLINE - Mr. Sothirajan 0786 614 404
(for bookings in Tamil)
Mr. De Silva 0773 402 170
(for bookings in English)

26, 27th Lane Colombo 3 Sri Lanka
keith@blamig.com.au www.blamig.com.au +94 114 883 180

B.L.A. Migration & Student Services
B.L.A. Migration & Student Services
B.L.A. Migration & Student Services


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போதைய பொதுத் தேர்தல் காலத்தில் புலம்பெயர் தமிழரின் கடமை

**லண்டனிலிருந்து ஐ.தி.சம்பந்தன்**


கஜேந்திரகுமார்

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் தாயகத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

வன்னியில் ஆயுதப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் - அதாவது சென்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது - விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அவர்களின் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவு நல்கி தமது நாடாளுமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தது.

கடந்த மே மாதம் 18ஆம் திகதியுடன் ஆயுதப்போராட்டம் மௌனமாகியது. அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, ஈழத்தமிழர்களின் அரசியலை ஜனநாயக வழிகளில் முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

முள்ளிவாய்க்கால் போராட்ட வீழ்ச்சியின் பின்னர் இலங்கை அரசியலில் - குறிப்பாக தமிழர் அரசியலில் - பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஹிட்லர் போன்ற சர்வாதிகாரப் போக்கில் மஹிந்த ராஜபக்ஷ ஓர் இராணுவ ஆட்சியைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறார்.

அரசுக்கெதிராகக் கருத்துகளை வெளியிடும் ஊடகவியலாளர்கள் கடத்தப்படுதல், காணாமற்போதல், வெள்ளைவான் கடத்தல், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் அரச படைகளின் துணையுடன் ஆயுதக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்டமை, பயரங்கரவாதத் தடைச்சட்டத்தையும், அவசரகாலச் சட்டத்தையும் பயன்படுத்தி தமிழ் மக்களை அடக்கியொடுக்கும் அரசியல் நிலைமை போன்றவற்றை புலம்பெயர் தமிழர்கள் நன்கு அறிவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களது தொகுதிகளுக்குச் செல்ல முடியாதளவு உயிர் அச்சுறுத்தலும், பாதுகாப்பின்மையும் இருந்து வந்தமையை யாவரும் அறிவர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன் செல்வராசா, பத்மினி சிதம்பரநாதன், ஜெயானந்தமூர்த்தி, சிவாஜிலிங்கம் போன்றவர்கள் அங்கு வாழ முடியாது என்று நீண்டகாலம் வெளிநாடுகளில் தங்கியிருந்தனர்.

ஆனால், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நெருக்கடியையும் பொருட்படுத்தாது நாட்டிலிருந்து தம்மால் செய்யக்கூடிய கடமைகளை ஆற்றிவந்தனர்.

வன்னிப்போராட்டம் முடிவடையும் வரை விடுதலைப் புலிகளுக்கு முழுமையான ஆதரவு நல்கி - அவ்வியக்கத் தலைமையின் வழிகாட்டலுக்கு உட்பட்டு அவர் நடந்துவந்தமையையும் அனைவரும் அறிவர்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விடுதலைப் புலிகளின் ஊதுகுழல் என்று கருதி மஹிந்த அரசு பலவழிகளில் அவர்களைப் பழிவாங்கி வந்தததையும் அனைவரும் அறிவர்.

இந்தச் சூழலில் முள்ளிவாய்க்கால் வீழ்ச்சியின் பின்னர் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது சுமத்தப்பட்டது. இந்தப் பொறுப்பை நன்கு உணர்ந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசியல் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு ராஜதந்திரமாக அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருகிறது.

25 வருடகால ஆயுதப்போராட்டம் வீழ்ச்சியடைந்ததால் அதிலிருந்து தமிழர்களை மீட்சிபெற வைத்துத் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய நிலையிலுள்ள த.தே.கூட்டமைப்பு தமிழர்களின் வலுவான கட்சியாக வளரவேண்டுமென்பதில் புலம்பெயர் தமிழர்களிடையே மாற்றுக்கருத்து இல்லை.

ஆனால், இலங்கையிலுள்ள பயங்கரமான சூழ்நிலையில் தமிழர் தாயகத்தில் வாழும் மக்களின் அவலநிலை, இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றல், உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இராணுவத்தை அகற்றல், வன்னிப் பிரதேசத்தில் இராணுவ ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தல் போன்ற அதிமுக்கியமான பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. இவற்றை எவ்வாறு அணுகுவது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டமிட்டு அதன்படி செயலாற்றி வருகிறது.

இந்தியா, இலங்கை மீது ஆதிக்கம் செலுத்தி வருவதால் இந்தியாவின் நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் த.தே. கூட்டமைப்புக்கு


பத்மினி சிதம்பரநாதன்

உண்டு. அதையும் அவர்கள் ராஜதந்திரமாக மேற்கொள்வார்கள் என தமிழ்மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அதேபோல், ஓர் அரசியல் தீர்வைக் கொண்டுவருவதற்கும் இந்தியாவின் உதவி அவசியமாக இருக்கிறது. அதேவேளை, சர்வதேச நாடுகளின் ஆதரவும் தேவை.

முதலில் இந்தியாவுடன் நல்லுறவைப்பேணவேண்டியது அவசியம். அதற்காக இந்தியாவிடம் சரணடையக் கூடாது. ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்தியாவிடம் சரணடைந்து விட்டது எனக் குரல் எழுப்பப்படுகிறது. அது விடயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தெளிவுபடுத்தவேண்டும்.

அந்தவகையில் இந்தியாவுடனும் சர்வதேச சமூகத்துடனும் நல்லுறவைப்பேணி தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையுடனான அரசியல் தீர்வைக் கொண்டுவருவதற்கு ராஜதந்திரமாக த.தே. கூட்டமைப்பு செயற்படவேண்டும். இதைப் புரிந்துகொள்ளாத புலம்பெயர் தமிழர்கள் சிலர் இரா. சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் சோனியா காந்தியின் வலையில் சிக்கிவிட்டனர் எனக் கோஷம் எழுப்புகின்றார்கள்.

இலங்கையின் களநிலைமைகளைப் புரிந்துகொள்ளாதவர்கள் இவர்களுக்கு எதிராகக் கோஷத்தை எழுப்பி குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். இது மிகக் கசப்பானதொரு விடயம்.

ஈழத்தமிழர்கள் அரசியல் ரீதியாகத் தலைநிமிர்ந்து - ஜனநாயக வழியில் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டுவிட்டது எனக் கூறுபவர்கள், இந்தப் பிளவு எத்தகையது என்பதை ஆராயவோ - யுதார்த்தமாகச் சிந்திக்கவோ - மறுக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலகட்சிகளை உள்ளடக்கிய ஒரு கட்டுப்பாடான அமைப்பு. பல கருத்துக்களைக் கொண்ட கட்சிகள் இங்கு அங்கம் வகுக்கின்றன.

வன்னித் தலைமை இருக்கும்வரை கட்டுப்பாடாக இருந்தவர்கள் முள்ளிவாய்க்கால் வீழ்ச்சியின் பின்னர் தன்னிச்சையாகக் கருத்துக் கூற முற்பட்டுள்ளனர். இதன் மூலம் தலைமைக்கு மதிப்புக் கொடுக்கும் நிலை குறைந்துவிட்டது எனத் தெரிகிறது.

இன்றைய சூழ்நிலையில் நல்ல அரசியல் அனுபமிக்க தலைவர் ஒருவர் த.தே.கூட்டமைப்புக்குக் கிடைத்தமை வரவேற்கத்தக்கது.

அன்று இந்திரா காந்தியைச் சந்தித்த மூத்த தலைவர்களில் ஒருவராக இருப்பவர் சம்பந்தன்.

1952 இல் திருகோணமலைத் தொகுதியின் பிரதிநிதியாக தந்தை செல்வாவின் தமிழரசுக் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டவர் இராஜவரோதயம். அவரின் மகன்தான் சம்பந்தன். இவர்கள் தமிழர் தாயகத்தின் தலைநகரான திருமலையை, சிங்களவர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்து வருபவர்கள். தமிழர் தாயக உணர்வுமிக்க அரசியல் பரம்பரையில் வந்தவர்தான் சம்பந்தன். இவரைப் புலம்பெயர் தமிழர் சிலர் மிக மோசமாக விமர்சிப்பதுதான் வேதனைக்குரியது.

எனினும், எந்தக் குறைபாடுகளையும், கண்டனங்களையும் பொருட்படுத்தாது த.தே.கூட்டமைப்பின் தலைமை, அரசியல் நகர்வுகளைச் சாதுரியமாக மேற்கொண்டு வருகிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க)


கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## அரசியல் விஞ்ஞான மூலத்துவங்கள் | பகுதி - I

*** 1-10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் ஒரு பிழையான கூற்றைக் கொண்டுள்ளது. அப் பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.**

01. பிரித்தானிய குடியேற்ற காலனித்துவ ஆட்சியின் கீழ்,
   1) நாடு முழுவதும் ஒரே நிர்வாக முறைமை அமுல்படுத்தப்பட்டது.
   2) திறந்த பொருளாதாரம் அறிமுகமானது.
   3) உள்நாட்டு விவசாயத்துறை அபிவிருத்தியடைய ஆரம்பித்தது.
   4) பானப்பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

02. ஆங்கிலேயர் ஆட்சிக்காலப்பகுதியில் ஏற்பட்ட சமூக மாற்றம்,
   1) புதிய தொழிலாளர் வர்க்கம் உருபெற்றது.
   2) ஆங்கிலக்கல்வி பரவலடைய ஆரம்பித்தது.
   3) மத்தியதர வகுப்பினர்கள் தோற்றமடைந்தனர்.
   4) கிறிஸ்தவ மதம் அரசமத அந்தஸ்தைப் பெற்றது.

03. கமரனின் நீதித்துறைச் சீர்திருத்த யோசனைகள்,
   1) குற்றவியல், குடியியல் வழக்குகளை விசாரணைசெய்ய உயர் நீதிமன்றம்.
   2) நீதித்துறையை நிர்வகிக்கும் பொறுப்பு ஆளுநரிடம்.
   3) மாவட்ட நீதிமன்றங்களை உருவாக்குதல்.
   4) நிர்வாகத் துறையிடமிருந்து விடுபட்ட சுதந்திரமான நீதியமைப்பு.

04. இலங்கையின் முதலாவது ஜனநாயக நிறுவனம்,
   1) பிரித்தானிய முடியினால் வழிநடத்தப்பட்டது.
   2) சட்ட நிரூபண சபையாகக் காணப்பட்டது.
   3) இனங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.
   4) சட்டவாக்கத்தை மேற்கொள்ளும் அமைப்பாகும்

05. கோல்புறூக் சீர்திருத்தம்,
   1) தேசாதிபதியைப் பலப்படுத்த உதவியது.
   2) இராஜகாரிய முறையினை நீக்கியது.
   3) இராச்சியங்களாக பிளவுபட்டிருந்த நாட்டை ஒன்றாக்கியது.
   4) பொதுவான சட்டங்களை உருவாக்கியது.

06. 1924 இல் மனிங் டிவன்சயர்,
   1) மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை காணப்பட்டது.
   2) தமிழ்ச் சமூகத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியது.
   3) பிரதேசவாரி பிரதிநிதித்துவத்தைப் பின்பற்றியது.
   4) ஓர் உப தலைவரின் கீழ் சபை செயற்பட்டது.

07. குறு-மக்கலம் சீர்திருத்தம்,
   1) உத்தியோகப்பற்றற்றவர்களில் தமிழ் பிரதிநிதிகள் மூவர் அடங்குவர்.
   2) மத்தியதர வர்க்கத்தின் கோரிக்கையின் பலனாக உருவாக்கப்பட்டது.
   3) முதன்முதலில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.
   4) தேர்தல் முறை முதல்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

08. இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி,
   1) இலங்கையின் முதலாவது வலதுசாரிக் கட்சியாகும்.
   2) 1946ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 06ஆம் திகதி உருவாகியது.
   3) மூடிய பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும் கட்சியாகும்.
   4) இக்கட்சி உருவானபோது அருணாசலம் மகாதேோ உபதலைவராக இருந்தார்.

09. இலங்கையில் 1930 களில் இடதுசாரி இயக்கம்,
   1) காலனித்துவ வாதத்தை எதிர்த்தது.
   2) லங்கா சமசமாஜ என்ற கட்சியை உருவாக்கியது.
   3) மேற்கத்திய கல்வியைப் பெற்ற புத்திஜீவிகளால் உருவாக்கப்பட்டது.
   4) சோஷலிசப் புரட்சியை ஏற்படுத்த முனையவில்லை.

10. இலங்கை தேசிய காங்கிரஸ்,
   1) புதிய மத்தியதர வர்க்கத்தினால் தலைமைதாங்கப்பட்டது.
   2) இதன் இன்றைய வடிவமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.
   3) யாப்புகள் அதிகாரங்களை வேண்டியது.
   4) இந்திய தேசிய காங்கிரஸை விட பலவீனமாகக் காணப்பட்டது.

*** 11-20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் நான்கு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

11. டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு பூரண பொறுப்பாட்சி வழங்காமைக்கான காரணங்கள்,
   A - இலங்கைத் தலைவர்களிடம் முதிர்ச்சித்தன்மை இன்மை.
   B - சமூகங்களாக மக்கள் பிரிந்து காணப்பட்டமை.
   C - கண்டித் தலைமைகளின் எதிர்ப்பு.
   D - இலங்கையில் கட்சிகள் தோற்றம்பெறாமை.
   1) ABD 2) CDA 3) BCD 4) ABC

12. டொனமூர் அமைச்சரவை கொண்டிருந்த விசேட தன்மைகள்,
   A - பிரதமரின் தலைமைத்துவம்.
   B - அரசாங்க காரியதரிசிகளின் பங்களிப்பு.
   C - இரட்டைப் பொறுப்புடைமை.
   D - அமைச்சரவைக்குள் இன்னோர் அமைச்சரவை காணப்பட்டமை.
   1) ABC 2) BCD 3) CDA 4) DAB

13. டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் அரசாங்க சபை,
   A - 61 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
   B - சட்டம், நிர்வாகக் கடமைகளைப் பெற்றிருந்தது.
   C - தேசாதிபதியினால் வழிநடத்தப்பட்டது.
   D - போதிய இறைமை பெற்ற சபையாகக் காணப்படவில்லை.
   1) BCD 2) ABC 3) DAB 4) CDA

14. 1931ஆம் ஆண்டு அறிமுகமான அரசியலமைப்பு,
   A - சட்ட நிர்வாக சபையை இல்லாதொழித்தது.
   B - 7/10 பங்கு பொறுப்பாட்சியை வழங்கியது.
   C - இனவாரிப் பிரதிநிதித்துவத்தை நீக்கியது.
   D - பிரதமரே நிர்வாகத் தலைவராவார்.
   1) DAB 2) CDA 3) BCD 4) ABC

15. சோல்பரி யாப்பில் இடம்பெற்ற சிறுபான்மையினருக்கான பாதுகாப்புகள்,
   A - பொதுச்சேவை ஆணைக்குழு.
   B - பிரிவுக் கவுன்சில்.
   C - இனவாரிப் பிரதிநிதித்துவம்.
   D - இரண்டாம் மன்றம்.
   1) DAB 2) ABC 3) BCD 4) CDA

16. சோல்பரி யாப்பின் கீழ் மகாதேசாதிபதி,
   A - பிரதமரினால் நியமிக்கப்படுவார்.
   B - பிரித்தானிய மரபைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்.
   C - அரசின் நாம நிர்வாகியாவார்.
   D - அரசின் தலைவராவார்.
   1) DAB 2) CDA 3) ABC 4) BCD

17. சோல்பரி அரசியலமைப்பு,
   A - இலங்கைக்குப் பூரண சுதந்திரத்தை வழங்கியது.
   B - பாராளுமன்ற அரசியல் முறையை அறிமுகப்படுத்தியது.
   C - இருமன்ற சட்டத்துறையை ஸ்தாபித்தது.
   D - கட்சிமுறை அரசாங்கத்தை அறிமுகப்படுத்தியது.
   1) BCD 2) ABC 3) DAB 4) CDA

18. சோல்பரி அரசியலமைப்பின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழு,
   A - மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
   B - மகா தேசாதிபதியின் நியமன உறுப்பினர்கள்.
   C - கபினெட்டின் ஆலோசனையில் இயங்கியது.
   D - அரச சேவையின் ஆளணி நிர்வாக அதிகாரத்தைக் கொண்டிருந்தது.
   1) ABC 2) DAB 3) BCD 4) CDA

19. சோல்பரி யாப்பின் கீழ் செனற் சபை,
   A - முழு இறைமை பெற்ற சபையாகும்.
   B - சிறுபான்மையினருக்குக் காப்பீடாகக் காணப்பட்டது.
   C - சட்டசபையை வினைத்திறனாக்கியது.
   D - நியமன உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
   1) DAB 2) ABC 3) BCD 4) CDA

20. சோல்பரி யாப்பின் கீழ் மந்திரிசபை,
   A - பிரதம மந்திரியால் தலைமைதாங்கப்பட்டது.
   B - கூட்டுப்பொறுப்புத் தத்துவத்தைக் கொண்டது.
   C - பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டது.
   D - மகா தேசாதிபதியை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டது.
   1) BCD 2) CDA 3) DAB 4) ABC

*** 1833 ஆம், 1912 ஆம் அரசியல் சீர்திருத்த அமைப்புக்களில் காணப்பட்ட பண்புகளைக்கொண்டு 21ஆம், 22ஆம் வினாக்களுக்கு விடை தருக.**
   A - முதன்முதலில் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம்.
   B - உத்தியோகப் பற்றுள்ளவர்கள் ஒன்பதுபேர் காணப்பட்டனர்.
   C - சேர்.பொன்னம்பலம் இராமநாதன் பிரதிநிதியானார்.
   D - நீதிச் சீர்திருத்தம் கமரனால் அறிமுகம்.
   E - சேர் ஆர்.வில்மட் ஹோட்டன் ஆளுநராகக் காணப்பட்டார்.
   F - உத்தியோகப் பற்றற்ற 10 பேர் பிரதிநிதிகளாக இருந்தனர்.

21. 1912 ஆம் ஆண்டு செய்யப்பட்ட அரசியல் சீர்திருத்தத்துடன் பொருந்தும் சேர்மானத்தைத் தருக.
   1) FEA 2) ACF 3) EBC 4) CDA

22. 1833 ஆம் ஆண்டு அறிமுகமான அரசியல் சீர்திருத்தத்திற்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.
   1) BDE 2) FCE 3) ACF 4) BDC

*** மனிங் அரசியல் சீர்திருத்தம், மனிங் டிவன்சயர் அரசியல் சீர்திருத்தம் என்பவற்றைக் கொண்டு 23ஆம், 24ஆம் வினாக்களுக்கு விடை தருக.**
   A - மேல்மாகாணத் தமிழர்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம்.
   B - இனவாரியாக ஆறுபேர் தெரிவுசெய்யப்பட்டனர்.
   C - சட்டவாக்க சபையில் 37 உறுப்பினர்கள் காணப்பட்டனர்.
   D - சபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் 23 பேர்.
   E - உத்தியோகப் பற்றுள்ளவர்கள் 12 பேர்.
   F - சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.

*(13 ஆம் பக்கம் பார்க்க)*



ஆசிரியர்:- S.A.யோதிலிங்கம் B.A (Hons), MA,
கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியார் மடம், கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 உயர்தர மாணவர்களுக்காக பிரபல ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

## அரசியல் விஞ்ஞான மூலத்துவங்கள், பகுதி - I தொடர்ச்சி......

23. மனிங் அரசியல் சீர்திருத்தத்திற்கு தொடர்புடைய சேர்மானத்தைத் தருக.
1) DBA 2) ABC 3) DCE 4) FDC

24. மனிங் டிவன்சயர் அரசியல் சீர்திருத்தத்திற்குப் பொருந்தும் கூற்றுக்களின் தொகுதியைத் தருக.
1) AED 2) ABF 3) BAE 4) DBA

✱ **கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களின் அடிப்படையில் 25ஆம், 26ஆம் வினாக்களுக்கு விடை தருக.**
A - இலங்கையின் முதலாவது யாப்பு.
B - இரு அவைகளைக் கொண்ட சட்டவாக்கத்துறை
C - சர்வஜன வாக்குரிமை அறிமுகம்.
D - டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டது.
E - லங்கா சமசமாஜக் கட்சி உருவானது.
F - அரசாங்கச்சேவை ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

25. டொனமூர் அரசமைப்பில் காணப்பட்ட அம்சங்களைக் கொண்ட சேர்மானத்தைத் தருக.
1) AFB 2) CEA 3) BEA 4) ECF

26. சோல்பரி யாப்பின் கீழ் காணப்பட்ட அம்சங்களைக் கொண்ட கூற்றுக்களின் தொகுதியைத் தருக.
1) BFA 2) BFD 3) CEA 4) ABE

✱ **முதலாம் குடியரசு யாப்பு, 2ஆம் குடியரசு யாப்புகளின் கீழ் காணப்பட்ட அம்சங்களை இனங்கண்டு 27ஆம், 28ஆம் வினாக்களுக்கு சரியான விடைகளைத் தருக.**
A - ஒம்புட்ஸ்மன் பதவி காணப்பட்டது.
B - விகிதசம பிரதிநிதித்துவ தேர்தல்முறை அறிமுகம்.
C - அரசியலமைப்பு நீதிமன்றம்.
D - தேசிய அரசுப் பேரவை சட்டவாக்க சபை.
E - ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்கப்பட்டது.
F - பெயரளவு நிர்வாகியாக ஜனாதிபதி.

27. 2ஆம் குடியரசு அரசியல் யாப்பின் கீழ் உள்ள அம்சங்களைக் காட்டும் சரியான சேர்மானத்தைத் தருக.
1) BEA 2) ABC 3) DCB 4) FED

28. முதலாம் குடியரசு யாப்பின் கீழ் உள்ள அம்சங்களைக் காட்டும் சரியா கூற்றுக்களின் தொகுதியை இனங்காண்க.
1) DFE 2) BCA 3) DBC 4) DCF

✱ **29-32 வரையுள்ள வினாவுக்குரிய கூற்றுக்களில் மூன்று பிழையானவை ஆகும். பிழையான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவுசெய்க.**

29. 1972 முதலாம் குடியரசு யாப்பு,
A - இலங்கை முதலாளித்துவ ஜனநாயக நாடாக அறிமுகமாகியது.
B - இலங்கையை சமயசார்பற்ற அரசாக மாற்றியது.
C - முழு இறைமைக் மிக்க நாடாக மாறியது.
D - முடியாட்சி தொடர்ந்தும் பேணப்பட்டது.
1) DAB 2) BCD 3) ABC 4) CDA

30. 1978 இரண்டாம் குடியரசு யாப்பு,
A - சமஷ்டி தன்மைகளை உடையது.
B - பாராளுமன்றம் சார்ந்தும் சாராத தன்மையும் உடையது.
C - அரசியலையமைப்பு நீதிமன்றத்தை நிறுவியது.
D - ஒன்றிய அரசாக மாறியது
1) BCD 2) ABC 3) DAB 4) CDA

31. இரண்டாம் அகுடியரசு யாப்பின் கீழ் உயர் நீதிமன்றம்,
A - அடிப்படைச் சட்டத்தில் இருந்து நீதி அதிகாரத்தைப் பெற்றது.
B - பிரதமநீதியரசரையும் ஏனைய 12 நீதிபதிகளையும் கொண்டது.
C - பாராளுமன்றத்திமில் தேர்தல் ஆட்சேபணைக மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் கொண்டது.
D - தடையாணை பிறப்பிக்கும் நியாயதிகக்கத்தைக் கொண்டது.
1) DAB 2) ABC 3) BCD 4) CDA

32. முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதி,
A - பிரதம மந்திரியால் பதவி நீக்க முடியும்.
B - சோல்பரியில் காணப்பட்ட மகாதேசாதிபதியை போன்றவர்.
C - நிறைவேற்று அதிகாரம் காணப்பட்டது.
D - காணி மற்றும் நன்கொடை வழங்கும் அதிகாரம் காணப்பட்டது.
1) DAB 2) ABC 3) BCD 4) CDA

✱ **33-35 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்களுயுக்குமுரிய பொருத்தமற்ற கூற்றைத் தெரிவுசெய்க.**

33. 1978 ஆண்டு யாபப்பின் கீழ் ஒரு முதலமைச்சர்,
1) ஆளுநரால் நியமிக்கப்படுவார்.
2) மாகாண சபையில் ஆளும் கட்சியின் தலைவர்.
3) கட்சியின் கொள்கை விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பவர்.
4) மாகாணசபையில் வெற்றிப் பெற்ற உறுப்பினர்களால் தெரியப்படுவார்.

34. நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர்,
1) பகிரங்க சேவை ஆணைக்குழுவால் பதவி நீக்க முடியும்.
2) குறைகேள் அதிகாரி! எனவும் அழைக்கப்படுவார்.
3) பொதுத்துறையில் ஏற்படும் உரிமை மீறல்களைப் பரிசோதிப்பார்.
4) 2 ஆம் குடியரசு அரசியலமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

35. இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் பிரதேச சபைகள்,
1) உள்ளூர் மன்ற அமைப்பின் கீழ் மட்ட அலகுகளாகும்.
2) வருமானத்தை திரட்டுவதில் மபகாண சபையில் தங்கியுள்ளது.
3) இணக்க சபைகளை மேற்பார்வை செய்வதற்கு அதிகாரம் பெற்றது.
4) கிராமங்களில் ஜனசமூக அபிலிருத்தி வேலைகளுக்குப் பொறுப்பாயுள்ளது.

✱ **36-40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் இரு கூற்றுகளைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்குப் பின்வரும் 1 இற்கான வழிக்காட்டியில் உள்ள 1,2,3 அல்லது 4 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகின்றது என்பதைத் தெரிவுசெய்து அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

அட்டவணை 1 இற்கான வழிகாட்டி

| இலக்கம் | கூற்று 1 | கூற்று 2 |
|---|---|---|
| 1 | உண்மை | பொய் |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | உண்மை |

| கூற்று 1 | கூற்று 2 |
|---|---|
| 36. ஐக்கிய நாடுகள் தாபனம் இன்றைய உலகிலுள்ள மிகப் பெரிய அரச சார்பு நிறுவனமாகும். | கடந்த ஆறு தசாப்தங்களாக அரசியல், பொருளாதார சமூக பரப்புகளில் சர்வதேசஒத்துழைப்பை மேம்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் தாபனம் பெரும் பங்காற்றியது. |
| 37. 1984 இல் இந்தியாவின் தலைமையின் கீழ் சார்க் அமைப்பு உத்தியோக பூர்வமாகத் தாபிக்கப்பட்டது. | உறுப்பு நாடுகளுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக சார்க் அமைப்பின் முன்னேற்றம் பலவீனமடைந்தது. |
| 38. 1965 இற்குப் பின்னர் இலங்கையின் அரசியல் கட்சி முறை இரு கூட்டுக் கட்சி முறையாக மாறியுள்ளது. | 1997 இலிருந்து இலங்கைக் கட்சி முறையில் கூட்டுகளை ஏற்படுத்துதல் ஓர் ஆர்வமான தோற்றப்பாடாக மாறியுள்ளது. |
| 39. ஒரு மாகாண ஆளுநர் அரசியலமைப்பு பேரவையால் நியமிக்கப்படுகிறார். | ஒரு மாகாண ஆளுநரை பதவி விலக்கும் தற்துணிவு அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. |
| 40. முதலாம் குடியர யாப்பின் கீழ் அரசியல் யாப்பு நீதிமன்றம் யாப்பின் காவல் நாயகப் பணியாற்றுகின்றது. | அரசியல் யாப்பு நீதிமன்றம் தேசிய அரசுப் பேரவையால் ஆக்கப்படும் சட்டங்களைப் புரனாய்வு செய்வதற்கு அதிகாரம் பெற்றிருந்தது. |

## பகுதி - II

✱ **நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01. இலங்கை தேசிய காங்கிரசோடு தொடர்புபடுத்தி பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.
1) தலைமைத்துவத்தின் இயல்பு.
2) கடைப்பிடித்த உபாயங்கள்.
3) சிங்கள-தமிழ் மோதலின் விளைவு.

02. இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு மைல்கல் டொனமூர் அரசியல் அமைப்பு ஆகும். இக்கூற்றை ஆராய்க.

03. பின்வருவனவற்றோடு தொடர்புபடுத்தி சோல்பரி யாப்பின் கீழ் 29 ஆம் சரத்தைப் பரிசீலணை செய்க.
1) சட்டத்துறைக்குக் காணப்பட்ட சட்டவாக்க அதிகாரம்.
2) சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
3) சட்டவாக்கம் பற்றிய நீதிப்புனராய்வு அதிகாரம்.

04. 1972ஆம் ஆண்டு, 1978ஆம் ஆண்டு யாப்புக்களின் கீழ் பின்வருவனவற்றை ஆராய்க.
1) வாக்காளருக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையிலான தொடர்பு.
2) அரசாங்கத்தின் உறுதிப்பாடு.
3) அரசியல் நிர்வாகத்தைப் பதவியில் இருந்து அகற்றும் முறை.

05. இலங்கையில் அரசாங்க அதிகாரங்கள் யாப்புரீதியாக பகிரப்பட்டுக் காணப்படுகின்றமையை பரிசீலணை செய்து ஒரு கட்டுரை வரைக.

06. பின்வருவன தொடர்பாக தற்கால அரசியலமைப்பில் காணப்படும் ஏற்பாடுகளை விமர்சன ரீதியில் விளக்குக.
1) 3ஆவது திருத்தம்.
2) ஒப்பங்கோடல். 3) ஒம்புட்ஸ்மன்.

07. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.
1) தற்போதைய உயர்நீதிமன்றத்தின் நீதியதிகாரம்.
2) இலங்கையில் முதலாவது வலதுசாரிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.
3) ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான முயற்சிகள்.
4) 17ஆம் திருத்தச் சட்டம்.
5) இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை.

(நிறைவுற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு உளவியல் பாதிப்பு!

## நோர்வே சிறுவர் பாதுகாப்பு அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 09

வடபகுதியில் இடம்பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் காரணமாகவும், அகதிமுகாம்களில் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டதாலும் ஒரு இல்ட்சத்திற்கு மேறபட்ட சிறுவர்கள் உளவியல் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என நோர்வேயைத் தளமாகக் கொண்ட ரெட்பானா எனும் சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் உதவிப் பணியாளர் விடர் ஸ்ரோம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த முகாம்களுக்குச் செல்லும் அனுமதிகள் கடந்த வருடம் டிசெம்பர் முதலாம் திகதிக் குப் பின்னரே எமது நிறுவனத்திற்கு கிடைத்தன. முகாம்களில் உள்ள சிறுவர்களுக்கு அங்கு ஒரு நட்புறவுள்ள சூழலை ஏற்ப டுத்த நாம் முயன்றிருந்தோம். மிகவும் அசாதாரண சூழ்நிலை களை சாதாரண சூழ்நிலைகளாக மாற்றுவதே எமது நோக்கம்.

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வசதி மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்வதை எமது அமைப்பு மேற்கொண்டு வந்தது.

இலங்கையில் நாம் முன்னெடுத்துள்ள ஐந்தாவது திட்டம் இது. சிறுவர்களுக்கு அவர்களின் தேவைகளை புரிந்து கொண்ட பெரியவர்களின் உதவிகள் தேவை. நாம் பெற்றோருக்கும், ஆசியர்களுக்கும் பயிற்சிகளையும் வழங்கியிருந்தோம்.

வடபகுதியில் போரினால் பாதிக் கப்பட்ட இந்த சிறுவர்கள் முற்றுமுழுதாக உதவிகளில் தங்கியுள்ளனர்.

எனவே, எமது பணி அவர்களை பாது காப்பதாகும். ஒரு மனி தாபிமான அமைப் பில் பணிபுரிவதையிட்டும், முகாமுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதையிட்டும் நான் மகிழ்ச்சி அடைகிறேன் - என்றார்.

(அ-சி)


## சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம் (வது) சுன்னாகம்

கீழ்குறிப்பிடப்படும் நிரந்தர பதவிகளுக்குத் தகுதியான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01.பொது முகாமையாளர்:** குறி.இல. 101-08

சம்பளத் திட்டம்: 11200-14100 / 140X10,150X10

**தகைமை**

அ) கூட்டுவுப் பணியாளர் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை மேற்பார்வை மட்டப் பதவியில் மூன்று வருடங் களுக்குக் குறையாத அனுவபம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது.

ஆ) அங்கீகரிக்கப்ட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக் கப்பட்ட வர்த்தக/கைத்தொழில்/ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டப் பதவியில் 4வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) க.பொ.த.உயர்தரப் பத்திரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**02.கணக்காளர்:** குறி.இல 104:9

சம்பளத்திட்டம் 10950 -13650 / 130X10,140X10

**தகைமை**

அ) கூட்டுறவுப்பணியாளரின் 10ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கு அல்லது உட்துறைக் கணக்காய்வு லிகிதர் பதவியில் 3வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டு றவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது உட்துறைக் கணக்காய்வாளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 6வருடங்களுக்குத் குறையாத அனுபவம்.

ஆ) ஐக்கிய இராச்சியத்தில் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில்/ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத்துறையிலான 4வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப்பத்திரம்/க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியல் பாடத்திலான சித்தி அடங்கலாக 3பாடங்களில் சித்தியும் ஆறு வருடங்களுக்குத் குறையாத அங்கீகரிக்கப்ட்ட வர்த்தக/கைத்தொழில்/ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான அனுபவம்.

**வயது:** விண்ணப்ப முடிவு திகதியன்று 23வயதுக்கு குறையாமலும் 45வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக விவரங்களையும் சங்கத் தலைமை அலுவலகத்தில் வேலை நாள்களில் ரூ 10/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். சங்கப் பணியாளர்கள் தத்தமது சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 23.03.2010**

சி.குமரவேல்,
தலைவர்.

09.03.2010 (சி/565563)


# பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்: பாலிதவின் கனேடிய விஜயம் ரத்து

கொழும்பு, மார்ச் 09

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்னவின் கனேடிய விஜயம் இறுதி நேரத்தில் ரத்து செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த விஜயம் ரத்து செய் யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் கனேடிய மாணவர் அமைப்புக்கள் எதிர்ப்பு வெளியிட்ட காரணத்தால் இந்த விஜயம் ரத்து செய்யப்பட்டுள்ளது என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள் ளது.

டொரன்டோ முன்க் பல்கலைக்கழகத் தில் நடைபெறவிருந்த விசேட விரிவுரை ஒன்றில் கொஹன்ன கலந்து கொள்ளவி ருந்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கொஹன் னவின் விஜயம் ஒத்தி வைக்கப்பட்டுள் ளது என பல்கலைக்கழகத்தின் பணிப்பா ளர் மாக்ரேட் மெக்கோன் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் நபரொரு வர் விரிவுரை நடத்தக், கூடாது என மாணவர் அமைப்புகள் எதிர்ப்பு வெளியிட் டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தத் தகவல்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு இதுவரையில் கருத்து எதனையும் வெளியிட வில்லை எனக் கூறப்படுகிறது.

## இப்போதைய பொதுத்......

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தலைவர் பிரபாகரனால் நியமிக்கப்பட இரு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஹிந்த அரசி டம் சரணாகதி அடைந்துள்ளனர். தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு, மஹிந்தவின் சிந்தனையை ஏற்றுக்கொண்ட இவர்கள் பற்றி புலம்பெயர் தமிழர்களோ, ஊடகங்களோ பெரிதாகக் கூறுவதில்லை.

ஜனாதிபதித் தேர்தலின்போது சிறீகாந்தா, சிவாஜிலிங் கம் ஆகியோர் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி தனிவழி யில் செயற்பட்டனர் . இவர்கள் பற்றி புலம்பெயர் ஊட கங்கள் அவ்வளவாக அலட்டுவதில்லை.

இப்படியானவர்களை நடைபெறவுள்ள நாடாளுமன் றத் தேர்தலில் சேர்த்துக் கொள்ளமுடியுமா? அவர்கள் பிளவு தலைமையால் ஏற்பட்டது என்று பிரசாரம் செய்பவர்க ளும் புலம்பெயர் நாடுகளில் இருக்கின்றார்கள்.

கஜேந்திரகுமார், திருமதி பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரன் செல்வராசா ஆகியோரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியேறவிட்டிருக்கக் கூடாது. அரசியல் விவேகமுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் மூவரையும் த.தே.கூட்டமைப்பு, வேட்பாளர் பட்டியலில் கட்டாயம் சேர்த்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதமைக்கான காரணங்களை எம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை.

அதற்கான விளக்கத்தை தலைமை வெளியிடும் என எதிர்பார்க்கின் றோம். என்ன விளக்கத்தைக் கொடுத் தாலும் எமது பார்வையில் அவர்க ளைச் சேர்த்துக் கொள்ளாதமை தவறு என்பதைச்சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எது, எப்படியென்றாலும் த.தே.கூட் டமைப்பு என்ற ஒரு தமிழ் அரசியல் கட்சிதான் தமிழர் தாயகத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் வேட்பாளர் களை நிறுத்தியுள்ளது. அவர்களில் பெரும்பான்மையானவர்களின் வெற்றியிலேயே தமிழர்களின் எதிர் காலம் தங்கியுள்ளது. எனவே, புலம் பெயர் தமிழர்கள் அவர்களுக்குப் பூரண ஆதரவை நல்க வேண்டி யது அவசியமா கும்.


## விற்பனைக்கு

10½அடி நீளமுடைய ஐஸ்கிரீம் விற்பனைக்குப் பயன்படுத்தும் ELF பொடி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776099071 (95574)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் ஐந்து பரப்புக் காணியுடன் கூடிய கல்வீடு வளவு விற்பனைக்குண்டு.
நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: முருகன் நகை மாளிகை, சாவகச்சேரி. தொ.பே.0775369798 (95515)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## மூன்றாம் ஆண்டின் நினைவலைகள்



### கந்தன் வைத்திலிங்கம்

திதி: நவமி

மலர்வு 16.08.1950 உதிர்வு 13.03.2007

மூன்றாம் ஆண்டு வந்தது அப்பா குறையவில்லை நம் கவலை
அன்புக்கோர் இலக்கணமாய், சங்கிலி வைரவப்பெருமானின்
நல்ல பக்தனாய்
இனிய நல்ல அன்புக் கணவனாய், கடமை உணர்வும், நற்பண்பும்
உடைய தந்தையாய்
அனைவருக்கும் நல்லவனாய், பாரில் பலர் போற்றுபவனாய்
கற்றவரும் மற்றவரும் பண்புள்ளவன் என்று புகழ்பாட
இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டிய
உங்களை மூன்று ஆண்டுகளென்ன எமது ஆயுள் காலம் வரை
ஆறாது நம் துயரம்!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (09.03.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

(95580)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 11-02-1929 ஆண்டவன் பிடியில் 07-02-2010

### சிதம்பரப்பிள்ளை செல்லையா



எம் அன்புத் தந்தையே!
எங்கு சென்றாய் எங்களைப் பாதியில் தவிக்கவிட்டு
நாள்கள் 31 ஆகிவிட்டது எம் பதபதைப்பு இன்னும்
தேட்கவில்லையோ, மீண்டும் வருவாயோ ஆறுதல் அளிக்க,
வித்தாகிப் போன பின்பும் எம் மனதில்
விருட்சமாய் வேரூன்றி வாழ்கின்றாய்
ஆறாது எம் வேதனைகள்
தீராது எம் துயரங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி
நிற்கின்றோம்.

நிரந்தர முகவரி:
ஸ்ரீபவனம்,
பிலாலி மத்தி, வயாவிளான்

குடும்பத்தினர்,
கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

(95441)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.06.1989

* கடந்த 48 மணி நேரத்தில் தென்னிலங்கையில் இடம்பெற்ற பல்வேறு அசம்பாவிதங்களில் மாகாணசபை உறுப்பினர்கள் இருவர் உட்பட 18 பேர் தென் பகுதித் தீவிரவாதிகளால் கொலை.
* இந்திய அமைதிப்படையை வெளியேற்றி இலங்கை அரச படைகளைத் தமிழ்ப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் ஜனாதிபதி பிரேமதாஸ தமிழ் இனத்தை அழிக்க முயல்கின்றார் என வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவிப்பு.

17.06.1989

* அரசமைப்புச் சட்டத்துக்கு 17ஆவது திருத்தம் கொண்டுவரப்படவுள்ளதாக அரசதரப்பில் தெரிவிப்பு.
* எதிர்வரும் ஜீலை 29ஆம் திகதிக்கு முன்னர் இந்திய அமைதிப்படையை இந்திய அரசு வாபஸ் பெற்றாக வேண்டும். இந்த விடயத்தில் வேறு பேச்சுக்கே இடமில்லை என ஜனாதிபதி பிரேமதாஸ நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவிப்பு.
* அமைதிப்படையை வாபஸ் பெறுமாறு இலங்கை ஜனாதிபதி எழுதிய கடிதத்துக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி பதிலளிப்பார் என இந்தியஅரச வட்டாரங்கள் தெரிவிப்பு.

18.06.1989

* நிர்வாகத்தைப் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப் படுத்துவது அந்தந்த மாகாணசபைகளுக்குரிய பொறுப்பாகும் என வெளிநாட்டு அமைச்சின் அறிக்கையில் தெரிவிப்பு.
* கொழும்பில் நடைபெறவுள்ள 'சார்க்' அமைப்பு மாநாட்டில் பாதுகாப்புக் காரணங்களைக் கருதி இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கலந்து கொள்ளமாட்டார் எனத் தெரிவிப்பு.

19.06.1989

* 'தமிழீழம்' என்ற தனிநாட்டுக் கோரிக்கையை இந்தியா ஆதரிக்கக் கூடும்போல எனக்குத் தோன்றுகிறது என தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு.
* இலங்கையில் நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப்படையினரை இலங்கையும் இந்தியாவும் வகுக்கும் கூட்டுத்திட்டம் ஒன்றின் அடிப்படையிலேயே திருப்பி அழைக்க முடியுமென இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்துவார் எனத் தெரிவிப்பு.

20.06.1989

* இந்திய அமைதிப் படையைத் திருப்பி அனுப்புவது தொடர்பான விடயத்தை ஐ.நா.சபைக்கு எடுத்துச் செல்ல இலங்கை அரசு ஆலோசித்து வருவதான செய்தியை இலங்கை அரசிடமிருந்து உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்திக் கொள்ள இந்தியா எதிர்பார்ப்பதாகத் தெரிவிப்பு.
* இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரக இரண்டாவது செயலாளர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து ஜப்பான் அரசால் வழங்கப்பட்ட வைத்திய உபகரணங்களைப் பார்வையிட்டார்.

21.06.1989

* ஐந்து மாதகால இடைவெளியின் பின்னர் மீண்டும் நாட்டில் அவரசகாலச் சட்டம் ஜனாதிபதி பிரேமதாஸாவால் பிறப்பிப்பு.
* இலங்கையில் நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப் படையினரால் வடக்கு கிழக்குப் பகுதியில் இயங்கும் தமிழ்க் கிளர்ச்சியாளர்களிடமிருந்து ஆயுதங்களை முற்றாகக் களைய முடியவில்லை என பிரதமர் டி.பி. விஜயதுங்க நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

22.06.1989

* அதிகாரப் பரவலாக்கல் முறையாக அமுல் படுத்தப்பட்ட பின்னரே அமைதிப்படையை இந்தியா திருப்பி அழைக்கும் என இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிப்பு.
* இந்திய அமைதிப் படையைத் திருப்பி அனுப்பும் விவகாரத்தை இலங்கை அரசு சர்வதேச அரங்குக்கு எடுத்துச்செல்லும் முயற்சியில் ஈடுபடவில்லைஎன நாடாளுமன்றத்தில் வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

23.06.1989

* இலங்கையின் அரசியல் நிலைமைபற்றி ஆராய்வதற்காக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் அனுப்பப்பட்ட அவரது விசேட பிரதிநிதியும் ஜெய்ப்பூரின் முன்னாள் மகாராஜாவுமான பவானிசிங் கொழும்பில் இரு வாரங்கள் தங்கியிருந்து நிலைமைகளை ஆராய்ந்து திரும்பினார்.
* ஜே.வி.பி இயக்கத்தின் அச்சுறுத்தல்களை அடுத்து கொழும்பு ஹோட்டல்களில் தங்கியிருந்த இந்தியத் தூதரகப் பிரமுகர்கள் தத்தமது உத்தியோகபூர்வ இல்லங்களுக்குத் திரும்பிச்செல்ல ஆரம்பிப்பு.

24.06.1989

* ஜீலை முடிவுக்குள் இந்திய அமைதிப் படை இலங்கையிலிருந்து விலகியே ஆகவேண்டும்; இல்லையேல் முகாம்களிலேயே தங்கியிருக்க வேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸ திட்டவட்டமாக அறிவிப்பு.
* இலங்கை சமர்ப்பித்த நட்புறவு ஒப்பந்த யோசனையை இந்தியா அலட்சியப்படுத்துவது தொடர்பாகவும், இந்திய அமைதிப் படையை வாபஸ் பெறுமாறு கோரியதை இந்தியா ஏற்காதது குறித்தும் இந்தியப் பிரதமரிடம் விளக்கம் கோருமாறு இலங்கை ஜனாதிபதிக்கு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு வற்புறுத்தல் விடுப்பு.

25.06.1989

* இலங்கையில் இந்திய அமைதிப்படை தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பது மற்றும் அமைதிப்படையை விலகிக்கொள்ளுமாறு இலங்கை ஜனாதிபதி கோரிவருவது என்பவை தொடர்பாக பாகிஸ்தானில் நடைக்க இருக்கும் சார்க் அமைச்சின் அமைச்சர்கள் மாநாட்டில் பரிசீலிக்கப்படுமென பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு.
* அமைதிப்படை விலக்கல் தொடர்பாக இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தின் விவரங்கள் இதுவரை பகிரங்கமாக வெளியிடப்படவில்லை என கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு.

26.06.1989

* ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா டானியல் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.
* தென்னிலங்கை மக்களது கோபத்திலிருந்து அரசைக் காப்பாற்றும் நோக்கிலேயே ஜனாதிபதி பிரேமதாஸ அமைதிப்படை வெளியேறக் காலக்கெடு விதித்துள்ளதாக ஈழத்தொழிற்சங்க சம்மேளனம் விடுத்த அறிக்கையில் தெரிவிப்பு.

27.06.1989

* ஜே.வி.பி இயக்கம் விடுத்த ஊரடங்கு அறிவிப்பையடுத்து நேற்று தென்பகுதியில் இயல்புநிலை பாதிப்பு. போக்குவரத்து ஸ்தம்பிதம்.
* அமைதிப்படையை விலக்கிக்கொள்வதில் இந்தியா கடைபிடித்துவரும் போக்கை ஆட்சேபிக்கும் விதத்தில் பாகிஸ்தானில் அடுத்த வாரம் இடம்பெறவிருக்கும் அமைச்சர்கள் மட்டத்திலான சார்க் மாநாட்டைப் பகிஷ்கரிக்கப் போவதாக இலங்கை அரசு தெரிவிப்பு.

28.06.1989

* அமைச்சர்கள் மட்டத்திலான 'சார்க்' மகாநாட்டைப்புறக்கணிப்பதென இலங்கை அரசு எடுத்த முடிவையடுத்து அம்மாநாட்டுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்காக நடக்கவிருந்த வெளியுறவுச் செயலாளர்கள் கூட்டம் திட்டமிட்டபடி நடக்கவில்லை.
* எழுத்தால், சைகையால் அல்லது பேச்சால் ஒருவருக்கு மரணம் அல்லது காயங்கள் ஏற்படுத்தும், பயமுறுத்தல் விடுக்கும் நபருக்கு மரணதண்டனை விதிக்கும் அவசர காலச் சட்டவிதி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசு அறிவிப்பு.

29.06.1989

* வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து அமைதிப்படையை படிப்படியாக வாபஸ் பெற்று வந்த இந்தியா, தனது அத்தகைய நடவடிக்கையைத் திடீரென நிறுத்திக் கொண்டுள்ளதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.
* இணைப்பை நிரந்தரமாக்குவது தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் ஜீலை மாதம் முதல் வாரத்தில் நடத்த இருந்த சர்வசன வாக்கெடுப்பை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வரை ஒத்திவைப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸ பிரகடனம்.

30.06.1989

* இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை ஒத்துழைப்பு உணர்வுடன் தீர்ப்பதற்குத் தாம் விரும்புவதாக இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸ இந்தியத் தூதுவர் மெஹ்ரோத்ராவிடம் தெரிவிப்பு.
* தற்போதைய இலங்கை-இந்திய ஊராய்வு நிலை குறித்து பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிலைப்பாட்டை இந்திய அரசு [illegible] ஊகம் தெரிவிப்பு.

# சிவிலியன்கள் உட்பட 31 பேரிடமிருந்து பொன்சேகாவுக்கு எதிராக சாட்சியங்கள்

## பிரசாத் சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக சரத் பொன்சேகாவுக்கு எதிராகப் பதியப்பட்ட சாட்சியங்கள் அடங்கிய முழுமையான அறிக்கை இராணுவத் தளபதியிடம் இந்த வாரம் கையளிக்கப்படவிருக்கிறது என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

10 சிவிலியன்கள் உட்பட 31 பேரிடமிருந்தும் சரத் பொன்சேகாவுக்கு எதிராக சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் (ரெக்னிகல் எவிடன்ஸ்) தொழில்நுட்ப சாட்சியங்களும் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.

மேற்படி சாட்சியங்களின் அடிப்படையில் சரத் பொன்சேகாவுக்கு எதிராக இராணுவ நீதிமன்றில் விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். இதேபோன்று சமகாலத்தில் சரத் பொன்சேகாவுக்கும் அவருடன் தொடர்புடைய தனுன, அசோக்கா ஆகியோருக்கு எதிராகவும் பணப் பரிமாற்ற மோசடி தொடர்பாக சாதாரண சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவுள்ளது.

இதற்குத் தேவையான ஆதாரங்கள், வாக்கு மூலங்கள் அனைத்தும் ஆவணப் படுத்தப்பட்டுள்ளதுடன், இவையும் விரைவில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரிஷாந்த ஜயகொடி தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போதே அவர்கள் இவற்றைத் தெரிவித்தனர்.

இராணுவ நீதிமன்றத்தில் சரத் பொன்சேகாவின் விசாரணைகள் நடைபெறும் போது ஊடகங்களை அனுமதிப்பீர்களா என செய்தியாளர் ஒருவர் கேட்டபோது -

அவ்வாறான ஒரு நடைமுறை உலகில் வேறு எங்கும் நடந்ததாக தெரியவில்லை. எனினும், விசாரணைகளின் முடிவுகள் குறித்து இராணுவப் பேச்சாளர் ஊடாக அறிந்துகொள்ள முடியும் - என்றார். (சி)

# ஐ.நா. சபை மனித உரிமைப் பேரவையின் கருத்துக் குறித்து கவனம் செலுத்தப்படும்

## சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையால் இலங்கை குறித்து முன்வைக் கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் - என்று சட்ட மா அதியர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை பாதுகாப்பு மற்றும் மனித உரிமை மேம்பாடு தொடர்பில் பேரவையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளையால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைத் திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பூரண விசாரணை நடத்தி சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மனித உரிமை என்ற போர்வையில் வேறும் அரசியல் நோக்கங்களை அடைவதற்கு சில சக்திகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் அரசு உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் - என்றார். (சி)

# இலங்கை ஊடகவியலாளர் எதிர்நோக்கும் சவால்கள் அமெரிக்கா கவனம் செலுத்துவதாகத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

இலங்கை ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கி வரும் சவாலகள் தொடர்பில் அமெரிக்கா கவனம் செலுத்தி வருகிறது என அந்நாட்டுத் தூதர் அறிவித்துள்ளார்.

துரதிஸ்டவசமாக அண்மைக்காலமாக இலங்கை ஊடகவியலாளர்கள் பல்வேறு சவால்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என இலங்கைக்கான அமெரிக்கப் பிரதித் தூதுவர் வெளரி பிளவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஊடகக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு ஊடகவியலாளர்கள் அஞ்சுகின்றனர். அவர்கள் சுயகட்டுப்பாட்டுடன் செய்திகளை வெளியிடுகின்றனர்.

வெளிச் சக்திகளின் அழுத்தம் காரணமாக ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலுக்கு நேர்மையாகச் செயற்படுவதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ்வாறான சுயகட்டுப்பாடுகள் சமூகத்தின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் அழுத்தங்களை செலுத்தும்.

ஊடகவியலாளர்கள் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இலங்கை ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கி வரும் சவால்கள் தற்காலிகமானதாக அமையும் என்பதே தமது எதிர்பார்ப்பு - என்றார். (சி)

# இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஆஸியிடம் கோரிக்கை

## அந்நாட்டு கத்தோலிக்க அமைப்பு விடுப்பு

கொழும்பு, மார்ச் 9

இலங்கையின் மனித உரிமை மீறல் கள் தொடர்பில் கடுமையான நடவடிக் கையை மேற்கொள்ளுமாறு ஆஸ்திரேலிய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

ஆஸ்திரேலிய, பிரிஸ்பேனில் உள்ள கத்தோலிக்க நீதி மற்றும் சமாதான ஆணைக் குழு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் விலக்கிக் கொண்டமையை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் நிறைவேற்று அலுவலர் பீட்டர் ஆன்ட், இது தொடர்பில் தெரிவிக்கையில், இலங்கை, உண்மை மற்றும் ஜனநாயக விழுமியங்களை இழந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் மேற்கத்தைய நாடுகளுடன் இணைந்து ஆஸ்திரேலியாவும், இலங்கையின் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் கடும் தொனியில் குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (சி)

# நாடு கடந்த தமிழீழ அரசு குறித்த அச்சமே நிருபமா ராவின் இலங்கை விஜயம்

## சிங்களப் பத்திரிகை தகவல்

நாடு கடந்த தமிழீழ அரசிற்கு சர்வதேச ரீதியில் கிடைக்கக் கூடிய அங்கீகாரத்தைத் தடுப்பதற்கு உடனடியாக இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதே சிறந்த வழி எனக் கருதும் இந்தியா, அதற்காகவே நிருபமா ராவை அவசரமாக இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது என லங்காதீப சிங்கள நாளிதழ் தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து செயற்படும் வி.உருத்திரகுமாரனின் தலைமையில் எடுக்கப்பட்டு வரும் நாடு கடந்த தமிழீழ அரசு குறித்து உன்னிப்பாக அவதானித்து வந்த இந்தியா, இந்தக் கட்டமைப்பை தகர்ப்பதற்கு இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமே உகந்த வழியாக்க் கருதுகிறது எனவும் அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



முடிந்துவிட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். காலை நேரத்தில் கசப்பான அனுபவங்களையும் மாலை நேரத்தில் மனதிற்கு இனிய அனுபவங்களையும் எதிர் கொள்ளலாம். சிலருடன் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்துவீர்கள். உங்களுக்கு வாக்குக் கொடுத்தவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம்.

### இடபம்



தேக ஆரோக்கியக் குறைபாடுகளால் அவதிப்படலாம். எதிர்பார்த்த பணவரவுகள் முழுமையாகக் கிடைக்காமல் பாதி கிடைக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். காலையில் வந்த வரவுகள் மாலையில் செலவாகும் நாள். பயணங்களில் தடை, தாமதங்கள் ஏற்படலாம்.

### மிதுனம்



நண்பர்கள் சிலரின் செலவில் உங்களின் தேவைகள் பூர்த்தியாகலாம். விட்டுப் போன உறவினர் ஒருவர் உங்களை மீண்டும் தொடர்புகொண்டு பேசலாம். மற்றவர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் வகையிலான விடயங்கள் நடக்கலாம். புதிய உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம்.

### கடகம்



பல நாள்களாக வராமல் இருந்த பணவரவுகள் வரலாம். தொழில் ரீதியாகப் புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகள் தள்ளிப்போகலாம். சிலர் மீது கொண்டிருந்த அவநம்பிக்கை நீங்கி பாசம் அதிகரிக்கும். பெண்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். பொறுப்புகள் கூடும் நாள்.

### சிங்கம்



வெளிவட்டாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். கடனாக வாங்கிய பணத்தை உடனே திரும்பக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். உடன் பிறப்புக்கள் தொடர்பான விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது.

### கன்னி



தொழில் விடயங்களில் மிகுந்த கண்டிப்புடனும், நாணயமாகவும் நடந்து கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். நன்றி மறந்த சிலரை எண்ணி வேதனை அடைவீர்கள். பழைய கடன் பாக்கி ஒன்றை வசூலிப்பீர்கள். கணவன், மனைவி இடையே சிறு சண்டை, சச்சரவு ஏற்படலாம்.

### துலாம்



பெற்றோர் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். பல நாள்களாக முயற்சித்தும் முடியாத காரியம் ஒன்று இன்று எளிதாக முடிவுக்கு வரும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். உங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி உறவினர் ஒருவருக்கு தேவையான காரியத்தைச் செய்து கொடுப்பீர்கள்.

### விருச்சிகம்



நீண்ட நாள்களாக சந்திக்காமல் இருந்த நெருங்கிய சொந்தம் ஒன்றை இன்று திடீரெனச் சந்திக்கலாம். வரவு ஒன்றை எதிர்பார்த்து செலவு செய்வீர்கள். சிலர் உங்களின் தலையில் வேலைகளை சுமத்திவிட்டு அவர்கள் தப்பித்துக் கொள்ளலாம். பண விடயம் அல்லது வேறு விஷயங்களுக்காக மற்றவர்களிடம் வாக்குவாதம் செய்யலாம்.

### தனுசு



எந்தக் காரியத்தையும் தயங்காமல் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். தொல்லை கொடுத்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன் வருவர். உங்களின் பெருமையான செயற்பாடு ஒன்றை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். நிலம், பூமி விவகாரங்களில் நினைத்தது நடப்பது தள்ளிப்போகலாம். சில விடயங்களை நினைத்துப் பயம் கொள்வீர்கள்.

### மகரம்



வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் வழியில் மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். வியாபாரிகள் அகலக்கால் வைக்காமல் எதிலும் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். வீட்டுக்கு வரும் உறவினர்களை உபசரிக்க கணிசமான பணத்தைச் செலவிடலாம்.

### கும்பம்



உறவினர்களின் எதிர்பாராத சந்திப்பு நிகழும். அரசு காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். வெளிவட்டாரத தொடர்புகள் விரிவடையலாம். சிக்கலில் தவிக்கும் நண்பர் ஒருவருக்கு சரியான உதவி ஒன்றைச் செய்வீர்கள். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். குரு வழிபாடு குதூகலம் தரும்.

### மீனம்



தொட்ட காரியங்கள் துளிர்விட்டு வளரும் நாள். உறவினர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். அல்லது உதவி கேட்பீர்கள். கைமாத்தாக கொடுத்த பணம் திரும்பவரும். உங்களின் வேலை ஒன்றை நண்பர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் தொந்தரவுகளுக்கு ஆளாகலாம்.

## மனித உரிமை யாழ்.அலுவலகத்திற்கு தினமும் வந்து போகும் காணாமற்போனோர் உறவினர்

### தமக்கு விடிவு இல்லையே என அவர்கள் புலம்பல்

யாழ்ப்பாணம், மார்ச் 9

கடந்த 95ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடாநாட்டில் காணாமற்போனோரின் உறவினர்கள் தினமும் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் கண்ணீரும் கம்பலையுமாகக் காணப்படுகின்றனர்.

காணாமற் போனோரின் விவரங்களைக் கண்டறிவதற்கு குழுக்கள், சங்கங்கள் எனப் பல்வேறு அமைப்புகள் உருவாக்கப்பட்ட போதும் இதுவரை தமக்கு எந்தவிதமான பதிலோ, விடிவோ கிடைக்கவில்லையென்றும் காணாமற் போனோரின் உறவினர்கள் கவலையுடன் புலம்புகின்றனர்.

தற்போது மீள்குடியேற்றம், நலன்புரி நிலையங்களில் இருந்து மக்கள் விடுவிப்பு, தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிப்பு போன்ற நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஆனால் காணாமற் போனோரின் விடயம் தொடர்பாக இதுவரை எவரும் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் அது தொடர்பாக எந்தவித முன்னேற்றகரமான செயற்பாடுகளும் இடம்பெறவில்லையென்றும் உறவினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடக்கின் வசந்தம், அபிவிருத்தி என்று பல்வேறு செயற்பாடுகள் குடாநாட்டில்நடைபெற்று வருகின்றபோதும் எமதுஉறவினர்களைக் கண்டுபிடித்துத்தர எவரும் முன்வரவில்லை என்று அவர்கள் கண்ணீர் சிந்தி [illegible] (ஓ-29)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 ✱ 08 ✱ 1947



உதிர்வு 29 ✱ 02 ✱ 2008

### அமரர் நடராசா தங்கராசா

(சட்டத்தரணி J.P.U.M)

திதி: நவமி (09.03.2010)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! குன்றா மணி விளக்கே!
அன்பின் உறைவிடமே! அறிவின் பொக்கிசமே!
ஊர் போற்றும் உத்தமரே எங்களை எல்லாம் வாழ வைத்த தெய்வமே!
உங்களை நினைக்கையிலே எங்கள் நெஞ்சம் குமுறுதப்பா!
உள்ளம் வேகுதப்பா உங்கள் அன்பிற்காய் மனம் ஏங்கித் தவிக்குதப்பா!
நிலையில்லா இவ்வுலகில் நிலையானது வாழ்வு என்று எண்ணி
வாழ்ந்திட்டோம் ஆகையினால் உங்கள் பிரிவுதனை ஏற்க எங்கள்
மனம் மறுக்குதப்பா உங்கள் ஆசைதன்னை நிறைவேற்றி
வைப்போமப்பா ஈராண்டு என்ன ஈராயிரமாண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எங்களை விட்டகலாது
உங்கள் வழிகாட்டலில் என்றும் வாழ்வோமப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திப்போம்.

சாரையடி,
புலோலி தெற்கு, புலோலி.

என்றும் உங்கள் நினைவுடன்
(95587) குடும்பத்தினர்.


## வீரச் செயல் விருது மகாஜன மாணவிக்கு

தேசிய மாணவர்களுக்கான வீரச் செயல் விருது 2009ஆம் ஆண்டுக்கான விருது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் சாரணிய மாணவி வைஷ்ணவி வெற்றிவேலுக்கு கிடைக்கவுள்ளது.

இவருக்கான விருது எதிர்வரும் 19ஆம் திகதி இசுருபாய பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சின் அரங்கில் வைத்து வழங்கப்படவுள்ளது. இவருடன் இப்பாடசாலையின் சர்மி நிருபாகரன், தர்மிகா ஆனந்தமோகனகிருஷ்ணன், கார்த்திகா யோகேந்திரன் ஆகியோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ஓ-6:55)


## யாழ்ப்பாணம் மாநகர சபை கேள்வி அறிவித்தல்-2010

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை மேற்கொள்வதற்காக 'இக்ராட்' நிர்மாண பயிற்சி நிறுவனத்தில் பதிவுள்ளதுடன் யாழ்.மாநகர சபையில் ஒப்பந்தகாரராக பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

பதிவு செய்ய வேண்டிய இக்ராட் தரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசி திகதி: 17.03.2010 பி.ப. 3 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி : 25.03.2010 நண்பகல் 12 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 25.03.2010 பி.ப. 2 மணி

கீழ்க்காணும் கட்டணங்களைச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும் கேள்விப் படிவங்களைப் பூரணப்படுத்தி அரக்கு முத்திரை இடப்பட்டு இரு பிரதிகளில் வேறு வேறான கடித உறைகளில் வைக்கப்பட்டு 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என முகவரி இடப்பட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு முன்னர் அதாவது 25.03.2010 இல் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அதற்கெனச் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் வேலைப்பகுதி அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | மீளளிக்கக்கூடிய கேள்விவைப்புப் பணம் | மீளளிக்க முடியாத கேள்விப் பத்திரக் கட்டணம் (வற்உட்பட) |
|---|---|---|---|
| 1. Renovation of Passaiyoor Market. | M 5 | 20000/- | 2016/- |
| 2. Repairs of Roof and Floor at New Market, Jaffna. | M 5 | 20000/- | 2016/- |
| 3. Renovation and Repairs of Roof at Gurunagar Market. | M 5 | 10000/- | 1120/- |

05.03.2010 (565573)

திருமதி யோ.பற்குணராசா
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவினருக்கான ஆண், பெண் இருபாலருக்குமான பிரிவுகளில் கரப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனான சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியினருக்கு வலிகாம உடற்கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா வெற்றிக்கேடயம் வழங்குவதினைப் படங்களில் காணலாம். (9-23)

## கோப்பாய்ப் பிரதேச செயலக வி.கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி

கோப்பாய்,மார்ச் 9

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவின் பதிவு செய்யபட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக கோப்பாய்ப் பிரதேச செயலர் சி.ஏ.மோன்றாஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆண், பெண் இருபாலாருக்குமான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் எல்லே போட்டிகள் 27, 28 ஆம் திகதிகளில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (6-121)

## நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிச் சம்பியனானது சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான எல்லே போட்டியில் நாணயச் சுழற்சி மூலம் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

போட்டிக்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் ஓட்டங்கள் எதனையும் பெற்றுக் கொள்ளாததால் தலா 15 பந்து வீச்சுக்கள் வழங்கப்பட்டன. அதில் இரு அணிகளும் தலா மூன்று ஓட்டங்களைப் பெற்றதால் நாணயச் சுழற்சி மூலம் வெற்றி தோல்வியை நிர் ணயிக்க முடிவு செய்யப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றுச் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம் முதலிடத்தையும் மட்டுவில் வளர் மதி விளையாட்டுக்கழகம் இரண்டா மிடத்தையும் பெற்றன.

பெண்களுக்கான எல்லே போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் முதலிடத்தையும் கைதடி நவபுரம் நவசக்தி விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தையும் பெற்றன. (04-207)

## இணுவில் பொதுநூலகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், மார்ச் 9

இணுவில் பொது நூலகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் திருக்குமரன் விளையாட்டுக் கழகம், அரியாலை யுனைற்றெட் விளையாட்டுக் கழகம் ஆகியன இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இதன் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணுவில் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகுப் பணிப்பாளர் க.கணேசநாதன், சிறப்பு விருந்தினர்களாக ஜனசக்தி காப்புறுதி நிறுவன உதவி முகாமையாளர் ப.சுதாகரன் மற்றும் 'டயலொக்' தொலைத்தொடர்பு நிலைய யாழ்.கிளை முகாமையாளர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (04-9)

## எல்லே, வலைப்பந்தாட்டப் போட்டிகளில் அபாரமாக ஆடித் தம்பாட்டி காந்திஜி வி.க.சம்பியன்

ஊர்காவற்றுறை, மார்ச் 9

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் வருடாந்த பெரு விளையாட்டுக்கள் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன. இதில் முதல் போட்டியாக எல்லே போட்டி நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற எல்லேப் போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும் மெலிஞ்சிமுனை விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இறுதிப் போட்டியில் இரு அணிகளும் முழு வீச்சில் தமது ஆட்டத்தை வெளிப்படுத்தின. ஆனாலும் சிறப்பாக ஆடிய தம்பாட்டி காந்திஜி அணி இப்போட்டியில் வெற்றிபெற்று பிரதேச சம்பியனானது.

இதே நேரம் வலைபந்துப் போட்டியில் அரை இறுதிக்குத் தெரிவாகிய அனலைதீவு அருணோதயா விளையாட்டுக் கழகமும் கரம்பொன் ஞானஒளி விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் அனலைதீவு அருணோதயா வி.கழகம் வெற்றி பெற்றது.

இன்னொரு அரை இறுதிப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும் ஊர்காவற்றுறை றேஞ்சறஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் இலகுவாக வெற்றியீட்டியது. இதன்மூலம் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும் அனலைதீவு அருணோதயா விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியீட்டி பிரதேச வலைப்பந்தாட்டச் சம்பியனாகியது. (04-325)

### வடமாகாண ஆளுநர் வெற்றிக்கிண்ணம்

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் அபாரமாக ஆடி மன்னார் கல்வி வலய அணிசம்பியனை வென்றது

வலி.வடக்கு, மார்ச் 9

வடமாகாண ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வட மாகாண கல்வி வலயங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மன்னார் கல்வி வலய அணி வெற்றி பெற்றுச் சம்பி யனாகியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வலிகாமம் கல்வி வலய அணியும் மன் னார் கல்வி வலய அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி நான்கு நிமிட நேரத்திலேயே மன்னார் கல்வி வலய அணி மிகவும் இலகுவாக ஒரு கோலைப் பெற்றுக் கொண்டது. பலம் பொருந்திய அணியாகக் கருதப்பட்ட வலிகாமம் கல்வி வலய அணி இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு இடையில் மீண்டும் ஒரு கோலை மன்னார் கல்வி வலய அணி பெற்றுக்கொண்டது.

தொடர்ந்தும் இடைவேளைக்குப் பின்னர் மேலும் இரண்டு கோல்களை மன் னார் கல்வி வலய அணி அடித்ததால் அந்த நான்கு கோல்கள் பெற்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாம்பாதி ஆட்டத்திலும் மேலும் ஒரு கோலை மன்னார் அணி பெற்றுக் கொண்டது. வலிகாமம் கல்வி வலயத்தினருக்கும் கோல்கள் பெறும் சந்தர்ப்பங்கள் பல கிடைத்த போதிலும் அதனை அவர்கள் உரிய முறையில் பயன்படுத்தத் தவறியமையால் இதுவரை கோல்கள் எதனையும் அவர்களால் பெறமுடியவில்லை. இந்நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது. ஆட்ட நிறைவில் மன்னார் கல்வி வலய அணி 05:00 என்ற கோல் கணக்கில் வலிகாமம் கல்வி வலய அணியை வீழ்த்தி வட மாகாண ஆளுநர் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது. (04-23-86)

## 9 ஆவது ஷோடோன் காரத்தேப் போட்டியில் யாழ்.வீரர்களுக்கு தங்கம், வெள்ளிப் பதக்கங்கள்



யாழ்ப்பாணம், மார்ச் 9

ஒன்பதாவது ஷொடோகன் சர்வதேச காரத்தேப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு வீரர்கள் தங்கம், வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

இப்போட்டி கடந்த மாதம் 12, 13 ஆம் திகதிகளில் மாத்தளை கங்கா ஸ்விமிங் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதில் 50 கிலோ நிறைப் பிரிவில் போட்டியிட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த செ.சசிகுமார் முதலிடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கம் வென்றார்.

13 வயதுக்குட்பட்டோருக்கிடையிலான போட்டியில் பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவன் செ.தமிழ் செல்வன் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார். (50-6)






'நெஸ்லே' நிறுவன அனுசரணையுடன் சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுக்களின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. வலைப்பந்தாட்டப் போட்டிகளில் ஆண்கள், பெண்கள் அணிகள் ஆடுவதை முதலிரு படங்களிலும் கூடைப்பந்தாட்டத்தில் ஈடுபடும் பெண்கள் அணியை இறுதிப் படத்திலும் காணலாம். (தென்னவன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொன்சேகாவை விசாரிக்கும்
# இராணுவ நீதிமன்றத்தின் விவரம் இன்று தெரியும்?

கொழும்பு, மார்ச் 9

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை விசாரிக்கவுள்ள இராணுவ நீதிமன்றத்தில் இடம்பெறப் போகின்றவர்களின் பெயர், விவரங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று செவ்வாய்க்கிழமை அறிவிப்பார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

இராணுவத்தால் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை விசாரிப்பதற்கான இராணுவ நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளவர்களின் பெயர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று அறிவிப்பார் என்ற எதிர்பார்ப்பு வெளியாகியுள்ளது.

வெள்ளிக்கிழமை இது தொடர்பான உயர்மட்டக் கூட்டமொன்று பல மணி நேரமாக இடம்பெற்றது.

புலனாய்வு அதிகாரிகள் மற்றும் அரசின் சட்ட ஆலோசகர்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் பொன்சேகா விற்கு எதிரான சாட்சியச் சுருக்கம் மற்றும் குற்றச் சாட்டுகள் பற்றி ஆராயப்பட்டது எனத் தெரிகின்றது.

முக்கியமாக இந்த இராணுவ நீதிமன்றத்தில் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் இடம்பெறவேண்டுமா அல்லது முப்படையைச் சேர்ந்தவர்களும் இடம்பெறலாமா என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

சரத் பொன்சேகா மீது இராணுவச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்படவுள்ளதால் இராணுவ நீதிமன்றில் அவரது பதவித் தரத்திற்கு ஒப்பானவர்களால் அவர் விசாரிக்கப்பட வேண்டும் எனச் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

இதேவேளை, இராணுவ நீதிமன்றத்தில் முப்படையைச் சேர்ந்தவர்களும் இடம்பெறலாம் எனவும் சிலர் இந்தக் கூட்டத்தில் வாதாடினர். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைத் தாக்கிய கடற்படை வீரர் விஜயமுனி சில்வா முப்படையினரை உள்ளடக்கிய இராணுவ நீதிமன்றத்தாலேயே விசாரிக்கப்பட்டார் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினர். (அ-சி)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியில் வசிக்கும்
மணிராஜா-கலாஜினி தம்பதியினரின்
செல்வப் புதல்வன்

### அஸ்வத்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (09.03.2010) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.



இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பிரான்சில் வசிக்கும் சித்தப்பா மற்றும் மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள் ஆகியோர் இறைவன் அருள்பெற்றுப் பல்கலையும் கற்றுச் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

இல 12, யமுனா வீதி,
நல்லூர்.

தகவல்:
சு.கண்ணன்
(சித்தப்பா-பிரான்ஸ்)

(95661)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சின்னையா சின்னம்மா

தோற்றம் 05.05.1925 — மறைவு 24.02.2001

திதி: நவமி [09.03.2010]

ஆண்டுகள் ஒன்பது
சென்றாலும்
உங்கள் நினைவுகள்
என்றும் மறையாது

(95660)

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
இராசரத்தினம் குடும்பம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆசிய அபிவிருத்தி வங்கி, மைக்ரோசொவ்ட் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட மென்பொருளாக்கப் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தையும், தேசிய மட்டத்தில் திறமைச் சித்தியையும் (Merit) பெற்ற எமது வித்தியாலய ஆசிரியர்

### திரு.செ.கமலக்கண்ணன்

அவர்களைப் பாராட்டுவதோடு அவர் மேலும் வாண்மைச் சிறப்புக்களை எய்த வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்.

(சி/565581)

### மேய்ச்சல் நிலங்களின்றி அலையும் கால்நடைகள்

கோப்பாய், மார்ச் 9

வலி. கிழக்குப் பிரதேசங்களில் தற்போது விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்பு அதிகரித்துள்ளதால் கால் நடைகளின் மேய்ச்சல் நிலங்கள் குறைவாகவே உள்ளன.

தற்போது நீடிக்கும் வரட்சியான கால நிலையின் காரணமாக எஞ்சியுள்ள தரிசு நிலங்களிலும் புற்கள் காய்ந்து அழிவடைந்துள்ளன.இதனால் கால்நடைகள் மேய்ச்சல் நிலங்களைத் தேடி அலைந்து திரிவதாகவும் சில வேளைகளில் விளை நிலங்களுக்குள் உட்புகுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இன்னும் சில நாள்களில் நெல் அறுவடை வேலைகள் பூர்த்தியானதும் கால்நடைகளை மேய்ச்சலுக்காக விடக்கூடிய நிலை தோன்றுமென கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். (50-72)

### மானிப்பாய் மக்கள்வங்கிக் கிளை கணனி வலையமைப்பில்

யாழ்ப்பாணம், மார்ச் 9

மக்கள் வங்கியின் மானிப்பாய்க் கிளையில் பதிவுகள் யாவும் தற்போது கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன என்று மக்கள் வங்கியின் மானிப்பாய்க் கிளை முகாமையாளர் எஸ்.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கியின் மானிப்பாய்க் கிளை ஆரம்பிக்கப்பட்டு குறுகிய நாள்களில் அதிகூடிய வாடிக்கையாளர்கள் இணைந்துள்ளனர்.

எனவே வாடிக்கையாளர்களின் நன்மை கருதிப் பதிவுகள் யாவும் கடந்தவாரம்முதல் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (50-04-9)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

உசன், மிருசுவிலைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் நேற்று (08.03.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலம்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, வினாசித்தம்பி,செல்லத்துரை, சிவஞானவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தெய்வானைப் பிள்ளை, செங்கமலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுபேந்திரன், காலஞ்சென்ற சுபேந்திரவதனி மற்றும் பிறேமவதனி ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்வரதி, துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதர்சினி, செல்வகுமார், நந்தகுமார், அஜந்தகுமார், கேதீஸ்குமார், கேதினி, துவாரகன், துளசிகா, கஜானன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2010) மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசன் ஈச்சங்காட்டு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன், மிருசுவில். (95659)

தகவல்:
சுபேந்திரன் (மகன்).

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள GC XXXX இலக்கமுடைய ஆட்டோ விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776675176

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
### மின்பிறப்பாக்கியொன்றை வாடகைக்கு அமர்த்துவதற்கான விலைகோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 25ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் 26,27,28-03.2010 ஆகிய திகதிகளில் முற் பகல் 9 மணி முதல் பிற்பகல் 6 மணிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தினமும் 5 அமர்வுகளாக நடத்துவதற்கு உத்திதேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வைபவத்திற்குப் பயன்படுத்துவதற்காக குறைந்தது 200 KVA மூன்று அவத்தை மின்பிறப்பாக்கி இயக்குநர்களுடன் வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

25.03.2010 அன்று முற்பகல் சுமார் ஒன்றரை மணிநேர பரீட்சார்த்த மின்விநியோகம் உட்பட அமர்வுகள் நடைபெறும் நேரங்களில் (ஒரு அமர்வுக்கு முன்ஆயத்தம் உட்பட ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம்) மின்சாரம் வழங்குவதற்கு மின்பிறப்பாக்கி இயக்கப்படும் ஒவ்வொரு மணித்தியாலத்துக்குமான தொகையினை எழுத்தில் குறிப்பிட்டு கூறுவிலையினை 15.03.2010 அன்று முற்பகல் 10 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியவாறு 'பதிவாளர், யாழ்ப்பாணப் பல்லைக்கழகம், த.பெ.இல 57, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு கூறுவிலையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா பத்தாயிரம் (ரூபா 10,000) செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு இணைக்கப்பட வேண்டும்.

மேலதிக விவரங்கள் ஏதாவது தேவைப்படின் யாழ்ப்பாண பல்கலைக்கழக வேலைகள் அத்தியட்சகர் (மின்சாரம்) அவர்களிடமிருந்து (தொலைபேசி 021-222-6516) அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த.பெ.இல. 57,
யாழ்ப்பாணம். (சி/565576)

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.



பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பான்ட் வாத்திய அணிவகுப்பை முதல் படத்திலும், இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்விவலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.நடராஜா கைலாகு கொடுத்து வரவேற்கப்படுவதையும், அருகில் விருந்தினர்களான சுவிஸ் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் எஸ்.மோகன், இளைப்பாறிய அதிபரும் எழுத்தாளருமான சபா அருள் சுப்பிரமணியம், நகர அபிவிருத்தி அதிகாரசபை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திருமதி கவிதா ஜீவகன் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும், சபா அருள் சுப்பிரமணியம் பாடசாலை அதிபர் திருமதி சி.சிவராஜாவிடம் அன்பளிப்பினை வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம்.
(படங்கள்: குமரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சகவேட்பாளரும் ஊடகவியலாளருமான எஸ்.ஸ்ரீகஜன் ஆகியோர் உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# எப்போதும் மக்களோடு மக்களாக நின்று அவர்களின் துன்ப, துயரங்களில் பங்கேற்று வருபவர்கள் நாமே

## சுதந்திரக்கூட்டமைப்பின் வேட்பாளர் சொல்கிறார்



யாழ்ப்பாணம்,மார்ச்9

எமது மக்களுடனேயே தங்கியிருந்து அம்மக்களின் துன்ப துயரங்களில் நாம் பங்கேற்று வருவதால் ஏனைய அரசியல் கட்சிகளிலிருந்து எமது கட்சி வேறுபட்டது.

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளருமான எம்.சந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோண்டாவில் குட்செட் வீதியில் உள்ள வளர்பிறை சனசமூக நிலையத்தில் அப்பகுதி மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடும்போது இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது சக்தியையும் மீறி எமது மக்களின் நலன் சார்ந்து உழைத்து வருகின்றார். யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அவர் மேற்கொண்டு வருவதுடன் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகள் உட்பட எமது மக்களின் தேவைகளை அவர் படிப்படியாகப் பூர்த்திசெய்தும் வருகின்றார்.

எமது கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அமைச்சின் ஊடாக இதுவரையில் யாழ். குடாநாட்டு மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளமையை எமது மக்கள் நன்கு அறிவார்கள்.

ஏனையவர்களைப் போல் தேர்தல் காலங்களில் மாத்திரம் எமது மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்கு நாம் இங்கு வருவதில்லை. தொடர்ந்து எமது மக்களுடனேயே தங்கியிருந்து அம்மக்களது துன்ப துயரங்களில் நாம் பங்கேற்று வருவதால் ஏனைய அரசியல் கட்சிகளிலிருந்து எமது கட்சி மாறுபட்டது என்றும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்திரி அலென்ரின் உதயன், நல்லூர் பகுதி அமைப்பாளர் ரவீந்திரன், வளர்பிறை சன சமூக நிலையத்தின் தலைவர், செயலாளர் உட்பட பலர் உரையாற்றினர். (1)

## தேர்தலின் பின்னர் பொது எதிர்க்கட்சி கூட்டமைப்பு

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலின் எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து பொதுக்கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டீ லால்கந்த தெரிவித்துள்ளதாக ரிவிர பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தலின் பின் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக முன்னணி உள்ளிட்ட பல கட்சிகள் ஒன்றிணைய திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறு எதிர்க்கட்சிகள் அன்னத் சின்னத்தில் ஒன்றாக இணைந்து போட்டியிட்டனவோ அவ்வாறே எதிர் காலத்திலும் செயற்பட திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேர்தலின் பின் பொதுவான இணக்கப்பாடு எட்டப்படுவதற்கான சாத்தியம் அதிகம் என ஐக்கிய தேசியக் கட்சியின் கிரேஷ்ட தலைவர் ஒருவரும் உறுதிப்படுத்தியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது

## உங்கள் வாக்கு சிங்களவருக்கே; அம்பாறையில் சுவரொட்டிகள்

அம்பாறை,மார்ச்9

அம்பாறை மாவட்டத்தின் சிங்களப் பகுதியில் மாத்திரமல்லாது தமிழ் பகுதியிலும் உங்களது வாக்குகள் சிங்களவருக்கே என்ற வாசகம் தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தமிழ் பிரதேசமாக இருந்த அம்பாறை மாவட்டம் பெருமெடுப்பில் சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்ட குடியேற்ற திட்டங்கள் மூலம் சிங்களமயமாக்கப்பட்டு வருவதாகக் குற்றம்சாட்டப்படுகிறது.

# தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தமையால் எனது கணவர் மகேஸ்வரனின் உயிர் பறிக்கப்பட்டது

## அவர் விட்டுச்சென்ற பணியைத் தொடரவே நான் போட்டியிடுகிறேன் என்கிறார் விஜயகலா



யாழ்ப்பாணம்,மார்ச்9

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு சேவை செய்து தமிழ்மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தமையினால் எனது கணவரின் உயிர் பறிக்கப்பட்டது. அவரின் சேவையையும் அவர் விட்டுச் சென்ற பணியையும் தொடர்வதற்காகவே நாடாளுமன்றம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனின் துணைவியாரும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் இடம்பெற்றது.

ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருக்க க.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக்குருக்கள் ஆசி உரை வழங்கினார். அவரது துணைவியார், விஜயகலா மகேஸ்வரனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இந்தக் கூட்டத்தில் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தமை வருமாறு-

இன்று எனக்கு கிடைத்த கௌரவம் எனது கணவரின் சேவைக்கு கிடைத்த பரிசாகக் கருதுகிறேன்.

எனது கணவர் எமது மக்களுக்கு சேவை செய்து தமிழ் மக்களின் நல்வாழ்விற்காக குரல் கொடுத்தமையால் அவரது உயிர் பறிக்கப்பட்டது. அவரது சேவையையும் அவர் விட்டுச்சென்ற பணியையும் தொடர்வதற்காகவே நான் நாடாளுமன்றம் செல்லமுன்வந்துள்ளேன்.

காரைநகருக்கும் குடாநாட்டுக்கும் எனது சேவை என்றுமே தொடரும். இத்தகைய சேவையின் மூலம் கணவரின் கனவை நனவாக்குவதே என்னுடைய நோக்கமாகும். எனவே எனது முயற்சிக்கு பூரண ஒத்துழைப்புத் தருவீர்கள் என எதிர்பார்க்கிறேன். - என்றார்.

(50-250)




# அரசியல் வங்குரோத்து நிலையை ரவூப் ஹக்கீம் அடைந்துவிட்டார்

## அமைச்சர் பௌசி தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்9

அரசியல் வங்குரோத்து நிலையை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அடைந்துள்ளார் என்றும் அதனால்தான் அவர் தேர்தலில் போட்டியிடும் மாவட்டங்களை அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்கிறார் என்றும் பெற்றோலிய வள அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி கூறினார்.

கொழும்பு மகாவல் கேந்திர நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறுகையில்-

ரவூப் ஹக்கீம் தேர்தலில் [illegible]ட்டியிடும் மாவட்ட மக்களுக்கு சேவை [illegible]ரிவதில்லை. அதனால்தான் அவர் அ[illegible]கடி வெவ்வேறு மாவட்டங்களில் போட[illegible]ிட வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இதனை முஸ்லிம் மக்கள் இப்போது நன்குணர்ந்துள்ளார் ரவூப் ஹக்கீம் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது இதுவே கடைசி முறையாகவும் இருக்கலாமென்றும் அமைச்சர் கூறினார். (50)

# திகாமடுல்லவில் மு.காவின் [illegible]பத தக்கவைக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் அப்துல் றஸாக் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 9

முஸ்லிம் காங்கிரஸை மீள இழுத்து நிறுத்தவேண்டிய தேவையுள்ளது. கட்சியின் தலைமையின் மீது பல்வேறு விமர்சனங்களும் - குற்றச்சாட்டுகளும் வெளியிடப்படுகின்ற போதிலும் அதனைக் களைவதற்கான நேரம் இதுவல்ல. நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகவே திகாமடுல்லவில் முஸ்லிம் காங்கிரஸின் இருப்பைப் பாதுகாக்க முடியும்.

- இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கே.எம்.அப்துல் றஸாக் தெரிவித்தார்.

மருதமுனை கடற்கரை வட்டத்திற்கு சென்ற வருகை தந்த அவர், அங்கிருந்தவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கூறியவை வருமாறு:-

நான் கிழக்கு மாகாண அமைச்சுப் பதவியை எடுக்கப்போவதாகவோ, முஸ்லிம் காங்கிரஸை விட்டு வெளியேறியதாகவோ கூறும் கருத்துகளில் உண்மையில்லை. தலைவர் ஹக்கீம் திகாமடுல்லவில் போட்டியிடப் போவதாகச் சொன்னபோது நான் அதனை மனமுவந்து ஏற்றுத்தான் போட்டியிடுவதிலிருந்து விலகினேன். இதன் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களால் எனக்கும் தலைமைக்குமிடையே கருத்து மோதல்கள் ஏற்பட்ட போதிலும் கட்சியை விட்டு விலகவில்லை. தேர்தலொன்றில் குதித்து கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது நாம் அவ்வாறு செய்வது நம்பிக்கைக்குத் துரோகமானது.

கட்சியில் உள்ள முன்னெடுப்புகளில் மாற்றங்களைச் செய்து அதனைப் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு. நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் ஊர் ஊராகச் சென்று அப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதில் அனைவரும் கைகோக்க வேண்டும். - என்றார். (10 - 260)

# கிழக்கில் சூடு பிடிக்கும் தேர்தல் பிரசாரம்!

## விருப்புவாக்குகளை பெறுவதில் ஒரே கட்சிக்குள்ளும் முரண்பாடு உச்சம்

மட்டக்களப்பு,மார்ச்9

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் தேர்தல் செயலகத்தினால் வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன.

வேட்பாளர்கள் தமது விருப்பு இலக்கங்களை முன்னிலைப்படுத்தி பிரசார நடவடிக்கைகளை மிகத்தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். இதனால் ஒரே கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கிடையில் விருப்புவாக்குகளைப் பெற்றுக்கொள்வதில் போட்டி மனப்பான்மை ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கிழக்குமாகாண முஸ்லிம் பகுதிகளைப் பொறுத்தவரையில் இருமுனைப்போட்டி நிலவுகின்றது. பிரதானமாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றியைச் சின்னத்திலும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசிய முன்னணியிலும் முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை, தமிழ் பிரதேசங்களில் பல முனைப் [illegible] கத் தெரிவி[illegible] தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி சார்பாகவும் தமிழ்வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளதால் இப்பகுதியில் பலமுனைப் போட்டி நிலவுவதாக கூறப்படுகின்றது.

இம்முறை கிழக்கு மாகாணத்தில் அதிகளவான சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்ற போதிலும் சுயேச்சைக்குழு வேட்பாளர்கள் எவரும் பிரசாரப்பணிகளை ஆரம்பிக்கவில்லை. அரசியல்கட்சி பெரும் [illegible]சுயேச்சைக்குழுக்கள் பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் சக்தி வாய்ந்த புலம்பெயர் தமிழ்ச் சமூகம் மேற்குலகின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்றது

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ 'தெகல்கா' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி



விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக நிதி வசதியில் முன்னிலையில் உள்ள சக்தி வாய்ந்த புலம்பெயர் தமிழ் சமூகம் மேற்குலகத்தின் நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன என இலங்கையின் பாதுகாப்புச் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ச இந்தியாவில் இருந்து வெளிவரும் தெகல்கா சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

அதன் முழு வடிவம் வருமாறு:

**கேள்வி:** குறிப்பாக எந்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அரசு பொன்சேகாவை கைது செய்துள்ளது?

**பதில்:** அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை என்னால் கூறமுடியாது, ஏனெனில் அது தொடர்பான பட்டியல் இராணுவத்தரப்பால் தயாரிக்கப்படுகின்றது. அவர்கள் அதற்கான விதிகளை பின்பற்றி வருகின்றனர். அது சட்டவாளர்களின் பணி.

**கேள்வி:** அதாவது அவருக்கு எதிராக குறிப்பிடத்தக்க குற்றச்சாட்டுக்கள் இல்லை எனில் இது ஒரு தனிப்பட்ட நடவடிக்கை என அமையாதா?

**பதில்:** இல்லை, சேவையில் இருந்தபோது எமது இராணுவத்திற்கு பொன்சேகாவினால் மேற்கொள்ளப்பட்ட சேதம் குறித்து பெரும்பாலான மக்களுக்கு தெரியாது. அதன் மூலமே அவர் அரசியலில் பிரவேசித்துள்ளார்.

**கேள்வி:** அவர் அரசியலை விட்டு விலகியிருக்க வேண்டுமா? நீங்கள் கூறும் சேதம் என்ன?

**பதில்:** ஜனநாயகத்தில் அவருக்கும் உரிமை உண்டு. ஆனால் அவர் தனது பதவியை தவறாக பயன்படுத்தியுள்ளார். மூன்று சம்பவங்கள் அவரின் இந்த செயற்பாடுகளை மறைத்துள்ளன. அதாவது, அவர் போரை வழி நடத்தியவர், இரண்டாவது அவர் இராணுவத் தளபதியாக பதவி வகித்தவர், மூன்றாவது அவர் ஜனாதிபதி தேர்தலில் மகிந்தவை எதிர்த்து போட்டியிட்டதனால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பவை தான் அவை. ஆனால் உண்மை என்னவெனில் இராணுவத்தை அரசியல் மயப்படுத்தி அதனை அவர் சீரழித்துள்ளார்.

நாம் இந்தியாவின் காலாச்சாரத்தை பேணுவதில் பெருமை கொள்கிறோம், அங்கு இராணுவம் நடுநிலமை கொண்டது. ஆனால் அந்த நடைமுறை பொன்சேகாவினால் மீறப்படும் போது நடவடிக்கை எடுப்பதை தவிர வேறு வழிகள் இருக்கவில்லை.

**கேள்வி:** ஒரு போர் வீரனாக, அவருக்கு பல ஆதரவுகள் உள்ளன, அவை தான் அவரை போட்டியிட தூண்டின இல்லையா?

**பதில்:** அவர் இராணுவத்தில் இருந்து உரியமுறையில் விலகி, அரசியலில் பிரவேசித்திருக்கலாம். ஆனால் அவர் அதிகார ஆசைக்காக தனது பதவியை பயன்படுத்தி அவருக்கு தேவையான தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார். பாதுகாப்பு பிரிவின் பிரதம அதிகாரியாக இருந்தபோதும், இராணுவத்தளபதியாக இருந்தபோதும் அவர் அதனை மேற்கொண்டுள்ளார். அவர் தனது விடுதியை அரசியல் பணிகளுக்கும், இராணுவத்தின் வளங்களை அரசியல் தேவைகளுக்கும் பயன்படுத்தியிருந்தார்.

**கேள்வி:** எந்த வகையான அரசியல் செயற்பாடுகள்? ஏன் அவர் அப்போது கைது செய்யப்படவில்லை?

**பதில்:** அவர் படைகளின் பிரதம அதிகாரியாக இருந்தபோது தளபதிகளுடனும், மூத்த அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார். தனக்குரிய பணிகளை மேற்கொள்ளுமாறு அவர் படையினரை கேட்டிருந்ததாக முறைப்பாடுகள் உண்டு.

நாம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்காது விட்டால் அது இராணுவத்தினருக்கு ஒரு தவறான வழிகாட்டலாக அமைந்துவிடும். ஒரு நடுநிலையான இராணுவத்தை பேணுவது எமது கடமை. இந்தியாவும் அவ்வாறே பேணிவருகின்றது. அல்லது அது அழிவடைந்துவிடும்.

**கேள்வி:** படைச் சிப்பாய்களை தவறாக பயன்படுத்தினார் பொன்சேகா என தெரிவித்திருந்தீர்கள் அது தொடர்பில் மேலதிக தகவல்களை தர முடியுமா?

**பதில்:** இளம் படையினரும், தரநிலை குறைந்த இராணுவச் சிப்பாய்களும் வீதித் தடைகளில் நிறுத்தப்படும் வாகனங்களில் உள்ள மக்களிடம் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கோரிக்கைகளை விடுத்திருந்தனர். இராணுவத்தின் முன்னாள் தளபதி தேர்தலில் போட்டியிட்டதால் பெருமளவான படையினர் குழப்பமடைந்திருந்தனர். இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களிடமும் ஆதரவுகளைப் பெற அவர் முனைந்திருந்தார். அவர்களுக்கு அடைக்கலமும் வழங்கியிருந்தார்.

இராணுவத்தினரிடையே ஆய்வுகளை மேற்கொண்டு தேர்தல் வெற்றி தோல்வி தொடர்பில் கருத்துக்களையும் அவர் திரட்டியிருந்தார். அவர் தளபதியாக இருந்த போதும் அதனை மேற்கொண்டிருந்தார். அதனை நாம் அறிந்த போது, அதில் ஈடுபட்ட 15 மூத்த அதிகாரிகளை கட்டாய ஓய்வில் அனுப்பியிருந்தோம்.

**கேள்வி:** பொன்சேகா இராணுவப்புரட்சிக்கு முயன்றதாக, அரச தலைவரை படுகொலை செய்ய முயன்றதாக வேறு ஏதாவது முக்கிய குற்றச்சாட்டுக்கள் உண்டா?

**பதில்:** நல்லது, அவை சிவில் சட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. அது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அது வேறுபட்ட நடைமுறை. ஆனால் அவர் கைது செய்யப்பட்டது, அவர் பதவியில் இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட குற்றங்களுக்காக.

**கேள்வி:** மேற்குலக ஊடகங்களும், மனித உரிமை அமைப்புக்களும் பொன்சேகாவின் கைது ஒரு பழிவாங்கும் நடவடிக்கை என தெரிவித்து வருகின்றனவே?

**பதில்:** நான் ஒன்றை தெரிந்துகொள்ள விரும்புகிறேன், அதாவது தான் அரச தலைவராக பதவியேற்றதும் மகிந்த ராஜபக்சவை சிறையில் அடைக்கப்போவதாக பொன்சேகா வெளிப்படையாக தெரிவித்தது தொடர்பில் ஏன் இவர்கள் கருத்து தெரிவிப்பதில்லை.

**கேள்வி:** இராணுவத்தில் உள்ளபோது பொன்சேகா ஊழலில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அதனை அவர் தனது மருமகன் ஊடாக மேற்கொண்டிருந்தார், ஆனால் அவர் ஏன் அன்று கைது செய்யப்படவில்லை?

**பதில்:** அது தொடர்பான விபரங்களை நாம் தற்போதே அறிந்துள்ளோம். அதனை சந்தேகநபர்கள் தெரிவித்து வருகின்றனர்.

**கேள்வி:** தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு ஒரு விரைவான தீர்வு முன்வைக்க வேண்டும், போர் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், இடம்பெயர்ந்த மக்கள் விரைவாக மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என தெரிவித்ததால்தான் அவர் தண்டிக்கப்பட்டதாக பொன்சேகாவின் ஆதரவாளர்கள் தெரிவித்து வருகின்றனர்?

**பதில்:** பெரும்பாலான ஊடகவியலாளர்கள் அதிக பயிற்சிகளை பெறவேண்டும் என நான் விரும்புகிறேன். போர் முடிந்த பின்னர் அவர் இராணுவ உடையில் இருந்த போது மேற்கொண்ட பேச்சுக்களை ஏன் நீங்கள் ஆராயவில்லை? அதன் பின்னர் அவர் வேட்பாளரான போதும் அவ்வாறு பேசியிருந்தார். அதாவது அரசியல் தலைவர்கள் அரசியல் தீர்வை முன்வைப்பதற்காக படையினர் இரத்தம் சிந்தவில்லை என அவர் தெரிவித்திருந்தார். நாம் அதனை அனுமதிக்கவில்லை. இது இராணுவத்தை அரசியல் நடைமுறைகளுக்கு எதிராக திருப்பும் திட்டமாகும்.

**கேள்வி:** வெள்ளைக்கொடிகளுடன் சரணடைந்த விடுதலைப்புலிகளை உங்களின் உத்தரவுகளை தொடர்ந்தே படையினர் படுகொலை செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளது தொடர்பில் என்ன தெரிவிக்க விரும்புகிறீர்கள்?

**பதில்:** விடுதலைப்புலிகளின் அரசியல் தலைமைப்பீடம் சரணடைய முற்பட்டது, அவர்களின் நலன்களை பாதுகாப்பதற்கே என போரின் பின்னர் பொன்சேகா தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது அவர் மறுதலையாக பேசுகின்றார். அரசியல் தீர்வு தொடர்பில் பேசுகிறார், வெள்ளைக் கொடிகளுடன் வந்தவர்களை நான் படுகொலை செய்ய உத்தரவிட்டதாக தெரிவிக்கிறார்.

**கேள்வி:** ஆனால் உண்மையில் என்ன அங்கு நடைபெற்றது?

**பதில்:** மே 18ஆம் நாள் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டார், அன்றைய தினம் விடுதலைப்புலிகளின் 200 தலைவர்கள் 400 சதுர கி. மீற்றர் பரப்பளவினுள் முடக்கப்பட்டனர். அவர்களை இராணுவம் சுற்றிவளைத்தது. அப்போது நள்ளிரவு நேரம். எனவே காட்டுப்பகுதியில் வெள்ளைக்கொடிகளுடன் வருபவர்களை அடையாளம் காண்பது கடினமானது.

எனவே பலர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. வேலுப்பிள்ளை பிரபாகரன் நந்திக்கடல் ஊடாக தப்பிச் செல்ல முற்பட்டார். அவரின் மகன் எதிர்த்திசையில் செல்ல முற்பட்டார். 10,000 விடுதலைப் புலிகள் வேறு திசையால் சரணடைந்தனர். அது ஒரு கடுமையான சமர். இராணுவத்தில் புதிதாக இணைந்தவர்களால் விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்களை இனம்காண முடியவில்லை. எனவே தான் அவர்கள் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

**கேள்வி:** மேற்குலகம் தற்போதும் போர்க் குற்றங்கள் தொடர்பல் பேசி வருகின்றது. அது தொடர்பில் உங்களின் கருத்து என்ன?

**பதில்:** எது போர்க்குற்றம் என்பது எமக்கு தெரியும். இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் பழிவாங்கும் படுகொலைகள், கடத்தல்கள், கப்பம் பெறுதல் தான் அவை. அதற்காக நாம் படையின்ரை கைது செய்து நீதியின் முன் நிறுத்தி தண்டித்துள்ளோம். எனினும் எம்மால் கட்டுப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களும் உண்டு.

உதாரணமாக, நாம் வைத்தியசாலைகள் மீது குண்டுகளை வீசியதாக அவர்கள் கூறுகின்றனர். அது வைத்தியசாலையாக அடையாளமிடப்பட்டிருந்தால் நாம் அதன் மீது குண்டு வீசினால் அது தவறு. ஆனால் நாம் அதனை மேற்கொள்ளவில்லை. இறுதிக்கட்ட போரில், விடுதலைப்புலிகள் சிறிய பகுதிக்குள் முடக்கப்பட்டிருந்தனர். எனவே வைத்தியசாலை மீது குண்டுகள் பாய்வதை தடுக்க முடியவில்லை. மேலும் இந்த நிலைமைகளில் அங்கு பொதுமக்களோ அல்லது நோயாளர்களோ இருக்கவில்லை.

**கேள்வி:** மேற்குலகம் ஏன் பொன்சேகாவை ஆதரிக்கின்றன?

**பதில்:** முதலாவதாக விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக, நிதி வசதியில் முன்னிலையில் உள்ள சக்திவாய்ந்த புலம்பெயர் தமிழ் சமூகம் மேற்குலகத்தின் நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

அவர்கள் அரசியலிலும், ஊடகத்துறையிலும் அதிக பங்கு வகிக்கின்றனர். இரண்டாவதாக மேற்குலகத்தின் சில நகர்வுகளை இலங்கை எற்றுக்கொள்ளவில்லை. மூன்றாவதாக பொன்சேகாவை ஆதரிக்கும் ஐக்கிய தேசிய கட்சி அவர்களுக்கு அதிக ஆதரவுள்ளது என்பதால் மனித உரிமை அமைப்புக்கள் போர்க்குற்ற விசாரணைகளை முதன்மைப்படுத்தி வருகின்றன.

**கேள்வி:** உங்களின் அரசு இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தொடர்பில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பொன்சேகா விமர்சித்தது தொடர்பில்?

**பதில்:** இடம்பெயர்ந்த மக்களின் விரைவான மீள்குடியேற்றத்தை ஜெனரல் பொன்சேகாவே பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் எதிர்த்திருந்தார். அது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என அவர் தெரிவித்திருந்தார். அதனால் தான் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் தாமதமாகியது.

அவர் படைகளின் பிரதம அதிகாரியாக இருந்த போது மக்களை விடுவிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அரசை விமர்சித்துள்ளார்.

**கேள்வி:** இறுதியில் என்ன நடந்தது?

**பதில்:** யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பகுதிகளை போல புதிதாக கைப்பற்றப்பட்ட பிரதேசங்களுக்கும் மக்கள் விரைவில் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படுவது பாதுகாப்பானது என விரும்பினோம், ஆனால் பொன்சேகா அதனை மறுத்தார். அதன் பின்னர் அவர்களை தற்காலிக முகாம்களுக்கு அனுப்பி வைப்பது தொடர்பில் நான் கருத்து கூறினேன்.

ஆனால் அவர்களை முன்னைய முகாம்களுக்கு இழுத்துவருமாறு பொன்சேகா தெரிவித்திருந்தார். எமக்கு வேறு நாடுகள் மற்றும் ஐ.நா போன்றவற்றிடம் இருந்து அழுத்தங்கள் தரப்பட்டது. ஆனால் பொன்சேகா பாதுகாப்பு தொடர்பில் தொடர்ந்து வாதாடினார். அதன் பின்னர் அரச தலைவர் அதில் தலையிட்டார். என்ன பாதுகாப்பு தொடர்பாக நீங்கள் பேசுகின்றீர்கள்? என அவர் கேள்வி எழுப்பினார். ஏனெனில் 300,000 மக்கள் முகாம்களில் இருந்த போதே விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் 20,000 பேர் தப்பிச் சென்றுவிட்டனர். எனவே பாதுகாப்பு என்பது எங்குள்ளது என அவர் கேள்வி எழுப்பினார். மக்களை உடனடியாக மீள்குடியமர்த்துமாறு அரச தலைவர் தெரிவித்தார்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்

நுண்கலைமாணி - சங்கீதம்/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2009/2010

தகுதிகாண் (செய்முறை) பரீட்சை

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தகுதிகாண் (செய்முறை) பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளன.

| கற்கைநெறி | பரீட்சைகள் நடைபெறும் திகதி | பரீட்சை மண்டபம் | நேரம் |
|---|---|---|---|
| இசை | 15.03.2010<br>16.03.2010<br>17.03.2010<br>18.03.2010 | இசைத்துறை விரிவுரை மண்டபம், இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார் மடம் சுன்னாகம். | மு.ப.9 - பி.ப.4 |
| நடனம் | 12.03.2010<br>14.03.2010<br>15.03.2010<br>16.03.2010 | நடேசர் அரங்கு, இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார் மடம், சுன்னாகம். | மு.ப.9-பி.ப.4 |
| சித்திரமும் வடிவமைப்பும் | 14.03.2010 | இராமநாதன் மண்டபம், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி - (சுட்டெண் 1-75)<br>கலைப்பீட மண்டபம், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி (சுட்டெண் 76-150)<br>முகாமைத்துவபீட மண்டபம், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி (சுட்டெண் 151-239) | மு.ப.9-பி.ப.3.45 |

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன. அனுமதி அட்டை அனுப்பப்பட்டவர்களது பெயர் விவரத்தை www.jfn.ac.lk என்ற இணையத்தளத்திலும் காணலாம்.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு உதவிப் பதிவாளர்/ அனுமதிகள் கிளையுடன் 021 222 6714 என்ற தொலைபேசி எண் வழியாகத் தொடர்புகொள்ளலாம்.

*பதிவாளர்*
*08.03.2010*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியில் பயங்கரப் பூகம்பம்! 48 பேர் பலி; 70 பேர் படுகாயம்!!



இஸ்தான்புல், மார்ச் 09

கிழக்குத் துருக்கியில் ஏற்பட்ட உக்கிர பூகம்பத்துக்கு 48 பேர் பலியாயினர். எழுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். பல கட்டடங்கள் தகர்ந்து தரைமட்டமாகியுள்ளன. மரணித்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அதிகாரிகள் அச்சம் தெரிவித்தார்கள்.

துருக்கியின் கிழக்குப் பகுதியிலுள்ள இலாசிக் மாகாணத்தின் கோவன்சினர் மாவட்டத்தில் இந்த உக்கிர பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.0 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என துருக்கி யின் காந்திலி பூகம்ப ஆய்வு மையம் தெரிவித்தது.

இப்பூகம்பத்தின் அனர்த்தங்களால், ஒக்குவர் யுகாரி கனட்லி, கயாலி ஆகிய கிராமங்கள் பெரிதும் பாதிப் படைந்துள் என.

கட்டட இடி பாடு களுக்குள் சிக்கி 48 பேர் பலி யாகியுள் ளனர் என கோவன் சிலர் நகர பிதா பெகீர் யனில் மாஸ் பி.பி.ஸிக் குத் தெரிவித்தார்.

கட்டட இடி பாடுகளுக்குள் இன்னும் பலர் சிக் குண்டிருக்கலாம் என அஞ்சப்படு கிறது. மீட்புப் பணியாளர்கள் முழுவீச்சில் இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். காயங்களுக்குள்ளான எழுபதுக்கு மேற்பட்டோர் வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள் என்றும் அவர் விவரித்தார்.

உக்கிர பூகம்பத்தால் பாஸ்யுத் - கரகோகன், யுகாரி கனட்லி, கயாலி ஆகிய இடங்களிலுள்ள மசூதிகளின் கோபுரங்கள் தகர்ந்து விழுந்துள்ளன. பல கட்டடங்கள் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன. நூற்றுக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந்துள்ளனர் என இலாசிக் மாகாண ஆளுநர் முயாகர் எரோல் தெரிவித்தார்.

''பூகம்ப அனர்த்தங்களால் காயமுற்றோரின் எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை. காயமடைந்தவர்களை அம்புலன்ஸ் வாகனங்கள் வைத்தியசாலைகளுக்குக் கொண்டுசெல்வதில் துரிதமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தன'' என்றும் அவர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

''மீட்புப் பணிகள் தொடர்கின்றன. இராணுவச் சிப்பாய்கள், பொலிஸார், சிவில் பாதுகாப்புக் குழுவினர் ஆகியோர் இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்'' என்றும் அவர் மேலும் விவரித்தார்.

1999 ஆம் ஆண்டு, ஓகஸ்டிலும் துருக்கியில் பெரும் பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.4 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது. இதன் அனர்த்தங்களுக்கு 18 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில்

# பாகிஸ்தானில் குண்டுத்தாக்குதல்; 11 பேர் மரணம்; 60 பேர் படுகாயம்!

இஸ்லாமாபாத், மார்ச் 09

பாகிஸ்தான் கிழக்கு நகரான லாகூரில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். அறுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீவிரவாத ஒழிப்பு சமஷ்டி புலனாய்வுத் துறை அலுவலகக் கட்டடத்தை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுதாரி, தான் செலுத்தி வந்த காரில் வைக்கப்பட்டிருந்த குண்டை வெடிக்க வைத்துள்ளார் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

காரில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்தமையால் இரு மாடிக் கட்டடம் சரிந்துவிட்டது என நிருபர்கள் தெரிவித்தார்கள். லாகூர் இந்திய எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. கடந்த ஆண்டு இந் நகரில் பல தடவைகளில் தீவிரவாதிகள் உக்கிர தாக்குதல்களை நடத்தி வந்துள்ளார்கள்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலுக்குப் பாகிஸ்தான் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அத்துடன், ''கைக்கூலிக் கொலைஞர்கள் பாகிஸ்தானின் ஸ்திரப்பாட்டைக் குலைக்க திட்டமிட்டு சதி செய்து வருகிறார்கள்'' என்றும் சாடியுள்ளது.

இக்குண்டுத் தாக்குதலால் அருகிலுள்ள பாடசாலைக் கட்டடமொன்றும் சேதமடைந்துள்ளது. இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த ஒரு தீவிரவாத இயக்கமும் உரிமை கோரவில்லை.

# கத்தரின் பிக்லோவின் 'தி ஹர்ட் லொக்கர்' 6 ஒஸ்கார் விருதுகளைத் தட்டிச் சென்றது

## சிறந்த நடிகராக ஜெ.்ப் பிரிட்ஜஸ், நடிகையாக சான்ட்ரா புல்லக் தெரிவு

வாஷிங்டன், மார்ச் 09

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஜேம்ஸ் கேமரூனின் 'அவதார்' படத்துக்கு மூன்று விருதுகள் மட்டுமே கிடைத்தன. ஆனால், கேமரூனின் முன்னாள் மனைவி கேதரின் பிக்லோ இயக்கிய, தோல்விப் படம் என்று அறிவிக்கப்பட்ட 'தி ஹர்ட் லொக்க'ருக்கு சிறந்த படம், சிறந்த இயக்கம் உள்ளிட்ட 6 விருதுகளை தட்டிக்கொண்டு போய்விட்டது.

அவதார் திரைப்படம் சிறந்த படம், சிறந்த இயக்கம் உள்ளிட்ட 9 பிரிவுகளில் இந்தப் படம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதில் சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த கலை இயக்கம் மற்றும் விஷுவல் எஃபெக்ட்ஸுக்கான விருதுகள் மட்டுமே அவதாருக்கு கிடைத்தன.

சிறந்த நடிகருக்கான விருது 'க்ரேஸ் ஹார்ட்' படத்தின் நாயகன் ஜெ.ஃப் பிரிட்ஜஸுக்குக் கிடைத்தது.

சிறந்த நடிகைக்கான விருது 'தி ப்ளைண்ட் சைட்' பட நாயகி சான்ட்ரா புல்லக்குக்கு வழங்கப்பட்டது.

சிறந்த துணை நடிகைக்கான விருது நோ நிக்கிக்கும், சிறந்த துணை நடிகருக்கான விருது கிறிஸ்டோபர் வால்ட்ஸுக்கும் வழங்கப்பட்டன.

சிறந்த இயக்கம் மற்றும் சிறந்த படத்துக்கான விருதுகள் அவதாருக்கே கிடைக்கும் என்று கூறப்பட்டு வந்த நிலையில், அவை தி ஹர்ட் லொக்கருக்கு கிடைத்தது பார்வையாளர்களை அதிர வைத்தது. ஜேம்ஸ் கேமரூன் முகத்தில் அந்த ஏமாற்றம் அப்பட்டமாகத் தெரிந்தது!

2009 ஆம் ஆண்டுக்கான ஒஸ்கர் விருதுகள் விவரம்:

சிறந்த நடிகர்: ஜெப் பிரிட்ஜஸ், படம்: க்ரேஸி ஹார்ட், சிறந்த நடிகை: சான்ட்ரா புல்லக், படம்: தி ப்ளைண்ட் சைட், சிறந்த படம்: தி ஹர்ட் லொக்கர், சிறந்த இயக்கம்: கேதரின் பிக்லோ, படம்: தி ஹர்ட் லொக்கர்.

சிறந்த துணை நடிகர்: கிறிஸ்டோபர் வால்ட்ஸ், படம்: இன்குளோரியஸ் பாஸ்டர்ட்ஸ், சிறந்த துணை நடிகை: மோநிக்கி, படம்: பிரிஸியர், சிறந்த அனிமேஷன் படம்: அப், சிறந்த கலை இயக்கம்: ரிக் கார்ட்ர் ரொபர்ட் ஸ்ட்ராம்பர்க் (கலை இயக்கம்), கிம் சின்க்ளேர் (செட் அலங்காரம்), படம்: அவதார், சிறந்த ஒளிப்பதிவு: மோரோ பியரோ, படம்: அவதார்.

சிறந்த விஷுவல் எஃபெக்ட்ஸ்: ஜோ லெட்டரி, ஸ்டீபன் ரோஸன்பாம், ரிச்சர்ட் பென்ஹேம் மற்றும் ஆண்ட்ரூ ஆர் ஜோன்ஸ், படம்: அவதார், சிறந்த டிசைனிங்: சாண்டி பாவல், படம்: தி யங் விக்டோரியா, சிறந்த விவரணச் சித்திரப் படம்: தி கோவ் (லூயி ஸியோஸ் மற்றும் பிஷர் ஸ்டீவன்ஸ்),

சிறந்த விவரணச் சித்திரக் குறும்படம்: மியூசிக் பை ப்ரூடென்ஸ் (ரோஜர் ரோஸ் வில்லியம்ஸ் மற்றும் எலினார் பர்கெட்), சிறந்த எடிட்டிங்: பொப் முராவ்ஸ்கி - கிறிஸ் இன்னிஸ், படம்: தி ஹர்ட் லாக்கர், சிறந்த வெளிநாட்டு மொழிப் படம்: தி ஸீக்ரெட் இன் தேர் ஐஸ், அர்ஜன்டைனா, இயக்கம்: ஜோன் ஜோஸ் காம்பெனல்லா.

சிறந்த ஒப்பனை: பார்னி பர்மன், மின்டி ஹால், ஜோயல் ஹர்லோ, சிறந்த இசை: மைக்கேல் ஜியாசினோ, படம்: அப், சிறந்த இசை (ஒரிஜினல் ஸ்கோர்): இசை - பாடல்: ரையன் பிங்காம் மற்றும் டி போன் பர்னட், படம்: க்ரேஸி ஹார்ட்.

சிறந்த சவுண்ட் எடிட்டிங்: போல் என்ஜோ ஒட்டோசன், படம்: தி ஹர்ட் லாக்கர், சிறந்த சவுண்ட் மிக்ஸிங்: போல் என்ஜோ ஒட்டோசன் - ரே பெக்கட், படம்: தி ஹர்ட் லொக்கர், சிறந்த ஒரிஜினல் ஸ்க்ரிப்ட்: தி ஹர்ட் லொக்கர் போல் என்ஜே ஒட்டோசன்.

சிறந்த குறும்படம்: தி நியூ டெனன்ட்ஸ், இயக்கியவர்: ஜோக்கிம் பேக் - டிவி மேக்னஸ்ஸன், சிறந்த அனிமேஷன் குறும் படம்: லோகரோமா, இயக்கம்: நிகோலஸ் ஷ்மெர்கின்.

# தேடப்பட்ட அல்குவைதா தீவிரவாதி கராச்சியில் வைத்துக் கைது

கராச்சி, மார்ச் 09

அமெரிக்காவால் தேடப்பட்டு வந்த அல்- குவைதா தீவிரவாதி அபுயாகியா முஜாகிதீன் அல்-ஆதம் பாகிஸ்தானின் துறைமுக நகரான கராச்சியில் கைதுசெய்யப்பட்டார். இவர் தொடர்பாக தகவல் கொடுப்போருக்கு ரூபா 15 கோடி பரிசு வழங்கப்படும் என ஏற்கனவே அமெரிக்கா அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் அபுயாகியா முஜாகிதீன் அல்-ஆதம். இவர் அல்-குவைதா தீவிரவாதி. அந்த இயக்கத்தின் செய்தித் தொடர்பாளராக இருப்பவர். அமெரிக்காவில் இவர் மீது பல வழக்குகள் உள்ளன. போர்ட் ஹீட் நகரில் 13 பேர் கொலை செய்யப்பட்டதில் இவருக்குத் தொடர்புள்ளது என்ற குற்றச்சாட்டுள்ளது

எனவே இவரைப் பற்றி தகவல் கொடுப்போருக்கு ரூ. 15 கோடி பரிசு அளிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்திருந்தது. இந்நிலையில், அவர் பாகிஸ்தானின் கராச்சி நகரில் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தத் தகவலை பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


MONTESSORI DIPLOMA

at MONTESSORI TEACHER PREPARATION of the US

(approved by Montessori Institute of America (MIA) as a Montessori Training Programme in Sri Lanka for levels 2 ½ to 6 years)

Level – 1 (15 days crash course) | Phase – 1 100 hours and internship of 9 months.

Internship schools in USA, Philippines, Taiwan, Korea, China, Canada, Kenya and Sri-Lanka

Course Directors

- SHARLET MC CLURKIN
  Director MTP of WA/ former President Montessori Institute of America
- DONALD R MC CLURKIN
  Master Teacher, MTP of WA
- PUSHPA ALUTHGAMAGE
  MIA Diploma(USA) AMI (Sri Lanka) Administrative Directress, MTPUS in Sri Lanka, Board Director MIA, Directress, Brilliant International School



COURSE COMMENCING SOON

KANDY, PERADENIYA, COLOMBO, NEGOMBO, JAFFNA

CONTACT : Pushpa Aluthgamage

TINYTOTS MONTESSORI
Sri Swarnajothy Mawatha, Kiribathkumbura, Peradeniya.
MONTESSORI PLUS, # 65/1, Mulgampola Road, Kandy
MONTESSORI PLUS, # 335, Colombo Road, Negombo
Telephone-081-3829236. 077 3575145
Email-mtpus@sltnet.lk / web:montessoriplus.org
MANAGING DIRECTOR, ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY, JAFFNA 0777-238300


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மும்பைத் தாக்குதல் குற்றவாளி விவகாரத்தில் பொய் கூறாதீர்!

## பாக். வெளிவிவகார அமைச்சர் மீது இந்தியா கண்டனம்

டில்லி, மார்ச் 09

மும்பைத் தாக்குதல் முக்கிய குற்றவாளி ஹபீஸ் சயீது கைது விவகாரத்தில் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர், தொடர்ந்து பொய் சொல்லி வருகின்றனமை ஆச்சரியமளிக்கிறது. இது மிகவும் கண்டனத்துக்குரியது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர், பாகிஸ்தானில் இருந்து செயற்படும் ஜமாத்-உத்-தவா என்ற தீவிரவாத அமைப்பின் தலைவர் ஹபீஸ் சயீது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான, கொடூரமான, கோழைத்தனமான தாக்குதல் நடந்ததிலிருந்து, அவரைக் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும். அவன் மீது பாகிஸ்தான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறது.

ஆனால், இந்தக் கோரிக்கையை பாகிஸ்தான் கொஞ்சம் கூட மதிக்கவில்லை.

சமீபத்தில் இந்தியா - பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர்கள் மட்டத்தில் நடந்த பேச்சின்போதும் இந்தக் கோரிக்கையை இந்தியா விடுத்தது.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா மஹ்மூத் குரோஷி, சமீபத்தில் மூல்தான் நகரத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் - ஹபீஸ் சயீதை கைது செய்ய வேண்டும் என்று இந்தியா ஒருபோதும் கோரிக்கை விடுத்தது இல்லை. கடந்த 25ஆம் திகதி இரு நாட்டு வெளிவிகாரச் செயலாளர்கள் மட்டத்தில் நடந்த பேச்சின்போது கூட, ஹபீஸ் சயீது கைது பற்றி, இந்திய வெளிவிவகார செயலாளர் நிரூபமா ராவ், பாகிஸ்தான் வெளிவிவகார செயலாளர் சல்மான் பஷீரிடம் எதுவும் கூறவில்லை. அவர்களது பேச்சின்போது, ஹபீஸ் சயீது கைது விவகாரம் இடம்பெறவே இல்லை என்று கூறியிருந்தார்.

அவரது இந்தப் பேட்டிக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய வெளிவிகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

பாகிஸ்தான் அமைச்சரின் பொய் ஆச்சரியமளிக்கிறது. ஹபீஸ் சயீதை கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும். அவர் மீது கடுமையான நடவடிக்கையை பாகிஸ்தான் எடுக்க வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா மஹ்மூத் குரோஷி, இந்த உண்மையை மறைத்து, தொடர்ந்து பொய் சொல்லி வருகின்றமை ஆச்சரியமளிக்கிறது.

சயீதின் நடவடிக்கைகள், தொடர்ந்து இந்தியாவுக்கு எதிராக பயங்கரவாதத்தை தூண்டும் வகையில் உள்ளன. சயீது சமீபத்தில்கூட இந்தியாவுக்கு எதிராக மேலும் வன்முறையில் ஈடுபடும்படி - கலகம் உண்டாக்குகின்ற வகையில் - விஷம் கலந்த - நஞ்சு கக்குகிற அளவுக்கு கொடூரமான அறிக்கை ஒன்றை விட்டார்.

பாகிஸ்தானில் சுதந்திரமாக இயங்கிக் கொண்டு, அவன் இவ்வாறு பயங்கரவாத செயல்களில் ஈடுவதைக் கண்டித்தும் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவரைக் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர் சல்மான் பஷீரிடம், இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிரூபமா ராவ் கேட்டுக் கொண்டார்.

காட்டுமிராண்டித்தனமான, கொடூரமான, கோழைத்தனமான, பயங்கரமான மும்பை தாக்குதலை பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்தியதிலிருந்தே இந்தக் கோரிக்கையை இந்தியா விடுத்து வருகிறது. மும்பைத் தாக்குதலுக்கு சயீதுதான் முக்கிய காரணகர்த்தா. அவர்தான் மூளையாகச் செயற்பட்டு அந்தத் தாக்குதலை நடத்தச் செய்தார் என்பதற்கான போதிய ஆதாரங்கள், சாட்சியங்கள் அடங்கிய தொகுப்பு ஒன்று கடந்த (2009) ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி பாகிஸ்தானிடம் இந்தியா ஒப்படைத்தது.

கடந்த 25ஆம் திகதி நிரூபமா ராவ், பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளருடன் நடத்திய பேச்சின்போதும், ஹபீஸ் சயீதுதான் முக்கிய குற்றவாளி என்பதற்கான மேலும் ஆதாரங்கள் - சாட்சியங்கள் அடங்கிய தொகுப்பு ஒன்றையும் அளித்தார் - என்றார்.

# கடல் ஆமைகளைப் பாதுகாக்கச் செய்மதி: முதுகில் கருவி பொருத்திக் கண்காணிப்பு!



சென்னை, மார்ச். 09

கடல் ஆமைகள், விசைப்படகுகளின் அடியில் சிக்கிப் பலியாவதைத் தடுக்க, அவற்றைச் செயற்கைக்கோள் உதவியுடன் கண்காணிக்கிறார்கள். ஒரு கடல் ஆமையின் முதுகில் விசேட கருவியை பொருத்தி அதை கடலில் விட்டனர்.

'ஆலிவ் ரிட்லி' என்ற அபூர்வ வகையைச் சேர்ந்த கடல் ஆமைகள், தமிழக கடலோரப் பகுதிகளில் அதிகமாக உள்ளன. இவை இனப்பெருக்க காலத்திலும், முட்டையிடும் பருவத்திலும் கடலில் இருந்து கரைப்பகுதிக்கு வருகின்றன. அப்போது, இவற்றின் நடமாட்டத்தை அறியாமல் விசைப்படகுகள் இயக்கப்படுவதால், அப்படகுகளின் அடியில் சிக்கிக் கடல் ஆமைகள் இறந்து விடுகின்றன.

இதைத் தவிர்க்கும் வகையில், கடல் ஆமைகளைச் செயற்கைக்கோள் உதவியுடன் கண்காணித்து பராமரிக்கும் திட்டத்தை 'ட்ரீபவுண்டேசன்' என்ற தொண்டு நிறுவனம் தொடங்கியுள்ளது.

இதன்படி, சென்னை ஈஞ்சம்பாக்கம் கடற்கரையில், செயற்கைக்கோளுடன் இணைக்கப்பட்ட ஜி.பி.ஆர்.எஸ். கருவியை ஒரு 'ஆலிவ் ரிட்லி' கடல் ஆமையின் முதுகுப்பகுதியில் பொருத்தி, கடலுக்குள் விட்டனர். இந்த ஜி.பி.ஆர்.எஸ். கருவி, பிரான்சு நாட்டின் செயற்கைக் கோளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

கடல் ஆமை, நீருக்குள் இருந்து வெளியே வரும்போதெல்லாம், ஜி.பி.ஆர்.எஸ். கருவியில் இருந்து செயற்கைக்கோள் சிக்னல்களைப் பெற்றுக் கொண்டு, ஆமையின் இருப்பிடத்தைத் தெரிவிக்கும்.

மேலும், ஆமை எந்தெந்த வழியில் நடமாடுகிறது, என்ன சாப்பிடுகிறது என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

இந்த கடல் ஆமை, முட்டையிடுவதற்காக கடற்கரைக்கு வரும்போது, அது எந்தப் பாதையில் வருகிறது என்பதை செயற்கைக்கோள் உதவியுடன் தெரிந்து கொண்டு, அந்தப் பாதையில் விசைப்படகுகளை இயக்க வேண்டாம் என்றோ, இயக்கினாலும் கவனமாக நடந்து கொள்ளுமாறும் அறிவுறுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், விசைப்படகுகளின் அடியில் சிக்கி கடல் ஆமை உயிரிழப்பதை தவிர்க்கலாம் என்று கருதப்படுகிறது.

## இந்தியச் செய்திகள்

# மன்மோகன், சோனியா வருகையால் இலங்கை அகதிகள் வெளியே செல்லத் தடை!

சென்னை, மார்ச் 09

பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி ஆகியோரின் வருகையால் மண்டபம் முகாமிலுள்ள இலங்கை அகதிகளுக்கு 3 நாள்கள் வெளியேசெல்லத்தடைவிதிக்கப்பட்டுள்ளது. தமிழக புதிய சட்டசபை கட்டடத் திறப்பு விழா சென்னையில் வரும் 13 ஆம் திகதி நடக்கிறது. இவ்விழாவில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

தலைவர்கள் வருகையையொட்டி தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. குறிப்பாக கடலோர மாவட்ட பகுதியில் 24 மணி நேரமும் பொலிஸார் உஷார் நிலையில் உள்ளனர்.

இதேபோல் மண்டபம் முகாமில் உள்ள அகதிகள் 11, 12, 13 ஆகிய 3 நாள்கள் வெளியே செல்லத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

# சட்டரீதியான எந்தத் தவறும் செய்யவில்லை; விரைவில் மக்கள் முன் நேரில் தோன்றுவேன்

## நித்தியானந்தா பரபரப்பு பேட்டி

சென்னை, மார்ச் 09

சட்ட ரீதியான எந்தத் தவறையும் நானும், தியான பீடமும் செய்யவில்லை என்றும், விரைவில் மக்கள் முன்தோன்றி நேரில் விளக்கம் அளிப்பேன் - என்றும் நித்தியானந்தா தெரிவித்தார்.



நடிகை ஒருவருடன் நித்தியானந்தா நெருக்கமாக இருப்பது போன்ற படக்காட்சிகள் தனியார் தொலைக்காட்சியில் கடந்த வாரம் வெளியானது.

இது குறித்து தியான பீடத்தின் சார்பில் மறுப்பு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. இருப்பினும், குற்றச்சாட்டுகளுக்கு ஆளான நித்தியானந்தா எங்கு இருக்கிறார் என்பது புதிராகவே இருந்தது.

இந்நிலையில், நித்யானந்தா வாரணாசியில் கும்பமேளா நிகழ்ச்சியில் பங்கேற்க தனது குருவான பாபாஜியுடன் சென்றிருக்கிறார் என அவரது சட்டத்தரணி ஸ்ரீதர் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறினார்.

மேலும், தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நித்யானந்தாவின் விளக்கம் அடங்கிய சி.டி. ஒன்றையும் அவர் செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

அந்த சி.டியில் நித்தியானந்தா பேசியவை வருமாறு -

கடந்த சில நாள்களாக என் மீதும், தியான பீட சங்கத்தின் மீதும் பல குற்றச்சாட்டுகளும் வதந்திகளும் தொடர்ந்து பரப்பப்பட்டு வருகின்றன என்பது உங்களுக்கு தெரியும் என்றும் நினைக்கின்றேன்.

அதேநேரத்தில் உலகம் முழுவதிலும் இருந்தும் பக்தர்கள், அன்பர்கள் எல்லோரிடம் இருந்து கடிதங்கள், தொலைபேசி அழைப்புகள், மின்னஞ்சல்கள் மூலம் மிகப்பெரிய ஆதரவையும் அன்பையும் பெற்று வருகின்றேன்.

எனது செய்திகளாலும், தியானத்தின் மூலமும் பலனடைந்த பக்தர்களுக்கும், அன்பர்களுக்கும் இந்த வதந்திகளும் குற்றச்சாட்டுகளும் மிகவும் கவலை அளிப்பனவாக உள்ளன.

உங்கள் எல்லோருக்கும் ஒரு விடயத்தை ஆணித்தரமாகவும் அழுத்தமாகவும் தெரிவிக்க விரும்புகிறேன். சட்ட ரீதியாக எந்தத் தவறையும் நானோ, தியான பீடமோ செய்யவில்லை. குற்றச்சாட்டுகள், வதந்திகள் சார்ந்த எல்லா உண்மைகளையும் நாங்கள் திரட்டிக் கொண்டிருக்கிறோம்.

இந்த வதந்திகள், குற்றச்சாட்டுகளின் பின்னணியில் உள்ள அனைத்து காரணங்கள், அவர்களுடைய மனஅமைப்பு, பொய்கள் ஆகியவை குறித்த உண்மைகளை திரட்டிக் கொண்டிருக்கிறோம்.

இந்தக் குற்றச்சாட்டுகள், வதந்திகள் குறித்தும் மிகத் தெளிவாக விளக்கம் அளிக்கின்றேன். தயவு செய்து, இந்தக் குற்றச்சாட்டுகள் வதந்திகள் குறித்த உண்மைகளை நான் சேகரித்துக் கொண்டிருக்கும் சில நாள்கள் மட்டும் பக்தர்கள், அன்பர்கள் எல்லோரும் பொறுமையுடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா உண்மைகளையும், எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்ளாமல் எந்த முடிவுக்கும் நீங்கள் வர வேண்டாம் என மனமுருகி கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய சூழலில் எனக்கு ஆதரவாகவும் என்னுடன் இருப்பதற்காகவும் உங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

# ரஞ்சிதா தப்புச் செய்தார் என்பதற்காக நடிகைகளைத் தப்பாக நினைக்காதீர்!

## இப்படிச் சொல்கிறார் தமன்னா



எல்லா நடிகைகளையும் ரஞ்சிதா போல நினைத்துக் கொள்ளக் கூடாது. ரஞ்சிதா தப்பு செய்துவிட்டார் என்பதற்காக எல்லா நடிகைகளையும் தப்பாக நினைக்கக் கூடாது - என்று நடிகை தமன்னா கூறினார்.

கார்த்தி - தமன்னா ஜோடியாக நடித்த 'பையா' படத்தை பற்றிய அறிமுகக் கூட்டம் சென்னை வடபழனியில் உள்ள நட்சத் திர ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடந்தது.

அதில் கலந்து கொண்டு பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், நான் கோவிலுக்குப் போவேன். சாமி கும்பிடுவேன். அதோடு சரி. அளவுக்கதிகமாக ஆன்மீகத்தில் ஈடுபாடு காட்டுவதில்லை.

சில்நாள்களாக பத்திரிகைகளில் பரபரப்பாக வெளிவரும் நடிகை ரஞ்சிதா விவகாரம் பற்றி நான் கருத்துக் கூற முடியாது. இந்த உலகில் கோடிக்கணக்கான மனிதர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி. எல்லோரையும் ஒரே மாதிரி நினைக்கக் கூடாது. ரஞ்சிதா தப்புச் செய்து விட்டார் என்பதற்காக மற்ற நடிகைகளை தப்பாக நினைக்கக்கூடாது - என்றார்.

சூர்யா, கார்த்தி சகோதரர்கள் இருவருடனும் நடித்துள்ளீர்களே. இவர்களில் யார் உங்களுக்கு வசதியாக இருந்தார் என்ற கேள்வியை செய்தியாளர்கள் கேட்க, சற்று நேரம் யோசித்த தமன்னா -

அயன் படத்தில் சூர்யாவுடன் முதன் முதலாக ஜோடி சேர்ந்து காதல் காட்சிகளில் நடித்தேன். அவருடன் நடிப்பதற்கு முன்பே நான் அவருடைய ரசிகை. முதன் முதலாக அவருடன் நடிக்கும் போது எனக்கு கொஞ்சம் பதற்றமாகவே இருந்தது. ஆனால் கார்த்தி அப்படியல்லர். அவர் எப்போது பார்த்தாலும் தமாஷ் செய்து மற்றவர்களைச் சிரிக்க வைப்பார். அதனால் அவருடன் நடிக்கும்போது பதற்றமில்லை. காதல் காட்சிகளில் நடிக்கும் போது சௌகரியமாகவே இருந்தது. சூர்யா, கார்த்தி இரண்டு பேருமே 'நைஸ்' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி யாழ்.நகர்மைய றோட்டறக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று இடம்பெற்ற போது கழகத்தின் பெண் உறுப்பினர்கள் இரத்ததானம் செய்வதைப் படங்களில் காணலாம்.

# மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்த நிருபமாராவ் வலியுறுத்து!

## இந்தியத் தரப்பில் வெளியான அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 09

இலங்கையில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை முழுமையாக மீளக்குடியமர்த்தும் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டுமென இந்தியா எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான தனது விஜயத்தின் போது இந்திய வெளிவிவகாரச் செயலாளர்


இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் சந்தித்த போது...

நிருபமாராவ் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் எனத் தெரிவித்துள்ள இந்தியத் தூதரகம், தனது செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது, அவரின் கடந்த ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்காக அவருக்கு இந்திய வெளியுறவுச் செயலாளர் தமது பாராட்டைத் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள சகல சமூகத்தினரும் ஐக்கியத்துடனும், சமாதானத்துடனும் வாழக்கூடிய நிலைமையை உருவாக்குவதற்கான அரசியல் நல்லிணக்க முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தை தேர்தலும் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டமையும் வழங்கியுள்ளன என அவர் தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகளுக்கும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்கும் இந்தியா அளித்துள்ள குறிப்பிடத்தக்க உதவியை இலங்கை ஜனாதிபதி பாராட்டினார்.

குறிப்பாக வடபகுதிக்கான ரயில் பாதை அமைப்புத் திட்டத்திற்காக இந்தியா வழங்கியுள்ள கடனுதவியை அவர் பாராட்டினார்.

இடம்பெயர்ந்த மக்களில் இன்னமும் 70,000 பேர் முகாம்களில் உள்ளனர் எனவும், அநேகமானவர்கள் தமது சுய விருப்பத்தின் பேரிலேயே அங்குள்ளனர் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களின் நடமாட்டம் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையை வரவேற்ற இந்திய வெளிவிவகாரச் செயலாளர், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும், இதன் மூலம் அந்த மக்கள் தமது சொந்தப் பகுதிகளில் மீண்டும் வாழும் நிலையை உருவாக்க முடியும் - எனவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் தூதரக அலுவலகமொன்றை ஆரம்பிப்பது குறித்துத் தாங்கள் ஆர்வமாகவுள்ளனர் எனவும் நிருபமாராவ் குறிப்பிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## இணுவில் மஞ்சத் திருவிழா 'நேத்ராவில்' இன்று ஒளிபரப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 9

இணுவில் கந்தசுவாமி கோயில் ஜனவரி 30ம் திகதி நடைபெற்ற தைப்பூச மஞ்சத் திருவிழா நிகழ்ச்சி இன்று மாலை 5.30 மணிக்கு ரூபவாகினி தொலைக்காட்சியின் நேத்ரா அலைவரிசையில் ஒளிபரப்பப் படவிருக்கின்றது இங்குள்ள மஞ்சமே உலகிலேயே மிகப் பெரியதும் நூற்றாண்டு பழமைவாய்ந்ததும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-1-55)

## வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றம்

# யாழ்ப்பாணத்தில் இன்றும் நாளையும் மக்கள் ஆணைக்குழுவின் விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 9

1990ம் ஆண்டு வடக்கில் இருந்து விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக மக்கள் ஆணைக்குழுவின் விசாரணைகள் இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்களான ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் அப்துல் மஜீத், யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் கலாநிதி தேவ நேசன் நேசையா ஆகியோர் இந்த விசாரணைகளை நடத்த விருக்கின்றனர். இவர்கள் முஸ்லிம் மக்களின் பலவந்த வெளியேற்றம், இதன் மூலம் ஏற்பட்ட இழப்புக்கள், ஏனைய சமூகங்களுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் உள்ள உறவுகள், இம் மக்கள் மீள் குடியேற்றத்தில் எதிர்நோக் கும் சவால்கள், மீள்குடியேற்றத்தை நல்ல முறையில் முன்னெடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பல தரப்பினருடன் சந்திப்புக்களை மேற் கொள்ளவிருக்கின்றனர். அத்தோடு இந்த ஆணைக்குழுவின் இரண்டு அமர்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6 மணி முதல் இரவு 8.00மணிவரை ஆண்களுக்கும் நாளை புதன்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இரவு 8.00மணி வரை பெண் களுக்கும் 83,நாவலர்வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ் லிம் மக்களின் மத்திய நிலையமான மக்கள் பணிமனையில் நடைபெறும் என யாழ். மாநகர சபை உறுப்பினரும் மக்கள் பணிம னைத் தலைவருமான மௌலவி பி.ஏ. எஸ்.சுபியான் தெரிவித்துள்ளார். (ஒ-1)

# தேர்தல் வன்முறைகள் தொடர்பில் இதுவரை 26 பேர் கைதாகினர்!

கொழும்பு, மார்ச் 09

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக இதுவரை இருபத்தியாறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள தேர்தல் நடவ டிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக முப்பத்தியாறு முறைப்பாடுகள் இதுவரை கிடைத்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோத சுவரொட்டிகள் மற்றும் 'கட்-அவுட்'களை அகற்றும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன. இவ்வாறான சுவரொட்டிகள், 'கட்-அவுட்' களில் 75 வீதமானவற்றை ஏற்கனவே அகற்றிவிட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுத்தேர்தல் தொடர்பான வன்முறைகளின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்துச் செல்வதாகத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக இதுவரை தமக்கு 24 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என 'கபே' எனப்படும் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்புக் குறிப்பிடுகின்றது.

வார இறுதியில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள், சட்டவிரோத பிரசார நடவடிக்கைகள் என்பன நாடெங்கிலும் இடம்பெறுகின்றமையை அவதானிக்க முடிவதாக 'கபே' அமைப்பின் ஊடக இணைப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மாவட்டங்கள் பலவற்றிலும், நகரங்களிலும், கிராமப்புறங்கள் உள்ளிட்ட சகல பகுதிகளிலும் சட்டவிரோத பதாதைகளையும் சுவரொட்டிகளையும் காணக்கூடியதாக உள்ளது என அவர் தெரிவித்தார்.

இத்தகைய தேர்தல் சட்ட மீறல்களே வன்முறை அதிகரிப்புக்குக் காரணமாக அமைகின்றன எனவும் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)

# இராணுவ நீதிமன்றின் விசாரணை அடுத்த சில நாள்களில் ஆரம்பம்

## பொன்சேகா மீது ஐந்து குற்றச்சாட்டுகள்

கொழும்பு, மார்ச் 09

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இராணுவச் சட்டத்தின் கீழ் ஐந்து குற்றச்சாட்டுகளுக்காக விசாரிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அவர் அடுத்த சில நாள்களில் இராணுவ நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டது.

இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க இணையத்தளங்களுக்கு இந்தத் தகவலைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவச் சட்டத்தின் கீழ் ஐந்து குற்றச்சாட்டுகளுக்காக விசாரணை செய்யப்படுவார். இராணுவச் சட்டத்தின் கீழ் பொன்சேகாவிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பான சாட்சியச் சுருக்கத்தைப் பெறும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்து விட்டன.

இதனைக் கடந்த வாரம் இராணுவத் தளபதியிடம் அதிகாரிகள் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சாட்சியச் சுருக்கத்தை இராணுவத்தின் சட்டப் பிரிவு ஆராய்ந்து வருகின்றது.

பொன்சேகாவிற்கு எதிராக இராணுவச் சட்டத்தின் கீழ் ஐந்து குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற்கான ஆரம்பக்கட்ட ஆதாரங்கள் உள்ளன.

இராணுவத் தளபதி அடுத்த சில நாள்களுக்குள் இராணுவ நீதிமன்றத்தை அமைப்பார்.

சரத் பொன்சேகாவிற்கு எதிரான சாட்சிய சுருக்கங்களைப் பெறும் நடவடிக்கைகள் 22 நாள்களுக்குள் பூர்த்தியாகியுள்ளன. 22 இராணுவத்தினர், [illegible] அதிகாரிகள் மற்றும் ஆறு பொதுமக்களிடமிருந்து இவை பெறப்பட்டுள்ளன. - என்றார். (சி)

# பிரதேச செயலகங்களை மெருகூட்டத் திட்டம்

யாழப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், நகரை அழகுபடுத்துதல் என்ற செயற்றிட்டத்திற்கான முன்மொழிவுகளை பிரதேச செயகலம், உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகக் கோரியுள்ளது. கிராம சேவகர்கள் இதற்குரிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அலங்கார வளைவுகள், சிறுவர் பூங்கா, நீச்சல் தடாகம் ஆகியவை அமைத்தல், பாரம்பரியம் கூறும் நினைவுச் சின்னங்களை மெருகூட்டிப் பராமரித்தல் போன்ற முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதாக அறிய முடிகிறது. (1-ரி-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்துறைப் படிப்பகம்
ஸ்ரீநகர சபை, யாழ்ப்பாணம்



# தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வாக்குகளை சிதறடிக்கப் பல வழிகளில் முயற்சிக்கிறது அரசு!

## பா.அரியநேத்திரன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 09

''வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்கில் அரசு பலவித முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது''.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கூறினார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கூறியவை வருமாறு:-

பிரதேச செயலகங்களில் ஒழுங்கு செய்யப்படும் சமுர்த்தி அபிவிருத்திக் கூட்டங்களில் திடீரென புகும் அரச தரப்பு வேட்பாளர்கள் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இது தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும்.

அதேவேளை, ஆலய நிர்வாக உறுப்பினர்களை அரச தரப்பு வேட்பாளர்கள் தத்தமது வீடுகளுக்கு அழைத்து 'உங்களுக்கு ஜனாதிபதியின் ஊடாக கோயிலுக்கு நாம் நிதி வாங்கித் தருவோம்'- எனக்கூறி வருகின்றார்கள்.

இன்னொரு தரப்பு நாம் உங்கள் ஊரவன்; நாம் உங்களின் உறவுக்காரன் எனக் கூறி வாக்குகளை கேட்டு வருகின்றனர்.

அபிவிருத்தி என்ற மாயைக்குள் சிக்கித் தமிழ் மக்கள் வாக்களிக்காதீர்கள். அவ்வாறு வாக்களித்து வரலாற்றுத் தவறை இழைக்காதீர்கள்.

தமிழர்களின் இருப்பைத் தக்கவைப்பதற்கு தமிழர் களின் அரசியலே பலமாக இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கே உங்கள் வாக்குகளை அளியுங்கள் - என்றார்.

# கடத்தப்பட்ட இலங்கை மாலுமிகள் மீட்பு; பேச்சு நடத்த லண்டன் அதிகாரிகள் சவூதிக்கு

கொழும்பு, மார்ச் 09

சரக்குக் கப்பல் ஒன்றை இலங்கை மாலுமிகளுடன் கடத்தியுள்ள கடற்கொள்ளையர்களுக்கும் சவூதி அரேபிய நிறுவனத்துக்குமிடையில் பேச்சுகளை மேற்கொள்ளவைக்கும் நோக்கத்துடன் லண்டனில் நிலைபெற்றுள்ள காப்புறுதி நிறுவனமொன்றின் சிரேஷ்ட அதிகாரியொருவர் நேற்றுமுன்தினம் ஜித்தா சென்றுள்ளார்.

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடந்த திங்கட்கிழமை ஏடன் வளைகுடாவில் வைத்துக் கடத்தப்பட்ட சவூதி அரேபிய நிறுவனமொன்றுக்குச் சொந்தமான கப்பலில் இருந்த 14 சிப்பந்திகளில் 13 பேர் இலங்கையராவர்.

கப்பலில் சிப்பந்திகளுக்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை என்று கடல் கொள்ளையர்கள் கூறியுள்ளபோதிலும் அவர்களை விடுவிக்க எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. எனினும் காப்புறுதி நிறுவன அதிகாரியின் வருகையை அடுத்து சாதகமான நிலை ஏற்படும் என்று எதிர்பார்ப்பதாக இலங்கையின் கவுன்ஸிலர் நாயகமான சபாருல்லாகான் கூறியுள்ளார்.

கடற்கொள்ளையருடன் செய்மதித் தொலைபேசி மூலம் கப்பலுக்குச் சொந்தமான சவூதி அரேபியன் நிறுவனம் தொடர்பு கொண்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

சோமாலியக் கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலை விடுவிக்கக் கடற்கொள்ளையர்கள் 2 கோடி அமெரிக்க டொலர் பணத்தைக் கப்பமாகக் கோரி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாகரீக உடையுடன் வந்த ஆசாமி பெண்ணின் கழுத்தில் வைத்தார் கத்தி!

## கொள்ளை முயற்சி தோல்வியுறவே தப்பி ஓட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 09

நாகரீகமான முறையில் ஆடை அணிந்தவாறு பிரபலமான தொலைத் தொடர்பு நிறுவனத்தின் முகவர் என்று கூறிக்கொண்டு வீடொன்றில் புகுந்த நபர் வீட்டில் தனித்திருந்த பெண்ணில் கழுத்தில் கத்தியை வைத்து தாலிக்கொடியை கழற்றுமாறு மிரட்டினார்.

அச்சமடைந்த பெண்மணி கூக்குரலிட அந்த ஆசாமி தப்பியோடிவிட்டார்.

இந்தச் சம்பவம் சண்டிலிப்பாய் கம்மாலை வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

ஆடம்பரமான உடை அணிந்து கழுத்துப்பட்டியும் (ரையும்) கட்டியவாறு ஒருவர் வந்துள்ளார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு உள்ளே வந்துள்ளார். வீட்டில் எவரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். அதைத் தொடர்ந்து அந்தப் பெண்ணை நெருங்கிய அந்த ஆசாமி கழுத்தில் கத்தியை வைத்துள்ளார். தாலிக்கொடியை கழற்றித் தராவிட்டால் நிலைமை பயங்கரமாகிவிடும் என்று மிரட்டியுள்ளார்.

அச்சமடைந்த அந்தப் பெண் கூக்குரலிட்டுள்ளார். அதை அடுத்து அந்த ஆசாமி அங்கிருந்து தப்பியோடிவிட்டார்.

அண்மைக் காலத்தில் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் பொதுமக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும். (ஒ-9)

# பொலிஸாருக்கு எதிராக மங்கள சமரவீர அடிப்படை மனித உரிமை மீறல் மனு

கொழும்பு, மார்ச் 09

இலங்கை சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர, பொலிஸாருக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தமக்கும், தமது ஆதரவாளர்களுக்கும் எதிராகச் செயற்பட்டமை, பொலிஸாரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைபாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமை மற்றும் தம்மை நிராகரித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த மனுத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில், பொலிஸ் மா அதிபர், தென் மாகாண பிரதி பொலிஸ் அதிபர், மாத்தறைக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி, மாத்தறை பொறுப்பதிகாரி, கும்புருபிட்டிய பொலிஸ் துறை அதிகாரி மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரை எதிர்க்கட்சிகளாக சுட்டிக்காட்டியுள்ளார்.

2008ஆம் ஆண்டு தாம் எதிர்க்கட்சிக்கு மாறியபோதும், இலங்கை சுதந்திர கட்சியின் உறுப்பினராகச் செயற்பட்டு வந்தார் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கியதுடன், அவரது கட்சியின் ஊடக பேச்சாளராகவும் செயற்பட்டு வந்தமையைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மாத்தறை மாவட்டத்தின் வேட்பாளராகப் போட்டியிடும் நிலையில், தமக்கும், தமது ஆதரவாளர்களுக்கும் எதிராக பொலிஸார் செயற்படுகின்றனர்.

தமது ஏராளமான ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

### எமது உள்விவகாரங்களில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் போர்க்காலத்தின் போது மனித உரிமைகள் மீறப்பட்டது குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு உயர்மட்ட நிபுணர் குழுவை நியமிக்கப் போவதாக ஐ.நா வின் செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கூறியிருந்தது தெரிந்ததே.

அது குறித்து கருத்து வெளியிடும் போதே பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க மேற்கண்டவாறு காரசாரமாகக் கூறியிருக்கிறார்.

கந்தவான்கொட நவதோய பாடசாலையில் கணினிப் பிரிவு திறந்துவைக்கும் வைபவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு ஐ.நா. செயலாளர் நாயகத்தை எச்சரித்திருகிறார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அந்தச் சிறிய நாட்டை - சிறிய சனத்தொகை கொண்ட நாட்டை - அணு ஆயுதங்கள் இல்லாத நாட்டை ஐக்கிய நாடுகள் சபை ஆட்டிப்படைக்கப் பார்க்கிறது.

ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் மனித உரிமை மீறல்கள் நிறைய இடம்பெறுகின்றன. எனினும் அது குறித்த விசாரணை நடத்தவோ நிபுணர் குழுக்களை நியமிக்கவோ எவரும் முன்வரவில்லை.

அணு ஆயுதங்கள் இல்லாத இந்தச் சிறிய நாட்டின் மீது மனிதாபிமானமற்ற முறையில் எவரும் தலையிடுவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்பதை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் புரிந்துகொள்ளவேண்டும் - என்றார்.

### வெளிநாட்டில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போகொல்லாகம இதனைத் தெரி வித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகள் சில தமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

அரசு இது குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இந்திய அரசுடன் இது குறித்து ஆராய்ந்துள்ளோம்.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் உடனான சந்திப்பின்போது எமது இந்தக் கவலையைத் தெரிவித்தோம்.

இலங்கை தொடர்ந்தும் எச்சரிக்கையுடன் இருக்கும். இறைமையைக் காப்பாற்றுவதற்காக பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுப்போம்.

நிருபமாராவ் உடனான சந்திப்பின் போது, பயங்கரவாதம் குறித்தும் சர்வதேச ரீதியிலான விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகள் குறித்தும் நாங்கள் கொண்டுள்ள கவலையை அவருக்குத் தெரியப்படுத்தினோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

### கிழக்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் பேச்சாளர் அஸாத் மௌலானா குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி பொதுத் தேர்தலுக்கான தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நிருபமா ராவிடம் சமர்ப்பித்ததாகவும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை ஆதரிப்பதற்கும் அதன் கொள்கைகளை ஊக்குவிப்பதற்கும் சாத்தியமான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என நிருபமா ராவ் குறிப்பிட்டார் எனவும் அஸாத் மௌலானா மேலும் தெரிவித்துள்ளார்.

''நிருபமாராவ் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை முழுமையாக வாசித்தார். முதலமைச்சர் சந்திரகாந்தன் எமது கொள்கைகளைத் தெளிவு படுத்தினார். சாத்தியமான அனைத்து வழிகளிலும் இந்தியா உதவும் என உறுதியளித்த ராவ் தேர்தலுக்குப் பின்னர் புதுடில்லிக்குப் பேச்சுக்கு வருமாறு எமக்கு அழைப்பு விடுத்தார்'' - என அஸாத் மௌலானா குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இந்திய அதிகாரிகளுடனான பேச்சிற்காகப் புதுடில்லிக்குத் தாம் வருவார் என முதலமைச்சர் சந்திரகாந்தன் உறுதியளித்தார் எனவும் அஸாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

### ஐ.நா.வின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் பான்-கீ-மூன்.

ஐ.நாவில் உள்ள 'இன்னசிற்றி பிரஸ்' ஊடகவியலாளர் மத்தியூ ரசல் லீ எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நான் நடத்திய தொலைபேசி உரையாடல் மூலம் இரு தரப்புக்கும் அக்கறையாக உள்ள விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினோம்.

அரசியல் நல்லிணக்கம், இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கை மேம்பாடு, போர்க்காலத்தில் அங்கு நிகழ்ந்தாக கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புகூறுவது தொடர்பாக நாம் உரையாடினோம்.

கடந்த வருடம் நான் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது இருவரும் கலந்துரையாடிய விடயங்கள் குறித்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை என்பது குறித்து நான் கவலை கொண்டிருந்தேன். இதனை இலங்கை ஜனாதிபதிக்கு மிக துலாம்பரமாக கூறியிருந்தேன்.

போர்க்குற்றங்களுக்கு பொறுப்பு கூறும் விடயத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள், அவற்றின் தன்மைகள், தரங்கள் குறித்து எனக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழுவை நியமிப்பது தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிக தெளிவாக எடுத்துரைத்திருந்தேன். இதனை ராஜீக ரீதியில் செயற்படுத்துவதற்கு ஐ.நா.வின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் லையின் பஸ்கோவை மிகவிரைவில் இலங்கைக்கு அனுப்புவேன் என்பதையும் இலங்கை ஜனாதிபதியிடம் மிகத்தெளிவாக எடுத்துக்கூறினேன்-என்றார். (அ)

### பொன்சேகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தைத் தொடர்ந் தும் முன்னெடுத்து வருகின்றார் என்று கூறப்படுகின்றது.

தம்மைச் சந்திக்க வரும் தமது மனைவி அனோமா பொன்சேகா, தன்னுடன் எடுத்து வருகின்ற கைத் தொலைபேசி மூலமே அவர் வெளிநாட்டில் இருக்கும் தனது புதல்விகளுடன் இதுவரை உரையாடி வந்தார்.

ஆனால் அந்தத் தொலைபேசியை பொன்சேகா காவலில் வைக்கப்பட்டிருக்கும் இடத்துக்கு அவரது மனைவி எடுத்து வருவதற்குஇராணுவத்தினர்தடைவிதித்தனர்.

இதனை அடுத்து பொன்சேகா சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் குதித்தார்.

இந்நிலையில் அவர் தமது புதல்விகளுடன் பேசுவதற்காக இராணுவத் தரப்பில் ஒரு தொலைபேசி வழங்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது. ஆனால் அதனை ஏற்கவோ, பயன்படுத்தவோ பொன்சேகா மறுத்துவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

''அவர் தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். எனது கையடக்கத் தொலைபேசி ஊடாகவே புதல்விகளுடன் பேசுவேன் என அவர் தெரிவித்துவிட்டார். அவர் எவரையும் நம்பவில்லை'' - என அனோமா பொன்சேகா கூறினார். (அ-சி)

### ஜி.சீ.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயல்முறைப் பரீட்சை முடிவுகள் பெரும்பாலான மாவட் டங்களில் இருந்து இன்னமும் கிடைக்க வில்லை என்றும்-

அந்த முடிவுகள் கிடைத்து, பணிகளைப் பூர்த்தி செய்து முடிவுகள் மாத இறுதியிலேயே வெளியிடப்படும் என்றும்- மேலும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாவதாக வெளிவந்த தகவலை அடுத்து மாணவ, மாணவிகள் 'நெற்கபே'களுக்கு படையெடுத்ததை அவதானிக்க முடிந்தது. (ஒ-1)

### மரண அறிவித்தல்

#### முருகேசு மகாலிங்கம்



கோயில் வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த முருகேசு மகாலிங்கம் நேற்று (08.03.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயில்வீதி,
மல்லாகம்.

(95675)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.